437

437

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

இதழ் 7

செந்தமிழ் மாத சஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ரபீஉல்அவ்வல் மீ 1933 ஜூலை மீ

நாயக மலர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1933
MADRAS

உள்ளடக்கம்.

1, யவ்முந்நபியின் நோக்கம் ... 241

2. இறுதி நபி ... 242

3. மானுஷ்ய பரிபூர்ணராய எம்பெருமானார் (ஸல்.) அவர்களின்வாழ்க்கைச்சரிதை ... 245

4. திருவருள் தூதர் (ஸல்.) அவர்களின் சீர் திருத்த சேவைகள் ... 279

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

பாய்களின்மீது நபிபெருமானுர் (ஸல்.) திருநாமம்

சோதரர்காள்! அன்னிய மதஸ்தினர் இஸ்லாத்தின்மீது எண்ணத் தொலயாத இன்னல்களை விளைத்துவருகின்றனர்; வீண் அபவாதங்களை இஸ்லாத்தின் மீதும் அதன் திருத் தூதர் (ஸல்.) அவர்கள்மீதும் சுமத்தி வருகின்றனர். இவண் ஜப்பான் தேசத்திலிருந்து இறக்குமதியாகும் பாய்களில் நபி பெருமானுர் (ஸல்.) அவர்களுடைய திருநாமத்தை அச்சிட்டு வெளியாக்கி விட்டனர். கீழே விறித்து உட்கார்வதற்கும் நடப்பதற்கும் உபயோகிக்கக்கூடிய பாய்களில் உலக சிரேஷ்டர் அவர்களுடைய திருநாமம் பொறிக்கப்படுவது எத்தனை விபரீதக்காரிய மென்பது எளிதில் தெரிந்து கொள்ளக்கூடியதே. இதனைக் கண்ணுற்ற எந்த முஸ்லிமின் மனந்தான் சகிப்புக்கொண்டிருக்கும்! ஆகவே இச்சென்னையப்பதியின்கண் இப் பாய் வெளிவந்தவுடன் நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே 16-6-33 வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பின் மஸ்ஜிதமஅமூர் என்னும் நவ்வாப் வாலாஜாஹ் மஸ்ஜிதில்மாபெரும் மகா நாடொன்று கூட்டப்பெற்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் பாய் விற்பனை செய்பவர்களைத் தெரிந்து அதன்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன் மீது பாய் விற்பனை செய்யும் வியாபாரிகளைத் தெரிந்துகொண்டு சங்கத்தின் தூதுவக் கூட்டமொன்று போலீஸ் கமிஷனர் அவர்களிடம் சென்று அப்பாய் விஷயமான ஆக்ஷேபனைகளைத் தெரிவித்துக்கொண்டனர். இதனுல் முஸ்லிம்களுக்குள் ஏற்பட்டிருக்கும் பரபரப்பையும் ஆத்திரத்தையும் தெரிந்துகொண்ட கமிஷனர் துரை அவர்கள், உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டு அந்த பாய்களை விற்பனை செய்யக்கூடாதென்று தடையுத்தரவு செய்து விட்டனர். முஸ்லிம்களின் பரபரப்பை உணர்ந்து துரிதமாக நடவடிக்கை எடுத்து அப்பாய் விற்பனையாகாமல் தடைசெய்து விட்டதற்காக கமிஷனர் துரை அவர்களை நாம் மிகவும் பாராட்டுகின்ருேம்.

இச்சென்னையிலோ வேறு எங்காகிலுமோ அவ்வாருன பாய் விற்பனைக்கு வருமாகில், நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்திற்குத் தெரிவித்தால் உடனே அதனை தடை செய்வதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்கிருேமென்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிருேம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL 1933
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 ரபீஉல்அவ்வல் ௴ 1933 ௵ ஜூலை ௴	இதழ் 7

'யவ்முந் நபி'யின் நோக்கம்

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடைய சிறப்பு வாய்ந்த முன்மாதிரியை சகலகோடி மக்களிடையே பிரசாரஞ் செய்வதும், அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்னும் தூதை யாவருக்கும் அறிவித்துவிடவேண்டுமென்பதுந் தான் இவ்வியக்கத்தின் பிரதான நோக்கமாகும். இவ்வியக்கம் ஆரம்பமாகி இற்றைக்கு ஐந்தாண்டுகள் கடந்துவிட்டன. இதன் இறுதியில் இவ்வியக்கத்தினாலேற்பட்ட நற்பயன்கள் அளவிடப்பாலதன்று. இவ்வியக்கம் இந்தியாவின் கண்ணே ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இற்றைக்கு அரேபியா, பாலஸ்தீன், ஈஜிப்ட், இராக், பர்ஷியா, துருக்கி, அப்கனிஸ்தான், சைனா, ஜாவா, சுமாட்ரா முதலிய இடங்களிலுள்ள சகல முஸ்லிம்களும் இதனை வரவேற்று கியாதிவாய்ந்த அகில உலக இயக்கமாகச் செய்து விட்டார்கள். ஆகவே, பல்லாயிரக்கணக்கான ஸீரத் பிரசங்கங்கள் பிரதான பாஷைகளிலெல்லாம் அச்சிடப்பெற்று வினியோகிக்கப்பட்டு வருவதால் எம்பெருமானார் திருவருள்தூதர் (ஸல்.) அவர்களின் திருநாமம் உலகமுழுவதிலும் ஜொலித்துக் கொண்டிருக்கிறதென்பதிலையமில்லை.

ரபீஉல் அவ்வல்௴ 12-ந்தேதி உலகசிரேஷ்டர் (ஸல்.) அவர்கள் பிறந்த நந்நாளாகும் அத்திருநாளை இப்புண்ணிய சேவைக்கென்று ஒதுக்கிவையுங்கள்; அன்று வியாபாரம் தொழில் முதலியவைகளை நிறுத்தி இவ்வரிய சேவையிலீடுபடுங்கள்; சகல ஊர்களிலும் கெம்பீரமான ஊர் வலங்கள் நிகழ்த்தி மகாநாடுகள் கூட்டி ஸீரத் பிரசங்கத்தைப்படித்துக் காட்டி யாவருக்கும் இலவசமாய் வினியோகியுங்கள்; முஸ்லிம்அல்லாதாரும் அம்மகாநாடுகளில் கலந்துகொள்ளும்படி செய்யுங்கள். இவ்வருடத்திய பிரசங்கம் ஜனாப் மௌலானா முஹம்மது ஹபீபுற்றஹ்மான்கான்சாஹிப் ஷேர்வானி (அலீகட்) அவர்களால் வரையப்பெற்று நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதனை யாவருக்கும் படித்துக் காட்டி வினியோகஞ் செய்து பயன் பெறுவீர்களாக.



இறுதி நபி

முஹம்மத் (ஸல்.) அல்லாஹ்வின் திருத்தூதராகவும் எல்லா நபிமார்களுக்கும் இறுதியானவராகவும் இருக்கின்றார்.

அல்குர்ஆன்.

சோதரீர்!

இப்பிரபஞ்சத்தில் அநீதி, அதிக்கிரமம், கல்வியின்மை முதலிய துற்செய்கைகள் மிகைத்து நிற்குங் காலைதான் அல்லாஹ்தஆலா நபிமார்களை இப் பூ உலகின்கண் அனுப்பி வைப்பது வழக்கம். இருளிற்குப் பின் வெளிச்சம் தோன்றுவதும், இரவிற்குப் பின் பகல் வெளியாவதும் ஓர் இயற்கை சட்டமாகவே யிருந்துவருகின்றது. அத்தன்மைபோல் பொதுவாய் உலக முழுவதிலும் குறிப்பாய் அரப் நாட்டிலும் மட்டில்லாக் கெடுதிகள் பரவியிருந்தது; நற்குணம் சற்குணமென்பது குதிரைக் கொம்பாகவே காணப்பட்டு வந்தது; ஈஸா (அலை.) அவர்களது காலத்திற்குப்பின் நபி பெருமானார் (ஸல்.) அவர்களுடைய காலம்வரை ஐந்நூற்றுச் சொச்சமாண்டு தெய்வ அறிவிப்பென்னும் 'வஹீ' அருளப்படாதிருந்துவந்த காரணத்தால் தியானம், பக்தி முதலிய சத்தொழுக்கங்கள் உலகத்தினின்று எடுபட்டே போயிற்று; ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதும் ஒரு சிறு சம்பவங்களுக்காக நூற்றுக்கணக்கான வருடங்கள்வரை போர் நிகழ்த்திக்கொண்டு அநேக உயிர்களுக்குப் பழுதுசெய்து கொள்வதும் சர்வசாதாரணமாகயிருந்து வந்தது; பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, விபசாரம், சிசுஹத்தி முதலிய துற்செய்கைகள் அரப்நாட்டில் தலைசிறந்திருந்தது. சுருங்கக்கூறின், அக்கால மானிட வாழ்க்கை மிருகவாழ்க்கையைவிட மிகமிகக் கேவலமாகயிருந்ததென்றே தைரியமாய்க் கூறலாம். ஆகவே, அதுசமயம் உலகம் பரிபூர்ணமான ஓர் நபியின் வருகையை எதிர்ப்பார்த்திருந்தது. மேலும் உலகம் அந்தகாரத்தின் கடைசிஎல்லையை அடைந்திருந்ததாலும், கலகம் சச்சரவு முதலியன உலகமுவழிலும் பரவியிருந்ததாலும் சகல வகையிலும் தேர்ச்சிபெற்றவும் சகல நற்குணங்கள் அமையப்பெற்றவுமான மாபெரும் தீர்க்கதரிசி அருளப்படவேண்டியது மிகமிக ஆவசியமாகயிருந்துவந்தது. அதற்கேற்பவே, நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இறுதி நபியாகவும் எல்லா மானிடர்களுக்கும் அருட்கொடையாகவும் அனுப்பப்பட்டு, அடியிற்குறிப்பிடப்படும் திரு அத்தியாயத்தை மானிடர்களுக்கு அறிவித்து விடும்படி உத்திரவிடப்பட்டார்கள்.

ஏ ஜனங்களே! நிச்சயமாய் யான் உங்கள் யாவருக்கும் திருத்தூதராக அனுப்பப்பட் டிருக்கின்றேன் என முஹம்மதே நீர் சொல்லிவிடும். அல்குர்ஆன்.

அதற்கேற்ப நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் சகல உலகத்திற்கும் புரிந்துள்ள சீர்திருத்தத்தை உலகம் நன்கறிந்திருக்கிறதாதலின் அதனை இவண் விவரித்துக்கூற வேண்டிய அவசியமில்லை.

நபிமார்கள் அவ்வக்காலத்திற்கு வேண்டிய விஷயங்களை ஆண்டவனிடமிருந்து தூதறிவித்து வந்தார்கள். எனவே, ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்களுடைய காலத்தை சற்று கவனிப்போம்: அவர்கள் சுவனஉலகிலிருந்து இப்பூஉலகினுக்கு வந்தபொழுது ஆடை அணியவேண்டிய அவசியமேற்பட்டுவிட்டது. அவ்வமயம் ஆடை நெய்வதற்குப் பஞ்சு கிடைக்காதிருந்ததுடன் நெய்வதற்கும் தெரியாதிருந்ததால் அல்லாஹ்தஆலா மலக்குகளை அனுப்பி வைத்தான். அன்னோர் பஞ்சை உற்பத்தி செய்து நூல் திரித்து தரி ஏற்

OFFICE OF THE REGISTRAR
22 FEB 1930
MADRAS

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

'அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின்
(திரு) நாமத்தால் (நாம் இதை ஆரம்பிக்கின்ரும்).

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்.]

ஆசிரியர்:—மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் (பாக்கவீ.)

மலர் 1	ஹிஜ்ரி 1348 றமலான் மீ 1930 ஹு பிப்ரவரி மீ	இதழ் 1

...ஸலவாத்

...ணங்குவதற்கே மனிதனையும்
...க்தேன் எனும் கருத்
...கின் உட்பொரு
...ற்கு அரும்
... அந்தகாரத்
...ர் திருத்தி,
...யை ஈந்த
...வினது
...பெற
...மை

டன் வோக்கிங் மிஷனது சார்பில் அப்பத்திரிகை பிரசுரமாவதாக ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைக் காணலாம்.

இங்ஙனம் காதியானிப் பிரசாரம் செய்வதைக் கண்ட நமது நாட்டு உலமாக்களும் மார்க்க பக்தர்களும் முஸ்லிம் பத்திராசிரியர்களும் அவரைக் கண்டிக்க ஆரம்பித்தனர். கண்டிக்கவே, அவரது மாயப் பிரசாரத்தைக் கண்டு ஏமாற்றமடைந்த சிலரும் எச்சரிக்கை கொண்டு அவரை பகிஷ்கரிக்கத் தொடங்கினர்.

இதுகண்ட தாவூத்ஷா மிகச் சுறுசுறுப்பாக வேலைசெய்வதற்குத் தக்க ஏற்பாடு தேடினர். அதாவது, தத்துவ இஸ்லாம் என்ற பெயரை மாற்றி, தாருல் இஸ்லாம் என்னும் புதுப் பெயர் தமது பத்திரிகைக்குச் சூட்டினர்; உடனே, காதியானி காஜா கமாலுத்தீனை ஆசிரியப் பதவியிலிருந்து நீக்கி, தானே தனித்த ஆசிரியரானார்; நாச்சியார் கோயிலிலிருந்து மதறாஸுக்குப் பத்திரிகாலயத்தை மாற்றினர்; இத்துடன், காதியானிகளைப் பற்றிச் சிற்சில சமயங்களில் தூற்றுவதும், தனது எஜமானர்களாகிய காஜா கமாலுத்தீன், முஹம்மது அலி, M. A. LL. B. இவர்களைப் புகழ்வதும், இவர்களால் எழுதப்பெற்ற நூல்களை விசேஷமாகச் சிலாகிப்பதுமாகிய உபாயத்தைக் கடைப்பிடித்து, அவைகளைத் தமிழில் மொழி பெயர்த்துத் தன் பெயரால் அச்சிட்டு வெளியிடலானர்.

எனினும், அவர் காதியானி என்பதை நம்மவர் சந்தேகமில்லாமல் கண்டுகொண்டனர். ஆதலின், அவரை ஆதரிக்க நம்மவர் முன் வரவில்லை. உடனே அவர், தான் பக்கா சுன்னத்து வல்ஜமாஅத்துக்கார ரென்றும், இஸ்லாத்துக்காக எத்துணையோ தியாகம் செய்ததாகவும், மார்க்க சேவைக்காகவே தனது சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகத்தை விட்டுவிட்டதாகவும் பறைசாற்றி, நெற்றியிலே நீலிக்கண்ணீர் வடித்துவந்தார். பழைய கறுப்பனே கறுப்பன் என்பதுபோன்ற அவரது புரட்டுப் பிரசாரத்தை நம் நாட்டு மக்கள் முன்னரே உணர்ந்திருந்ததால், அம்மாயக் கண்ணீர் கண்டு யாரும் மனம் கரையவில்லை.

எனினும், நஞ்சிறுர்களில் சிலரோ உண்மையை உணராமல், தாவூத்ஷாவின் மாய வலைக்குள் சிக்க ஆரம்பித்தனர். உடனே அவரும் தனது பிரசாரத்தைத் தைரியமாகச் செய்யத் தொடங்கி, பல பித்அத்துக்களை மறுப்பதாகப் பாசாங்கு செய்து, நபிமார்களின் கண்ணியத்தைக் குறைத்தும், நாயகம் (ஸல்) அவர்களின் பெருமைக்குப் பங்கம் வருமாறு எழுதியும், முஃஜிஸாக்களை மறுத்தும், பத்திரிகையின் பத்திகளை நிரப்பி வரலானர். இவ்வளவு தானே?

குர்ஆன் ஷரீபுக்குத் தமிழில் தர்ஜுமாவும் வியாக்கியானமும் எழுதுவதாகக் கூறி, காதியானிகளின் உருது - ஆங்கில தப்ஸீர்களை மொழிபெயர்த்து, 'ஜவாஹிருல் புர்கான்'' என நாமம் சூட்டி அவர் வெளியிட்டார். இதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களைக் கவனித்துப் பார்க்கும்போது, ஹதீது தலீல்களை ஆதாரமாகக் கொண்டு பாரவான்களாகிய இமாம்களும் அல்லாமாக்களும் எழுதிய தப்ஸீர்களைப் புறக்கணித்தும், தமது யுக்தியைச் செலுத்தியும் எழுதி, குர்ஆன் ஷரீபின் உண்மைத் தத்துவங்களை முற்றிலும் திரித்துப் புரட்டி, காதியானிக் கொள்கைகளைப் புகட்டியிருக்கிறர் என்பது நன்கு புலனுகும். அன்றியும், அவரால் எழுதப்பட்டுள்ள இதர நூல்கள் பெரும்பாலும் ஹதீதுகளுக்கும் உண்மைச் சரித்திரங்களுக்கும் மாறுகக் காதியானிகளால் எழுதப்பட்ட நூல்களின் மொழி பெயர்ப்புக்களாகவே இருக்கின்றன.

எனவே, எதிர்காலத்தில் நமது சமூகத்துக்கும் சமயத்துக்கும் பெருந் தூண்களாக விளங்கக்கூடிய நமது வாலிபர்களிற் சிலர் அம்

மாய நூல்களைப் படித்துத் தங்களது உண்மையான ஈமானைக் கெடுத்துக்கொள்ளக் கூடும். அதனால், நம் சமூகத்திற்கும் சமயத்துக்கும் பெருந் தீங்குகள் நேருமல்லவா? ஆதலால், மார்க்க பக்தர்களான பெரியார்களும் உலமாக்களும் அதைக் குறித்து மிகவும் கவலை கொண்டு, என்னவகை தேடுவதெனக் கலந்து பேசலானார்கள். தாவூத்ஷா தன்னை காதியானி என்று பஹிரங்கமாகக் கூறிக்கொண்டிருந்தால், அவரது பிரசாரத்தை மிக சுலபமாகத் தடுத்துவிடலாம். ஆனால், அவரோ தன்னைப் பக்கா சுன்னத்து வல்ஜமாஅத்துக் காரரென்று கூறிக்கொண்டு, மறைமுகமாக காதியானிப் பிரசாரம் செய்துவருவதால், அத்திமையை அகற்ற, தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அப்பெரியார்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஆகவே, அவரது முறைகேடான பிரசாரத்தைத் தடுக்கவும், அவரால் எழுதப்பட்டுள்ள புஸ்தகங்ளில் காணப்படும் தவறான விஷயங்களை நீக்கவும், இதர மதஸ்தர்களாலும் மற்றவர்களாலும் எழுதப்படும் நூல்களிலுள்ள கெடுதிகளை நம் மக்களுக்கு எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்யவும், நம்மக்களிடையே பரவிவரும் மார்க்கத்துக்கு ஒவ்வாத பல அநாகரிகமான பழக்கவழக்கங்களை விலக்கவும், முஸ்லிம் சமூகத்திற்கு அவசியமான காரியங்களைச் செய்யவும், இஸ்லாத்தின் பாதுகாப்புக்கான காரியங்களை அவ்வப்போது இயன்றவரையில் ஆராய்ந்து ஆற்றவும், ஒரு சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானம் ஆயிற்று.

அதற்கிணங்க, சென்னை ஜியார்ஜ் டவுன் முத்தியாலுப்பேட்டை, ஜும்ஆ மஸ்ஜித் என்னும் மஸ்ஜிதெ மஃமூரில் 13-9-29ல் மகாநாடொன்று கூட்டி, சங்கமும் ஸ்தாபித்து "ஹிபாஜத்துல் இஸ்லாம்", அதாவது இஸ்லாத்தின் பாதுகாப்புச் சங்கமென நமது சங்கத்துக்கு நாமம் சூட்டப் பெற்றது.

சங்க உத்தியோகஸ்தர்

நமது சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் யார் யார் எனில்:—

சபா நாயகர்

ஆலீ ஜனாப் கான் பஹதூர், மௌலானா, மௌலவி, ஹாஜீ ஜியாவுத்தீன் முஹம்மது சாகிப் அவர்கள் (வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் நாஸிர்.)

உப சபா நாயகர்கள்

1. ஆலீ ஜனாப் மௌலானா மௌலவி முப்தி ஹாஜீ முஹம்மது தமீம் சாகிப் அவர்கள்.

2. ஆலீ ஜனாப் மௌலானா ஹாஜீ முஹம்மது பஷீஹுத்தீன் சாகிப் அவர்கள் (மதராஸ் டவுன் காஜீ).

3. ஆலீ ஜனாப் M. K. அஹ்மது ஸாலிஹ் ஆலிம் சாகிப் அவர்கள்.

4. ஆலி ஜனாப் ஸவுகார் வீ. அப்துல் ஹக்கீம் ஸாஹிப் பஹதூர் (சென்னை நகர ஷரீப்)

காரியதரிசிகள்

1. மௌலவி S. A. முஹம்மது அலீ சாகிப்.

2. ஹாஜீ A. M. K. முஹம்மது ஷரீப் மரைக்காயர்.

3. O. S. சதக் தம்பி மரைக்காயர் (கௌரவ பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட்.)

பொக்கிஷதார்

ஹாஜீ வீ. அப்துல் காதிர் சாகிப் அவர்கள்.

இந்த உத்தியோகஸ்தர்கள் உள்பட 55 பேர் நிர்வாக சபைக்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பெற்றுளர்.

சங்கத்தின் சேவை

நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் ஏற்பட்டது முதல் நாளிதுவரை ஆற்றிவந்துள்ள அரிய தொண்டுகளை அனைவரும் அறிந்து கொள்வது அவசியம். ஆதலின் அவற்றை இங்கே சுருங்கச் சொல்லி விளங்க வைப்போம். ஜனுப் தாவூத்ஷா சாகிப் செய்து வரும் காதியானிப் பிரசாரத்திற்கு மாறுகச் சங்கம் செய்துவரும் சீரிய ஊழியங்களை, சங்கத்தின் வரலாறு எனும் தலைப்பில் நேயர்கள் வாசித்திருக்கலாம். இதர சேவைகளை ஈண்டு எடுத்துரைப்போம்.

1. ஸ்ரீமான் ஹரிவிலாஸ சாரதா என்ற ஒரு ஹிந்து கனவான், இந்தியா சட்டசபையில் பால்ய விவாகத் தடை மசோதா கொண்டு வந்தார் அல்லவா? இந்தியா அரசாங்கத்தார் அதைச் சட்டமாக அங்கீகரித்து விட்டனர். அதனால், முஸ்லிம்கள் அச்சட்ட பந்தனத்தில் படவேண்டி யிருக்கிறது. அன்றியும், இஸ்லாம் மார்க்க உரிமைகளை நிறைவேற்ற முடியவில்லை; அவ்விதம், முஸ்லிம்களைத் தடுத்திருத்தல், முஸ்லிம்களின் மத உரிமையில் அரசாங்கம் தலையிடுவதாகும். இதுவே, இச்சங்கத்தினர், முஸ்லிம் தலைவர்கள், மதஸ்தாபனங்கள், உலமாக்கள் ஆகிய இவர்களின் தீர்மானம். ஆதலின், தமிழ் நாட்டில் பிரசாரஞ்செய்து, தமிழ் முஸ்லிம்களுக்கு அச்சட்டத்தினுல் மார்க்க உரிமைகள் பாதிக்கப்படுவதை இச்சங்கம் எடுத்து விளக்கிக் காட்டி வருகிறது. மேலும் இந்திய ஜமிய்யத்துல் உலமா சபையினர் அச்சட்டத்தைக் கண்டனஞ் செய்து அப்போதைக் கப்போது எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை இத்தென்னுட்டில் பிரசாரஞ் செய்து, அச்சபையுடன் நமது சங்கம் ஒத்துழைத்தும் வருகின்றது.

இந்தியாசட்டசபை மெம்பர் மியான் அப்துல் ஹை சாகிப் அவர்கள் அச்சட்டசபையில் கொண்டுவருவதாக அறிவித்த மசோதாவை ஆதரித்தும், இராஜா இரகு நந்தன பிரசாதர் என்பார் கொண்டுவரும் பசு அறுப்புத்தடை மசோதாவைக் கண்டித்தும், தென்னுட்டில் இச்சங்கத்தார் பிரசாரம் செய்து வருகின்றனர்.

பால்ய விவாகத்தடைச் சட்டம் இஸ்லாத்திற்கு விரோதமாகும் என தாவூத்ஷா முன்னம் கூறி வந்தார். இப்போதோ, இச்சங்கத்தார் அச்சட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதை அவர் உணர்ந்து, சங்கத்தின் பாலுள்ள துவேஷத்தினுல், அச்சட்டத்தை ஆதரித்துப் பிறர் எழுதும் பல கட்டுரைகளை வெளியிட்டு, அச்சட்டத்தை மகா ஜனங்கள் ஆதரிக்கும்படி தந்திரமான சூழ்ச்சி புரிந்து வருகிறுர்.

(2) சென்னை, ஒற்றவாடை நாடகக் கொட்டகையில், சீனிவாசப்பிள்ளையின் நாடகக் கம்பெனியார், அலி பாதுஷா எனும் நாடகத்தில், இஸ்லாத்தின் முக்கிய கடமையாகிய தொழுகை முதலியவைகளை மிகக் கேவலமான முறையில், பார்த்தவர் பரிகசிக்கத் தகுந்த விதமாக நடித்தும், கோஷா முறையை மிக இழிவாகக் காட்டியும், நபிமார்களின் வேஷம் தரித்தும், இன்னும் மார்க்கத்திற்கு இழிவைத் தரக்கூடிய விதமாகப் பல நடிப்புகளைக் காட்டியும் வரலாயினர். நமது சங்கத்தார் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி, அதனை நேரில் பார்த்துவரச் செய்து, அந் நாடகத்தில் உள்ள தீமைகளையும் இழிவையும் அரசாங்கத்தாருக்கு அறிவித்து, சீனிவாசப் பிள்ளை மீது நடவடிக்கையும் எடுத்துக்கொண்டனர். இதன் பயனுக, ஸ்ரீநிவாசப் பிள்ளை தமது நாடகத்தில் முஸ்லிம்களுக்கு ஆக்ஷேபகரமான விஷயங்கள் எதையும் நடிக்காமல் நிறுத்தி விடுவதாக அரசாங்கத்தாருக்கு உறுதிமொழி எழுதிக் கொடுத்திருக்கிறுர்; மேலும், சங்கத்தார் ஆக்ஷேபித்த எல்லா

விஷயங்களையும் நாடகத்தில் நடிக்காமலும் அவர் நிறுத்திக்கொண்டார்.

(3) தென்னிந்தியா ரயில்வே கம்பெனியார் வெளியிடும் யாத்ராமார்க்கம் என்னும் சஞ்சிகையின் நவம்பர்மாதப் பிரதியின் 16-ம் பக்கத்தில், நாகூர் கந்தூரி என்னும் தலையங்கத்தின்கீழ் வரையப்பட்ட வியாசத்தில், முஸ்லிம்கள் ஆக்ஷேபிக்கத் தகுந்த விஷயங்கள் காணப்பட்டன. அவைகளை நமது சங்கத்தார் ஷை கம்பெனியாருக்குஅறிவித்து, திருத்திக்கொள்ள வேண்டிய மார்க்கங்களையும் கூறினர். இதை ரயில்வே கம்பெனியார் அங்கிகரித்து, தவறை எடுத்துக்காட்டியதற்காக சங்கத்தாருக்கு நன்றி செலுத்தியதுடன், அடுத்த சஞ்சிகையில் திருத்தி வெளியிடுவதாகவும் ஒப்புக்கொண்டுளர்.

(4) சென்னை நகலிருந்து வெளியாகும் 'அமிர்தகுணபோதினி' என்ற மாதப்பத்திரிகையில், "முஹம்மது நபி அவர்களின் வைபவம்" என்ற தலைப்பின்கீழ், சிறிதுகாலமாக நபிகள் நாயகமவர்களின் கண்ணியத்திற்கு ஒவ்வாத பல பொய்யான விஷயங்கள் எழுதப்பட்டு வந்தன. அவைகளை ஷை பத்திரிகையின் சொந்தக்காரருக்கு நேரிலும், ஆசிரியருக்குக் கடிதம் மூலமாகவும் சங்கத்தார் அறிவித்தனர். சென்ற ஜனவரிமாதப் பத்திரிகையில் அதன் ஆசிரியர் அப்பிழைக்கு வருந்தி எழுதி இருக்கிறார்.

(5) சென்னை மூக்கர் நல்லமுத்துத் தெருவில் சீமைச் சாராயம் விற்பனை செய்வதற்காக அரசாங்கத்தார் லைசென்ஸ் கொடுத்திருப்பதை ஆட்சேபித்தும், இதர பல காரியங்களைப் பற்றியும் சங்கத்தார் பல வேலைகள் செய்துவந்திருக்கின்றனர்.

(6) மதுரை ஜில்லா மேலூர்தாலுக்கா நத்தம் கிராமத்தில் மாரியம்மன் கோவிலுக்கு ஒரு முஸ்லிம் டிரஸ்டியாக இருப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த சமாச்சாரம் உண்மையா, அல்லவா என்பதை விசாரித்து எழுதுவதற்காக நமது சங்கத்தார் தமது பிரதிநிதியை உடனே அங்கு அனுப்பினர். அவர் ஷை ஊருக்குச் சென்று, அப்பாஸ் ஹுஸேன் ராவுத்தர் என்ற முஸ்லிம் கனவானையும், மற்றவர்களையும் கண்டுபேசி விசாரித்து, உண்மையை அறிவித்திருக்கிறார். அது சம்பந்தமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

ஆதலால், நமது தமிழ் நாட்டில் உள்ள முஸ்லிம் சகோதரர்கள் இச்சங்கத்தை ஆதரித்து, ஆங்காங்கு துணைச் சங்கங்களையும் கிளைச் சங்கங்களையும் அமைத்து, கட்டுப்பாடாக வேலைசெய்ய முன் வருவார்களாயின், இன்ஷா அல்லா கூடியசீக்கிரம், நம் மக்களிலே சிலரிடம் பரவி இருக்கிற அநேக அனுச்சாரங்களையும் நீக்க, மிகவும் உதவியாக இருக்கும்.

பரிசீலனைக் கமிட்டி

ஜனப் தாவூத்ஷா ஸாகிப் செய்துவரும் புரட்டான பிரசாரத்தை உலமாக்களும் முஸ்லிம் பத்திராசிரியர்களும் அவ்வப்போது கண்டித்துளர். ஆயினும், அவர்களது செயலுக்கு அவர் செவிகொடுக்கவில்லை; தனது தவறுகள் இன்னின்ன என்று உலமாக்கள் எடுத்துக் கூறவில்லை என்றும், அங்ஙனம் கூறாமல் வீணே தன்னைத் தூற்றிவருகிறார்கள் என்றும், குறையை எடுத்துக்கூற முன்வரின், தான் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் என்றும், அவர்களுடன் தான் வாது புரியக் காத்திருப்பதாகவும், ஆயினும் அவ்விதம் ஒருவரும் முன் வருவதில்லை என்றும், பலவாறாக ஜனப் தாவூத்ஷா தனது பத்திரிகையில் எழுதியும், தனது பிரசங்கங்களில் கூறியும் வரலானார். அதுகண்டு, நமது சங்கத்தார், அவரது நூல்களிலும் ஜவாஹிருல்புர்கானிலும், அவரது பத்திரிகையிலும் உள்ள

தவறுகளைக் கண்டுபிடித்து, இன்னின்னவை இஸ்லாம் மார்க்கத்திற்கு நேர் விரோதம் என்று எடுத்துரைக்கப் பரிசீலனைக்கமிட்டி ஒன்றை அமைத்தனர்.

அக்கமிட்டியார் அவரது நூல்களையும், பத்திரிகைகளையும் துருவிப் பார்த்து, மார்க்கத்துக்கு முரணாக அவர் எழுதியவைகளை எல்லாம் ஒன்றுதிரட்டி, ஒரு ஜாபிதா தயாரித்து, சங்கத்தாருக்குச் சமர்ப்பித்துளர். தனது குற்றங்களைத் தனக்கு அறிவித்தால், தான் ஒப்புக்கொள்வதாக ஏற்கனவே தாவூத்ஷா தனது பத்திரிகையில் கூறியிருந்தமையால், நமது சங்கத்தார் அத் தாவூத்ஷா சாகிபுக்கு ஓர் அழைப்புக் கடிதம் அனுப்பி, முஸ்லிம்களின் பொதுஸ்தலமாகிய ஜும்ஆ மஸ்ஜிதுக்கு வந்தால், அவரிழைத்த தவறுகளை அவருக்கு நேரில் எடுத்துக் காட்டுவதாக அறிவித்தனர்; தவிர அவ்வாறு ஜும்ஆ மஸ்ஜிதுக்கு வர அவர் விரும்பாவிடின், அவருக்கு இஷ்டமான எந்த இடத்திற்கு அழைத்தாலும், சங்கத்தினர் அங்கேசென்று விஷயங்களைக் கூறி மிகவும் சமரசமான முடிவுக்குவரத் தயாராக இருப்பதாகவும், மிகவும் கண்ணியமாக அவருக்குத் தெரிவித்தனர்.

இதற்கு, அவரோ அந்த அழைப்புக் கடிதத்தை மறுத்துத் திருப்பி அனுப்பிவிட்டார். இம்மட்டோ?. "நீங்கள் யார்" என்ற தலைப்புடன் ஒரு வியாசத்தைத் தனது பத்திரிகையின் தலையங்கத்தில் மிகவும் கேவலமாக வரைந்ததுடன், தன்னை யழைத்துக் கேட்க இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார் என்று மிகவும் இறுமாப்புடனும் வினவி இருந்தார். சங்கத்தாரின் சிறப்பான அழைப்பினுக்கு இணங்கமறுத்து, அவர் இறுமாப்பாக எழுதியதைக் கண்டு, முஸ்லிம் மகா ஜனங்களுக்கும் வாலிபர்களுக்கும் அவரிடம் வெகுவாக வெறுப்பு ஏற்படலாயிற்று. அஃது டன், அவர்கள் நமது சங்கத்தினையும் ஆதரிக்க முன்வந்து, கூட்டங் கூட்டமாக நமது சங்கத்தில் சேர்ந்துகொண்டார்கள்.

வெளியிடங்களில் உள்ளவர்களும் அதனை உணர்ந்து, நமது சங்கத்துக்குத் துணையாகவும் கிளையாகவும் பல சங்கங்களை ஆங்காங்கே அமைத்திருக்கிறார்கள். இவ்விதம் சங்கம் வலுப்பதைக் கண்டும், சங்கத்தார் அழைப்புக் கடிதம் விடுத்தது கண்டும், அத் தாவூத்ஷா ஒரு தந்திரத்தைக் கையாள முற்பட்டுளார் என்று காண்கின்றது. நேற்று வரையில் அவரே தனது தாருல் இஸ்லாம் பத்திரிகைக்குத் தனி ஆசிரியராக இருந்து வந்தார். நெடுநாளாகத் தனது ஆபீசில் தனக்குக் கீழிருந்த ஒரு முல்லாவை இப்போது முதல் ஆசிரியராகப் போட்டு, அவரை ஒரு கைப்பொம்மை போல் கொண்டு, தன்னை இரண்டாவது ஆசிரியராக ஏற்படுத்திக் கொண்டிருப்பதின் கருத்து என்ன?

அவரை நம் சங்கத்தார் சமரஸவாதுக்கு அழைத்ததும், பாரக் கழுவினுக்குப் பருத்த கோமுட்டி என்பதைப்போல், இன்னொருவரை இழுத்து வைத்திருப்பது ஏன்? புலிக்குப் பயந்தவரெல்லாம் தன்மீது படுத்துக் கொள்ளட்டும் என்னும் பழமொழியை மெய்ப்பிக்கவா? வாதப்போர் என்று கேட்டதும், தாவூத்ஷா ஒரு மூலையிலே பதுங்க, முல்லாவோ துடை நடுக்கங்கொண்டு கிடக்கிறார்.

பரிசீலனைக் கமிட்டி அங்கத்தினர்

மேலே சொல்லிய பரிசீலனைக் கமிட்டி அங்கத்தினரின் விவரம் வருமாறு:—

1. ஆலீ ஜனாப், மௌலானா மௌலவி முப்தீ, முஹம்மது தமீம் சாகிப் அவர்கள்.

2. ஆலீ ஜனாப், மௌலானா மௌலவி அஹ்மது ஸயீத் சாஹிப் அவர்கள் (ஸை. இ. ஆசிரியர்).

3. ஆலீ ஜனாப், மௌலானா மௌலவி S. A. முஹம்மது அலீ ஸாஹிப் அவர்கள்.

4. ஆலீ ஜனுப், M. A. மலிக் ஸாஹிப் அவர்கள்.

5. ஆலீ ஜனுப், மு. க. அஹ்மது ஸாலிஹ் ஆலிம் சாகிப் அவர்கள்.

6. ஆலீ ஜனுப், அ. மு. க. ஹாஜீ முஹம்மது ஷரீப் மரைக்காயர் அவர்கள்.

7. ஆலீ ஜனுப், அ. மு முஹம்மது ஷரீப் ஆலிம் சாகிப் அவர்கள்,

8. ஆலீ ஜனுப், O. S. சதக் தம்பி மரைக்காயர் அவர்கள்.

9. ஆலீ ஜனுப், முஹம்மது லெப்பை சாகிப் அவர்கள்.

கிளை, சார்பு சங்கங்களும் கௌரவப் பிரசாரகர்களும்.

நமது சங்கத்தின் கிளையாகவும் சார்பாகவும் இருக்கும் சங்கங்களின் இடமும் விவரமும்:—

1. இரங்கூன் :—சோலிய முஸ்லிம் அசோஸியேஷன் (சார்பு சங்கம்) ஆலீ ஜனுப் V. M. அப்துர் ரஹ்மான் அம்பலம் அவர்கள் (ஜீவிய தலைவர்.)

2. இரங்கூன் முஸ்லிம் சமாதான சன்மார்க்க சங்கம். (சார்பு சங்கம்).

3. கொழும்பு :—ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கம். (கிளைச் சங்கம்) ஹாஜீ P. B. உம்பிச்சி J. P. அவர்கள் (தலைவர்).

4. கிள்ளான் :—ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம். (கிளைச் சங்கம்) ஹாஜீ K. O. முஹம்மது இப்ராஹீம் சாகிப் அவர்கள் (தலைவர்).

5. மாத்தளை (சிலோன்) :—ஹிபாஜத்துல் இஸ்லாம் பிரசார சபை:—கா. மு. செ. அலவி சாகிபவர்கள். (காரியதரிசி)

6. பினங்கு :—ஆலீ ஜனுப் V. O. ஹஸன் முஹம்மது சாகிபவர்கள் (கௌரவப் பிரசாரகர்).

7. மோல்மீன் :—வா. சி. மு. கெ. பக்கீர் முஹிய்யத்தீன் அண்ட் கம்பெனியார் (கௌரவப் பிரசாரகர்கள்).

8. சிங்கப்பூர் :—அ. ம. அப்துல்லாசாகிப் அண்டு கம்பெனியார் (கௌரவப் பிரசாரகர்கள்).

9. சைகோன் :—ஐ. ம. ஹாஜீ முஹம்மது இஸ்மாயீல் சாகிப் கம்பெனியார் (கௌரவப் பிரசாரகர்கள்).

மேலும் தென்னாட்டிலுள்ள பல பொது ஸ்தாபனங்களும் உலமாக்களும் முக்கிய ஸ்தர்களும் இதனை ஆதரித்து, சங்கத்தின் நோக்கத்திற்கு ஒத்து வேலை செய்வதாக நமக்குக் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள்.

பத்திரிகை வரலாறு

இவ்விதம் தாவூத்ஷா கண்ணியமான சமரசத்துக்கு இணங்காததால், முஸ்லிம் சகோதரரும் வாலிபரும் வழிதவறிப் போகாதிருக்கக் கருதி, நமது பரீசிலனைக்கமிட்டியார் சங்கத்துக்குச் சமர்ப்பித்த உண்மைகளைக் குறித்துக் கட்டுரை வரைந்து வெளியிடவும், சுன்னத்து வல் ஜமாஅத்துக் கொள்கையின் மெய்யான கருத்துக்களைப் பரப்பவும், அவசியம் ஏற்பட்டுளது. எனவே, சென்னை “ஸைபுல் இஸ்லாம்” பத்திரிகை, நமது சங்கத்தாரின் வியாசங்களை அவ்வப்போது தாமதியாது பிரசுரித்தும், சங்கத்தை ஆதரித்து அன்பர்கள் எழுதிவரும் வியாசங்களை வெளியிட்டும், தலையங்கங்கள் எழுதியும், இஸ்லாத்திற்கு ஒப்பற்ற ஊழியம் செய்து வந்தது; இன்றும் செய்து வருகிறது. அத்துடன் திருப்தி கொள்ளாமல், நமதுசங்கத்தார் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டனர். ஆயினும், வாரம் இருமுறை பிரசுரமாகும் பத்திரிகையில் வெளிவரும் விழுமிய விஷயங்களை நம் மக்கள் அவ்வப்போது படித்துப்பார்த்து

விட்டு விடுவதாலும், அதை நீண்டகாலத்துக்குப் பத்திரமாக வைத்துப்பார்த்துக் கொள்வதற்கு முடியாததாலும், (ஷெ "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகை மூலமாகவும் துண்டுப் பிரசுர மூலமாகவும் பிரசாரம் செய்வதுடன்), எப்பொழுதும் பத்திரமாய் இருப்பதற்காக புத்தக வடிவில் ஒரு மாதப் பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தவேண்டுமென உள்ளூரிலும் வெளியூர்களிலுமுள்ள மார்க்க அபிமானிகளும் அறிஞர்களும் உலமாக்களும் சங்கத்தினரைப் பன்முறை வேண்டிக் கொண்டனர். அதனை மதித்து, நமது சங்கத்தார் தங்கள் சார்பாக, "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்னும் இச் சஞ்சிகையை உங்களிடம் உள்ளன்புடன் சமர்ப்பிக்கின்றனர்.

இச் சஞ்சிகையில் சுன்னத்து வல் ஜமாஅத்துக் கொள்கைகளை விபரமாக எடுத்துக் கூறுவோம். இஸ்லாத்தின் பாதுகாப்பிற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் உகந்த விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டி விளக்குவோம். சங்கத்தார் செய்யும் அரிய சேவைகளும் சஞ்சிகையில் வெளியாகும். சுத்தமான இனிய செந்தமிழ் நடையில், யாவருக்கும் எளிதில் விஷயம் விளங்குமாறு பத்திரிகையை நடத்தவேண்டும் என்பதே சங்கத்தாரின் நோக்கம். மகா ஜனங்களாகிய உங்களது வேண்டுகோளுக் கிணங்கி, உங்கள் ஊழியரான சங்கத்தார் வெளியிடும் இப் பத்திரிகைக்கு நீங்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும், பிறரை சந்தா நேயர்களாகச் சேர்த்துத் தந்தும் ஆதரித்தால்தான், சஞ்சிகை இன்னும் மிக அழகாகவும் விரிவாகவும் பிறைமதிபோல் பிரகாசிக்க வழி பிறக்கும். சங்க சம்பந்தமான பல வேலைகளிருப்பினும், அவற்றிற்கு இடையே இப்பத்திரிகையை நடத்தும் வேலையையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். இதில் பணச்செலவும் கஷ்டமும் அதிகம் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

ஆதலின், நாளுக்குநாள் சஞ்சிகையை அபிவிருத்திசெய்து, இஸ்லாத்திற்கும் சமூகத்திற்கும் இன்னும் அரிய தொண்டு ஆற்றும்படி ஆதரவு அளிப்பது உங்கள் கையிலேயே இருக்கிறது. இப்பத்திரிகைக்கு ஏற்படும் செலவைக் கவனித்தால், இதற்கு இவ்வருஷத்திலேயே குறைந்தது 2,000 சந்தாநேயர்களாயினும் சேர்ந்தால்தான், நம் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாதிருக்கும். ஆதலின், மார்க்கபக்தர்களும் மதாபிமானிகளுமாகிய நீங்கள், உங்களுக்கு ஊழியம் புரியப் புறப்பட்டிருக்கும் இந்த சஞ்சிகைக்கு எல்லாவகையிலும் உதவி புரிவீர்களாக. அஞ்ஞானம் என்னும் இருளில் ஆழ்ந்து,வழிதவறி இருந்த மக்களுக்கு மெய்ஞ்ஞான ஒளி பரப்பி, அவர்களை நேரான வழியில் கொண்டுவருவதற்காக இறைவன் அருளிய குர்ஆன் மஜீதானது சிறப்பான இந்த றமலான் மாதத்திலேயே முதல்முதலாக வெளியாகிப் பூர்த்தியாயிற்று என்பதையும், இதற்கு முன்னதாகவே இச்சஞ்சிகையை வெளியிட்டுவிடவேண்டுமென எவ்வளவோ முயற்சிசெய்தும், மகிமை வாய்ந்த இம்மாதத்திலேயே இதன் முதல்இதழ் வெளிவரும்படி இறைவன் கிருபை செய்ததையும் நோட்டமிடுமிடத்து, சங்கத்தார் எடுத்துக் கொண்ட இந் நன்முயற்சியில் அவர்கள் வெற்றி பெறுவர் என்பதற்கு இது ஓர் அறிகுறியாகும் என்று கூற நமக்கு ஆனந்த முண்டாகிறது.

حفاظة الإسلام مدراس

நமது பத்திரிகை

தற்கால உலகம் பத்திரிகை மயம் என்னலாம். இந்த உண்மையை மேல் நாடுகள் நன்கு வலியுறுத்தும். கைவசமுள்ள சரக்கை விற்கவோ, வேலைக்கு ஏற்ற ஏவலாளனை நாடவோ, சமூகத்துக்கு நற்போதம் புகட்டவோ, சங்கத்தின் கொள்கைகளைப் பரப்பவோ, தங்கள் மதமே நன்மதம் என நிலைநாட்டவோ, ஏனைய தேசங்களின் அதிசயங்களை அறிவிக்கவோ வேண்டின், மேனாட்டினர் பத்திரிகைகளையே நாடி நிற்கின்றனர்.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலே ஒவ்வொரு பத்திரிகையும் நாள்தோறும் லட்சக்கணக்கில் செலவாகின்றன. சில பத்திரிகைகளோ, காலையில் ஒரு பதிப்பும், மாலையில் ஒரு பதிப்புமாக வெளியாவதும் உண்டு. வெளியான சிறிது நேரம் கழித்து, அப்பத்திரிகையின் காரியாலயம் சென்று, ஓர் இதழ் வேண்டின், கிடைப்பது அருமையாகும். அங்கெல்லாம் தினசரிப் பத்திரிகைகளில் பலவும் காலையில் பிரசுரமாகும். காலையிலே காபி, தேயிலை முதலிய பானம் பருகக் காலதாமதம் ஆயினும், ஐரோப்பிய மக்களின் மேஜையிலே குறித்த நேரம் சிறிதும் தவறாமல் பத்திரிகை தயாராக இருக்கும். அதனை ஒரு முறை புரட்டிப் பார்த்தபின்பே, அன்னவர் வேறு வேலையில் கவனம் செலுத்துவர். காபி, தேயிலைப் பானம் பண்ணாவிடின், சிலர் தங்களுக்குத் தலைவலி வந்து விடுமென்பர். மேனாட்டினருக்கோ, பத்திரிகையைப் படிக்காவிடின், ஒருவேலையிலும் தீவிரமாக மனம் செல்லாது.

இம்மட்டோ? அன்றாடம் கூலிவேலை செய்து காலம் தள்ளும் ஏழைத் தொழிலாளனும், வயிறு வளர்க்க வகையில்லையே என்று ஏங்கித் தவிக்கும் நித்திய தரித்திரனும், பத்திரிகை படியாவிடின் நிம்மதி கொள்ளார். வயிற்றுக்கு உணவு கொடுப்பதினும், சிந்தைக்கினிய உணவு ஊட்டுவதில் ஐரோப்பியர் சிறிதும் தவறார். பத்திரிகையின் மூலம் பேரறிவும், உலக ஞானவொளியும் நன்கு எய்தி, நானிலமெங்கும் நலம்பல துய்த்து வருவதில், மானிட கோடிகளிலே மேனாட்டினருக்கு இணையாக யாரும் கிடையாது. தனி மனிதனது உள்ளக் கருத்தையும், உடலின் தோற்றத்தையும், அவனது முகம் பளிங்குபோல் காட்டும் அல்லவா? அங்ஙனமே, ஒரு சமூகத்தின் அல்லது தேசத்தின் வளர்ச்சியையும் உணர்ச்சியையும் எடுத்துக் காட்டுவது பத்திரிகையே. சுருங்கச் சொல்லின், பலவகையான பத்திரிகைகள் இல்லாத தேசமும், பலவகையான பத்திரிகைகளைப் படிக்காத சமூகமும், உலக வாழ்விலே உச்சஸ்தானம் அடைவதற்கு உபாயம் இல்லை.

நமது தேசத்தின், இஸ்லாமிய சமூகத்தின், தற்கால நிலைமை எங்ஙனம் உளது? இத்தேசத்திலும், நமது சமூகத்திலும் எத்தனை பத்திரிகைகள் வெளியாகின்றன? பத்திரிகைகளின் தொகையோ, விரலின் எண்ணிக்கையில் அடங்கி விடுமென்றோ! இந்திய மக்கள்

(33) முப்பத்து மூன்று கோடியாவர். நமது இஸ்லாமிய மக்களின் தொகை 8 கோடிக்கு மேலாகும் தென்னாட்டினும், வடநாட்டிலே பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அவற்றைப் படிப்போரின் தொகையும் மிக மிக அதிகம். இத்தமிழகத்திலோ நம்மவரின் நலத்தைக் காக்கவும் வளர்க்கவும் விரும்பியுழைக்கும் பத்திரிகை மிகவும் குறைவு என்று சொல்லவும் வேண்டுமோ ?

வட இந்தியாவிலே நிலவியுள்ள நமது மார்க்க மகா சங்கங்களான நத்வத்துல்-உலமா, ஜமியத்துல்-உலமா, முதலியனவோ, நமது சத்திய சமயத்தையும் சமூகத்தையும் உயர்த்தக் கருதி, மாதந்தோறும் பத்திரிகைகளைப் பிரசுரித்து, பிரசாரம் புரிந்து, ஊழியம் செய்து வருகின்றன. வடநாட்டிலுள்ள ஸஹரன்பூர், டெல்லி, அமிர்தசரஸ், கான்பூர், இலட்சுமணபுரி,லாகூர் முதலிய பல நகரங்கள் மார்க்க தீபமான சஞ்சிகைகளை வெளியாக்கி மகிமைபெற்று விளங்கி வருகின்றன. நமது தமிழகத்திலோ இஸ்லாம் மார்க்கசங்கங்களும் மத்ரஸாக்களும் ஏராளமாக இருத்தல் உண்மையே. ஆயினும், அவற்றில் எத்தனை ஸ்தாபனங்கள், பத்திரிகைகளின் மூலம் சமய, சமூக சேவைபுரிய முன்வந்துள? நாமறிந்த வரையில் ஒன்றும் இல்லையே என்றுரைக்கப் பெரிதும் வருந்துகின்றோம். ஆதலின், அத்தகைய பெருங் குறையை நீக்கவேண்டியே, சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் எனும் சங்கத்தினர் இச்சமயம் இதனைப் பிரசுரித்து நம்மவருக்குச் சேவைபுரிய எண்ணியுளர்.

இப்பத்திரிகை நமது சங்கத்தின் சீரிய கொள்கை, உயரிய நோக்கம் முதலியன கைகூடுவதற்கு உரிய துறையில், ஊக்கமும் உற்சாகமும் கொண்டு, ஓயாமல் உழைத்துவரும். தமிழக முஸ்லிம் மகாஜனங்களின் அருந்தொண்டனாய், பெருஞ் சேவகனாய் நின்று சமய,சமூக, ராஜீய,தேசிய வேலைபுரிய இப்பத்திரிகை இளம்பிறைபோல் புறப்படுகின்றது. இதற்கு நம்மவரின் பேராதரவும், பேருதவியும் மிக அவசியம் என்பது வெளிப்படை.

தற்காலம் பத்திரிகை நடத்துவது என்பது இலேசான காரியம் அன்று. பணபலமும் நம்மவரின் பக்கபலமும் அதி அவசியம். ஆதலின், ஆண்டவனது தண்ணளியையும் இஸ்லாமியரது இனிய உதவியையும் முன்னிட்டு, இம்மாத சஞ்சிகை உதயமாகின்றது.

இஸ்லாம் மார்க்க அபிவிருத்தியையும் பாதுகாப்பையும் முதற்கடமையாகக் கொண்டு, மதக்கோட்பாட்டினுக்கு முரண்படாதவாறு சமூகத்தைச் சீர்திருத்தி உயர்த்துவதற்கான அரிய பெரிய கட்டுரைகள், அறிவிற் சிறந்த ஆன்றோரின் உதவியினால் இப்பத்திரிகையை அலங்கரித்து நிற்கும்.

பூஞ்சோலையிலுள்ள நறுமலர்களை நாடிச் சென்று, அவற்றிலுள்ள மகரந்தப் பொடியில் திளைத்து, இரசத்தைத் தேடிச் சேர்க்கும் தேனீயைப்போல், இப்பத்திரிகையோ இஸ்லாமிய மத நூல்களிலிருந்தும் உண்மைச் சரிதங்களிலிருந்தும் விழுமிய பொருள்களைத் திரட்டி, அவற்றை இனிய எளிய தமிழ் நடையில், யாவரும் இலகுவில் உணருமாறு, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்.

"ஹிபாஜத்துல் இஸ்லாம்'' ஆற்றவேண்டிய அருங்கடமையும் வேறொன்றுளது. தற்சமயம் தமிழக முஸ்லிம்களுக்கு இடையே, நமது பரிசுத்த மார்க்கத்திற்கு மாறான பிரசாரமும் பிரசுரமும் பெருகிவருதல் பிரசித்தம். பகல் வேஷதாரிகளும், கள்ள மஸ்தான்களும், போலி முஸ்லிம்களுமான இரண்டொருவர் அங்ஙனம் மார்க்கக்கேடு இழைத்துவருகின்றனர்; அறியாப் பாலரையும், படியா மக்களையும் அச்சிலர் தமது மாயவலையில் சிக்கச்செய்யும் சூழ்ச்சி கொஞ்சமன்று. அத்தகைய போலிகளின் பொய்மூட்டைகளைப் போக்கி, மாயவலையைக் கிழித்துவீசி, பொய்ப்பிரசாரங்

கண்டு மயங்கும் பாலரையும் பாமரரையும் நேர்வழியில் நிலைநிறுத்தவேண்டும் அல்லவா? இத்துறையில் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பெரும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள நேர்ந்துளது. மார்க்க பக்தரான ஓர் ஆயிரவர் செய்யும் பிரசாரத்தினும், இப்பத்திரிகை செய்யும் பிரசாரம் பரந்து பெருகி, மிகச் சிறந்த பலனளிக்கும் என்று நம்புகிறோம். எனவே, நம்மவருக்குள் இப்பத்திரிகை ஆயிரக் கணக்கில் செலவாகுமாயின், அதனால் நமது சமயமும் சமூகமும் எத்துணை பலமும் நலமும் பெறலாம் என்பதை நம்மவர் யாவரும் யூகித்துக் கொள்ளலாம்.

தற்சமயம், நமது சமூகத்திற்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்நெருக்கடியைப் போக்கி நன்னிலைக்கு வழிகோலவேண்டும். இதற்கு முஸ்லிம்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட பல சஞ்சிகைகளும், வாரப் பத்திரிகைகளும், தினசரிகளும் அவசியமாகும். பத்திரிகைகளின் தொகை பெருகுவதற்கு ஏற்ப, மக்களிடையே பத்திரிகாபிமானமும், அதனைப் படிக்கும் விருப்பமும் பெருகும். இத் தமிழகத்திலுள்ள ஏனைய முஸ்லிம் சங்கங்களும் பத்திரிகைகளைத் தொடங்கி, சமய, சமூக சேவைபுரிதல் சாலச் சிறந்ததாகும்.

தற்காலத்தில் உலக நிகழ்வுகளோ, பெரிய சர்வ கலாசாலைகளில் கிடைக்கும் அறிவு அனைத்தையும் ஊட்டவல்லனவாம். அவ்விதம் புகட்டுவதற்கு இச்சமயம் பெருங்கருவியாக இருப்பது பத்திரிகையே. பத்திரிகையினும், பல்கலை பயின்ற போதனாசக்தி வாய்ந்த நல்லாசான் எங்குக் கிடைப்பான்? இரு பாலாருக்கும், எப்பிராயத்தினருக்கும், எத்தொழிலாளருக்கும் அவரவருக்கேற்ற வகையில், அறிவுச்சுடர் கொளுத்த முன்வந்திருக்கும் இப்பத்திரிகையை நம் தமிழக முஸ்லிம் மகா ஜனங்கள் அனைவரும் அகமும் முகமும் மலர்ந்து ஆதரிக்கும் வண்ணம் ஆண்டவன் அருள்புரிவானாக! ஆமீன்!

இனாம்! இனாம்!!

786

உத்தமபாளையம், கம்பம் முதலிய இடங்களில் சென்னை இஸ்லாஹுல் அகாயித் சங்கத்தார் செய்துவரும் ஒப்பற்ற இஸ்லாமிய ஊழியத்தையும், அச்சங்கத்தின் டெபுடேஷன் அப்பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்த விபரத்தையும், ஸைபுல் இஸ்லாம் பத்திரிகை மூலமாக அறிந்திருப்பீர்கள். ஷை டெபுடேஷன் சங்கத்திற்கு சமர்ப்பித்துள்ள ரிப்போர்ட்டு, வேண்டுவோருக்கு இனாமாக அனுப்பப்படும். உடனே, உங்கள் விலாசங்களைத் தெரிவிப்பீர்களாக. இப்புனித ரமலான் மாதத்தில் அப்பிரதேசத்திலுள்ள உங்களின் நூற்றுக்கணக்கான நவ் முஸ்லிம் சகோதரர்களை மறந்துவிடாதீர்கள். உங்கள் ஜக்காத் பணத்தின் ஒரு பகுதியையும் பித்ருவையும் அனுப்பி அவர்களுக்கு உதவுங்கள்.

காரியதரிசி, இஸ்லாஹுல் அகாயித் சங்கம்,

63, தம்புசெட்டி தெரு, சென்னை.

றமலான் மாத மகிமை

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதை ஆரம்பிப்போம்).

"றமலான் மாதமாகிறது (எத்தகைய சிறப்புடையது என்பதை நீங்கள் அறிவீர்களா?) இம்மாதத்தில்தான் மானிட (கோடியின்) நேர்வழி காட்டியாகவும், (அந்) நேர்வழிக்கு அத்தாக்ஷியாகவும், (நன்மை இன்னது, தீமை இன்னது என்று) பிரித்தறிவிக்கும்படியானதுமாகிய குர்ஆன் (ஷரீப் இறக்கி) அருளப்பெற்றது. ஆதலின், உங்களிலெவன் அம்மாதத்தை அடைகின்றானோ, அவன் அதில் நோன்பு நோற்கவேண்டும்" (குர்ஆன்).

இஸ்லாத்தின் முக்கிய கடமைகள் ஐந்தாகும். அவற்றில் நோன்பு நோற்பதும் ஒன்று. இத்தகைய முக்கிய கடமையை எக்காலத்தில் நிறைவேற்ற வேண்டும்? அக்காலம் எவ்வளவு சிறப்புடையது? என்பதை மேலே கூறியுள்ள தெய்வத் திருமறையின் அரிய வசனங்களால் அறிந்து கொள்ளலாம்.

இப்புனித றமலான் மாதத்திலேயே முதன்முதலாக, நேர்வழி காட்டும் குர்ஆன் ஷரீபு வெளியாயிற்றென்று இறைவனே தெளிவாகக் கூறியிருக்கிறான். ஆகையால் இம்மாதத்திற்கு விசேஷ மகத்துவம் உண்டு என்பது வெளிப்படை.

"றமலான் மாதம்வந்து விடின், சொர்க்கத்தின் வாசல் திறக்கப்பெறும்; நரகவாயில் மூடப்படும்; ஷைத்தான்களெல்லாம் விலங்கிடப்படும்; நன்மை நாடுவோரே! வருக! வருக! தீமை தேடுவோரே! நின்றுகொள்க! என்று அழைப்போர் அழைப்பர்" என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஜ்ரத் அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இந்த ஹதீதிலிருந்து புலப்படுவது என்ன? றமலான் மாதம் நன்மையான காரியங்களை அபரிமிதமாகச் செய்வதற்கு ஏற்ற காலம்; தவிர, புண்ணியம் மிக்க கண்ணிய மாதமுமாம். நம்முடைய அகப்பகையான ஆசை, இம்மாதத்தில் நோன்பு நோற்பதால் அடங்கும்; அன்றியும் அந்த ஆசை நமது ஆணைக்கு அடங்கிக் கிடக்கும்; அந்த ஆசை அல்லது இச்சையின் காரணமாகவே, பெரும்பாலும் இந் நிலவுலகில் சண்டை சச்சரவு, கொள்ளை கொலை, வஞ்சகம் மோசம் முதலிய பாவச் செயல்கள் நிகழ்கின்றன.

எனவே, அத் தீவினைகளுக்கு அடிப்படை ஆசையேயாம். இம்மாதத்தில் நோன்பு நோற்பதால் ஆசை அடங்குகிறது. ஆசை அடங்கவே, ஷைத்தான் சக்தியற்றுப் போகிறான். ஆகவே இவ்வளவு ஏற்றமுள்ள மாதத்தில் இறைவனை நாம் அனைவரும் வணங்கி, அவனது நல்லருளையும் தண்ணளியையும் அடைய, அகிலம் வல்ல ஆண்டவன் நம் யாவருக்கும் அருள் புரிவானாக.

நோன்பின் பெருமை

" உங்களுக்கு முன் இருந்தவர்களுக்கு (அதாவது இஸ்லாத்திற்கு முன்னால் உள்ள வேதங்களைப் பின் பற்றியவர்களுக்கு நோன்பு) விதிக்கப்பட்டது போல, நீங்கள் (தீமையை) தவிர்த்துக் கொள்வதற்காக உங்களுக்கும் நோன்பு விதிக்கப்பட்டுளது." (குர்ஆன்).

திரு குர்ஆனில் இறைவன் நோன்பின் பெருமையைப்பற்றிப் பல இடங்களிலும் சிலாகித்துப் பேசியிருக்கிறான். தவிரவும், ஆண்டுதோறும் ஒரு மாதம் நோன்பு நோற்க வேண்டுமென்று கட்டாயச் சட்டமும் செய்திருக்கிறான். நோன்பைத்தவிர ஏனைய எல்லா நற்கருமங்களுக்கும் பத்து முதல் ஏழு நூறு வரை (அவரவர் பக்திக்கேற்றவாறு) நன்மை தருகிறேன். ஆனால், நோன்போ என்னைக் குறித்துச் செய்வதாகும். ஆதலால், அந் நோன்பினுக்கு நான் (பிரத்தியேகமான) சம்மானம் அளிப்பேன்" என்று அல்லாஹு தஆலா கூறியதாக, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வாலிபத் தபசியைப்பற்றி மலக்குகளிடத்தில், "நிச்சயமாக அல்லாஹு தஆலா பெருமை பேசுகிறான்" என்றும், "எனக்காக உன்னுடைய இச்சைகளைத் துறந்த வாலிபனே! என்பொருட்டு உனது வாலிபதசையைச் செலவு செய்தவனே! நீ என்னிடம் எனது சில மலக்குகளின் அந்தஸ்தி லிருக்கிறாய்" என அல்லாஹு தஆலா கூறுகிறான் என்றும், நபிகள் பெருமானார் நவின்றிருக்கிறார்கள். நோன்பே நமது ஆண்டவனை வணங்குவதற்குத் தலைவாசலாக உளது என்று இமாம் கஸ்ஸாலி(றஹ்) முதலிய பெரியோர்கள் கூறியுளர்.

இவ்விதமாக, இஸ்லாம் மதத்தில் மாத்திரமே நோன்பு வேதவிதியாகும் என்பதில்லை. ஏனைய மதங்களிலும் நோன்புகள் உண்டு என்பதை மேற்கண்ட வேத வாக்கியத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஆனால், அவைகளை அனுஷ்டிக்கும் முறையில் பலவித மாறுபாடுகள் இருக்கலாம். இருந்தபோதிலும், உலகத்திலுள்ள எல்லா மதத்தினரும் நோன்பை ஆதரித்துப் போற்றி வருகின்றனர் என்பதில் இம்மியும் ஐயம் இல்லை.

நோன்பு கொண்ட ஒருவன் பட்டினி கிடக்க நேருகிறது. அதனால், அவனது சரீரத்திலுள்ள சத்துக் குறைகிறது. குறையவே அகந்தை, மமதை, இறுமாப்பு, கர்வம் முதலிய இழிகுணங்கள் ஒடுங்குகின்றன. காமம் இச்சை இவைகள் அடங்குகின்றன. உலகில் நடக்கும் பஞ்சமகா பாதகங்களுக்குப் பெரும்பாலும் அத்தகைய இழிகுணங்களே மூல காரணம். நோன்பு நோற்பதால், அத்தகைய பாதகங்கள் மனிதனைவிட்டு ஒழிவதற்கு ஏது ஏற்படுகிறது அல்லவா?

தவிரவும், நோன்பு கொள்வதால், பசியின் கொடுமையை ஒருவாறு உணர்ந்துகொள்ளும் சந்தர்ப்பம் வாய்க்கின்றது. இதனால், வறுமைக்கு ஆளாகிப் பசித்துத் துடிக்கும் ஏழைகளின் துயரை உணரவும், அவர்கள்பால் இரக்கம் கொள்ளவும், அவர்களது பசிப்பிணியைப் போக்கவும், நமக்கு விருப்பம் உதிக்கும். உதிக்கவே, மானிடவர்க்கத்தின் குணவிசேஷமான பரோபகார உணர்ச்சி நம்மிடம் தோன்றுகிறது. இவற்றை எல்லாம் ஓர்ந்தே, பெரியார்கள் அடிக்கடி நோன்

பிருந்து வந்துளர் என்பதையும், நோன்பே வணக்கங்களுக்குத் தலைவாயிலாக இருக்கிறது என்பதையும்,நாம் நன்கு கண்டுகொள்ளலாம்.

மிற்க, வருஷமெல்லாம் உண்டு, உடுத்து, சுகித்திருப்பதால் நமது உடலில் படிந்திருக்கும் துர்நீர்கள் இந்த விரதகாலத்தில் வெளியேறும். அதனால் தேகத்தில் ஏற்படும் சோம்பல், அயர்வு முதலியனவும் நீங்கும். நீங்கவே, நாம் சரீர சுகம் பெறுகிறோம். முற்கால, தற்காலத்திய வைத்திய நிபுணர்களும் மேதாவிகளும் இந்த உண்மையைத் தங்கள் அனுபவத்தில் அறிந்து, பிறரை அனுஷ்டிக்கும் வண்ணம் தூண்டி வந்திருக்கின்றனர்.

நோன்பு நோற்பதால் சரீரம் மெலிந்து, பலக்குறைவு ஏற்படுவதாக வெளிப் பார்வைக்குத் தோன்றலாம். ஊடுருவிப் பார்ப்பின், நோன்பு எவ்விதத்திலும் நலமே பயப்பதாகும்; எதிர்காலத்தில் நமது காரியங்களை நன்கு ஆற்றுவதற்கான சுறுசுறுப்பும், ஊக்கமும், உணர்ச்சியும், உற்சாகமும் உண்டாக்குகின்றது. இக்கருத்துக்களைக் குறித்தே இறைவன் மேற்கண்ட வேதவாக்கியத்தில் "நீங்கள் தீமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக" என்று கூறியிருக்கிறான். ஆதலால் றமலான் மாதத்தில் முஸ்லிம்கள் யாவரும் நோன்புநோற்று, அதன் நன்மைகளை யடைய இறைவன் அருள் சுரப்பானாக!

நோன்பின் விபரம்

நோன்பு கொள்வதாக நிச்சயித்து, வைகறை வேளையிலிருந்து சூரியாஸ்தமனம் வரையில் உண்பதையும், பருகுவதையும், காமநுகர்ச்சியையும் விடுத்திருப்பதே நோன்பாகும். அந்நோன்புகள், பர்லு, வாஜிபு, நபில், மக்றூஹ் தஹ்ரீம், மக்றூஹ் தன்ஸீஹ் என ஐந்து வகைப்படும்.

1. பர்லான நோன்பு இருவகை. றமலான் மாதத்தின் நோன்பு ஒருவகை. ஷ மாதத்தில் தவறிவிட்ட (கலாவான) நோன்பு மற்றொரு வகை. இதை இன்ன காலத்தில் தான், நிறைவேற்றவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆனால், முதல்வகையான றமலான் மாதத்தின் (அதாவான) நோன்போ, றமலான் மாதத்திலேயே நிறைவேற்றப்படல் வேண்டும்.

2. வாஜிபானநோன்பு. இதுவும் இருவகையாகும். குறிப்பிட்ட ஒருமாதத்தில், அல்லது ஒரு தினத்தில், நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய்யப்பட்ட நோன்பு ஒரு வகை. இத்தகைய நோன்புகளை அந்தந்தக் காலத்திலேயே நிறைவேற்றுதல் வேண்டும். தேதியோ, மாதமோ, எதுவும் குறிப்பிடாமல், நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய்யப்பட்ட நோன்பு மற்றொரு வகை. இதை றமலானல்லாத எக்காலத்திலும் நிறைவேற்றலாம்.

3. நபில் நோன்பு. இதுவும் இருவகைப்படும். முஹர்ரம் மாதத்தின் ஆஷூரா நோன்புகள் போன்ற சுன்னத்தான நோன்புகள் ஒருவகை. பிரதி மாதந்தோறும் 13, 14, 15-ஆம் தேதிகளில் நோற்கப்படும் அய்யாமுல் பீள் போன்ற முஸ்தஹப்பான நோன்புகள் மற்றொரு வகை.

4. இரண்டு ஈதுப் பெருநாள்கள், அய்யா முத்தஷ்ரீக்காகிய துல்ஹஜ்ஜு மாதத்தின் 11, 12, 13 ஆக மூன்று தேதிகளில் நோற்கப் படும் நோன்புகள், மக்றூஹ்தஹ்ரீமியாகும்.

5. முஹர்ரம் மாதம் பத்தாந்தேதி மாத்திரம் தனியே நோற்கும் நோன்பு மக்றூஹ் தன்ஸீஹ் ஆகும்.

நோன்பு நோற்கக் கடமைப் பட்டவர்கள்

சித்த சுவாதீனம் உள்ளவர்களாய், பருவமடைந்தவர்களான ஆண் பெண் ஆகிய இருபாலாரும் நோன்புநோற்கக் கடமைப்பட்டவர் ஆவர். மாதவிடாய், பேற்றுத்தொடக்கு அதாவது ஹைலு, நிபாஸ் ஆகிய அசந்தர்ப்பங் கொண்ட பெண்கள் அக்காலத்தில் நோன்பு நோற்கக் கூடாது. ஆனால் அக்காலத்தில் விடப்பட்ட நோன்புகளை, றமலான் மாதமல்லாத காலத்தில் நோற்கவேண்டும். பாலர், பித்தர், பிணியாளர், பிரயாணி (முஸாபிர்), நோன்பு நோற்கச் சக்தியற்ற வயோதிகர்கள், ஆகிய இவர்கள் நோன்பு நோற்பது கடமையல்ல. ஆனால், மீளா வியாதியஸ்தரும், நோன்பு நோற்கச் சக்தியற்ற வயோதிகரும், றமலான் மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் முத்து (பரிகார தர்மம்) கொடுப்பது வாஜிபு. பிரயாணிகள் நோன்பு நோற்பது கடமையில்லையானாலும்; அவர்கள் நோன்புநோற்றால் நிறைவேறிவிடும்.

நோன்பின் நிய்யத்து
(ஹனபிமத்ஹபுப் பிரகாரம்)

நான் நோன்புவைப்பேன்என தினசரி மனதில் நிர்ணயஞ் செய்துகொள்வதற்கு, நோன்பின் நிய்யத்து என்று பெயர். இவ்வாறு நிய்யத்துச்செய்வது பர்லு. அதைச் சொல்லுவது சுன்னத்து. ஆதலால், நோன்பு வைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் விடியற்காலத்தில், அதாவது ஸஹர் நேரத்தில், ஒருவன் சாப்பிடுவானாகில், அதுவே நிய்யத்தாகிவிடும். நாளை நோன்பு வைப்பேன், இன்ஷா அல்லாஹ், என்று சொல்லுவானாகில், அதுவும் நோன்பின் நிய்யத்தாம்.

சூரியாஸ்தமன முதல் சூரியன் உச்சியில் வரும்வரை, அதாவது ஷரஈ நடுப்பகல்வரையில், நோன்பு நோற்பதாக நிய்யத்துச்செய்து கொள்ளலாம். ஆகையால் ஷரஈ நடுப்பகலிலிருந்து சூரியாஸ்தமனத்திற்குள் நிய்யத்துச் செய்தல் கூடாது. றமலான் மாதத்தில் வேறெந்த நோன்பிற்கும் நிய்யத்துச் செய்தல் ஆகாது. அவ்வாறு நிய்யத்துச் செய்து, நோன்பு நோற்றாலும், அவன் நிய்யத்துச் செய்த நோன்பு நிறைவேறாது. ஆனால் அந்த நோன்பு றமலான்மாதத்தின் பர்லான நோன்பாக நிறைவேறிவிடும். ஆனால் பிரயாணிகள் மீது றமலான்மாதநோன்புநோற்பது கடமையல்ல வாதலால், அவர்கள் பிரயாணிகளாக இருக்கும் காலத்தில் வேறெந்த நோன்பைக் குறித்து நிய்யத்துச் செய்தாலும், அவர்கள் நிய்யத்துச் செய்த நோன்பு நிறைவேறிவிடும் (ஷரஹ் விகாயா). எனினும், பிரயாணிகள் றமலான் மாதத்தில் றமலான் மாதத்தைய பர்லான நோன்பையே நிய்யத்துச் செய்வது உத்தமமாகும்.

[குறிப்பு:— ஒருமனிதன் சாதாரணமாக மூன்று நாட்கள் சிரமமில்லாமல் நடந்து செல்லக்கூடிய தூரத்திற்காவது அல்லது அதற்கு அப்பாலாவது செல்லுவானாகில், ஷரீஅத்துப்படி பிரயாணியாக (முசாபிராக)க் கருதப்படுவான். இந்த தூரத்தை சுமார் 48 மைல் என மேதாவிகள் கணித்துளர். ஆகையால் 48 மைல் தூரத்திலும் அதற்கப்பாலுமுள்ள எந்த ஊருக்கும் ஒருவன் சென்று, 15 நாட்களுக்குள்ளாகத் திரும்பிவிடுவதாக இருந்தால், அவன் முஸாபிராகி விடுவான். இத்தகையோர் பிரயாணியாக இருக்கும் காலத்தில், றமலான் மாதத்தின் பர்லான நோன்பை நோற்பது அவசியம் அன்று. அம்மாதத்

தில் நோன்பு நோற்முல், அது பர்லாக நிறைவேறிவிடும். அவ்வாறு நோற்காதிருந்தால், இதரகாலத்தில் அதை கலாச்செய்யவேண்டும். பிரயாணிகள் கஸர் தொழுவதற்கும் இதுவே கணக்கு.]

—

ஸஹர் செய்வது

நடு நிசிக்குப்பின் கிழக்கு வெளுப்பதற்குள், நோன்பு நோற்கும் நிய்யத்துடன் உணவருந்துவதற்கு ஸஹர் செய்தல் என்று பெயர். கிழக்கு வெளுப்பதற்கு முன்னதாகவே, ஒருவன் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்துவிட்டாலும், அதற்குப் பின் கிழக்கு வெளுக்கும் வரை, உண்ணவும் பருகவும் செய்யலாம்; நோன்புக்கு முரண்பட்ட மற்றெல்லாக் காரியங்களேயுங்கூடச் செய்யலாம். கிழக்கு வெளுத்ததும், அவைகளில் எதையுஞ் செய்யக் கூடாது. "நீங்கள் ஸஹர் செய்யுங்கள்; அதனுல் பரக்கத்திருக்கிறது," என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருக்கிருர்கள். கடைசி நேரத்தில் ஸஹர் செய்வது விரும்பத்தக்கது (முஸ்தஹப்பு). ஆனுல், கிழக்கு வெளுத்துவிடுமோ என்று ஐயம் உண்டாகும் வரையில், அவ்வளவு நேரம் ஸஹர் செய்வதைப் பிற்படுத்துவது வெறுக்கத்தக்கது (மக்ரூஹ்). ஆதலால், அவ்வாறு சந்தேக மேற்பட்டபின், உண்டிகொள்ளாமல் இருப்பது நல்லதாம். அவ்வாறு சாப்பிட்டாலும், நோன்பு நிறைவேறிவிடும். ஆனுல் கிழக்கு வெளுத்த பின்பு சாப்பிட்டதாகப் பின்னுல் வெளியாகின், நோன்பு கைகூடாது. அதைத் திரும்ப நோற்பது வாஜிபு

ஸஹர் செய்வதற்கு ஏற்ற நேரத்தை அறிவிப்பதற்காகச் சிலவிடங்களில் நகரா அடிப்பது போன்ற அறிக்கைகள் செய்யப்படும். அவைகள் சரியான நேரத்தில் ஒழுங்காகச் செய்யப்படுவதாக இருந்தால், அவைகளே அனுசரித்து ஸஹர் செய்யலாம். சரியான நேரம் தவறி, அறிவிக்கப்படுவதாகச் சந்தேகம் ஏற்பட்டால், அவைகளே அனுசரிக்கக்கூடாது. இராக் காலங்களில் மனிதர்களின் அரவம் கேட்கும்போது சேவல்களும் கூவுவது வழக்கமாக இருப்பதால், அவைகளே அனுசரித்து ஸஹர் செய்யக்கூடாது எனச் சிலர் கூறி இருக்கிருர்கள். ஆதலால், அதை அனுசரிக்காதிருப்பதே உத்தமம்.

—

நோன்பு திறத்தல்

சூரியாஸ்தமனத்திற்குப் பின், நோன்பை விடும் நிய்யத்துடன் ஏதேனும் ஒரு வஸ்துவைப் புசிப்பதற்கு, நோன்பு திறத்தல் என்றுபெயர். இதற்கு இப்தார் என அறபியில் கூறுவர். சூரியாஸ்தமனத்திற்குப் பின், மஃரிபு தொழுவதற்கு முன், ஏதேனும் ஒரு வஸ்துவை நோன்பைவிடும் எண்ணத்துடன் புசிப்பது சுன்னத்து. "சீக்கிரம் நோன்பைத் திறப்பவன் எனக்கு அதிகப் பிரியமானவன்," என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இருப்பதால், சூரியாஸ்தமனம் ஆனதும் தீவிரமாக நோன்பு திறக்கவேண்டும்.

நோன்பு திறக்கும்போது, "யா அல்லாஹ்! நான் உனக்காகவே நோன்பிருந்தேன்; உன்னேயே விசுவசித்தேன் (ஈமான் கொண்டேன்); உன்னேயே நம்பினேன்; நீ கொடுத்த இரணத்தைக் கொண்டே, நோன்பு திறக்கிறேன். நாளேக்கு என்மீ திருக்கும் றமலான் மாத நோன்பை நோற்க நாடுகிறேன்; ஆதலால், யா அல்லாஹ்! நான் முன்செய்த பாபங்களேயும் பின் செய்யக் கூடிய பாவங்களேயும் மன்னித்தருள்க!" என்று இறைவனேப் பிரார்திப்பது சுன்னத்து. இவ்வாறு துஆ ஓதுவதிலேயே, மறுநாள் நோன்பு நோற்பதாகக் கூறப்படுவதால், மறுநாள் நோன்பிற்கெனப் பிரத்தியேகமாக நிய்யத்துச் செய்யவேண்டு

மென்ற அவசியம் கிடையாது. ஆதலால், பிரத்தியேகமாக நிய்யத்துச் செய்யாவிட்டாலும், மறுநாள் நோன்பு நிறைவேறி விடும்.

நோன்பாளி நோன்பு திறக்கும்போது கேட்கும் துஆ, கபூலாகும் என்று சொல்லப்படுவதால், தனக்கு அவசியமானதை அல்லாஹு தஆலாவிடம் கேட்டுக் கொள்ளலாம். நோன்பு திறக்கும்போது, வயிறு நிரம்பச் சாப்பிடலாகாது. அவ்வாறு சாப்பிடுவதால், நோன்பினுல் ஏற்படும் பலனில்லாது போவதுடன், வியாதி வருவதற்கும் அது காரணமாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று பேரீச்சம் பழங்களைப் புசித்து, நோன்பு திறந்திருக்கிறார்கள். தண்ணீரை மாத்திரம் அருந்தியும் நோன்பு திறக்கலாம். சூரியாஸ்தமனமாகி விட்டதென நிச்சயமாகத் தெரியும் முன், நோன்பு திறத்தல் கூடாது. அவ்வாறு நிச்சயமாகத் தெரியாமல் சந்தேகமாக இருக்கும் நேரத்தில் நோன்பு திறந்தால், அதை கலாச் செய்யவேண்டும். வானத்திலே மப்பு மந்தாரங் காரணமாக, சூரியாஸ்தமன நேரம் துலங்காவிட்டால், தாமதித்து நோன்பு திறக்கவேண்டும். சூரியாஸ்தமனமாகி விட்டதெனத் திட்டமாகத் தெரிந்தால், ஆகாயத்தில் மேகமுள்ள காலத்திலுங் கூடத் தாமதிக்காது நோன்பு திறக்கலாம். சந்தேகமான நேரத்தில் நோன்பைத் திறந்து, சூரியாஸ்தமனத்திற்கு முன்னதாகவே நோன்பு திறந்ததாகப் பின்னுல் வெளியானுல், அந்த நோன்பைக் கலாச் செய்வதுடன் கப்பாருவும் செய்யவேண்டும். அதாவது நோன்பை விட்ட குற்றத்திற்குப் பரிகாரமும் செய்யவேண்டும் (வாஜிபு).

(ஷாபிஈ மத்ஹபுப் பிரகாரம்)

றமலான் மாதத்தில் தினந்தோறும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்ய வேண்டும். பொழுதடைந்ததிலிருந்து கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச்செய்வதும், பர்லான நோன்பு என்றும், கலாவான நோன்பு என்றும் விவரமாகக் குறிப்பிடுவதும், கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியாஸ்தமனமாகும் வரையில் நோன்பை முறிக்கக்கூடியவைகளைச் செய்யாமலிப்பதும், நோன்பின் நிய்யத்துகளுக்கு ஷர்த்தாகும்.

றமலான் மாதம் முழுதும் நோன்பு நோற்பதாக றமலான் மாதத்தின் முதல் இரவிலேயே நிய்யத்துச் செய்தால், அன்றைய ஒரு நோன்பு மாத்திரமே அந்த நிய்யத்தினுல் நிறைவேறும். ஆதலால், ஒவ்வொரு நாளிலும், தனித்தனியே நிய்யத்துச் செய்தல் வேண்டும். ஆயினும், மாத ஆரம்பத்திலேயே அம்மாதம் முழுதும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்வது சுன்னத்து. ஏனெனில், நோன்பாளி ஓர் இரவில் நிய்யத்துச் செய்ய தற்செயலாக மறந்துவிட்டால், அம்மாத ஆரம்பத்தில் செய்த நிய்யத்தின் காரணமாக, மாலிக் மத்ஹபின்படி அந்த நோன்பு நிறைவேறிவிடும். கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்ய மறந்துவிட்டாலும், அதற்குப்பின் ஷரஈ நடுப்பகல்வரை நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்து கொள்ளலாம். இதனுல், ஹனபிமத்ஹபின்படி அன்றைய நோன்புநிறைவேறிவிடும். ஆதலால், ஹனபி அல்லது மாலிக்கி மத்ஹபின்படி அவனுக்கு நோன்பு கிடைக்கவேண்டுமானுல், இன்ன மத்ஹபைப் பின்பற்றி நோன்பு நோற்கிறேன், என நிய்யத்துச் செய்துகொள்வது அவசியமாகும். அந்த நிய்யத்தைச் சொல்லுவது விரும்பத்தக்கது (முஸ்தஹப்பு).

என்பேரில் கடமையான றமலான் மாதத்தின் நோன்பை அல்லஹு தஆலாவுக்காக நாளை நோற்கிறேன் என்று நிய்யத்துச்செய்ய வேண்டும். பிறகு, “அல்லாஹு லா இலாஹ இல்லாஹுவல் ஹைய்யுல் கைய்யூம் அலா

குல்லி நப்ஸின் பீமாகஸபத்" என்று ஏழு முறை ஓதுவது சுன்னத்து. இவ்வாறு செய்வது பூரணமான நிய்யத்தாகும்.

நோன்பை முறிக்கும் விஷயங்கள்

(ஹனபி மத்ஹபுப் பிரகாரம்)

உணவாக உபயோகிக்கக்கூடாத கல். மண், கடிதம், வெள்ளி, பித்தளை, தங்கம், பொன் போன்ற வஸ்துக்களை உட்கொண்டாலும், நோன்பை விடுவதற்கு ஆகுமான காரணங்களாகிய வியாதி, பிரயாணம், முதலியவைகளை உத்தேசித்து ஆகாரம் அருந்தினாலும், வாய் கொப்பளிக்கும்போதும், நாசிக்கு நீர் செலுத்தும்போதும் தவறுதலாகத் தண்ணீர் உள்ளே போய்விட்டாலும், மற்றவர்களின் கட்டாயத்தின்பேரில் பயந்துகொண்டு நோன்பை முறித்தாலும், மூக்கு வயிறு தலை போன்ற அவயவங்களில் புரை வைத்திருக்கும் புண்களிலே எண்ணெய், மருந்து முதலியவைகளை ஊற்ற அவைகள் மூளை அல்லது வயிற்றினுள்ளேசென்றாலும், கிழக்கு வெளுத்தது தெரியாமல் இன்னும் நேரம் இருக்கிறதென்று எண்ணிக்கொண்டு கிழக்கு வெளுத்தபின் சாப்பிட்டாலும், சூரியாஸ்தமனத்திற்கு முன் சூரியாஸ்தமனமாகி விட்டதென்று எண்ணிக்கொண்டு தவறுதலாக நோன்பைத் திறந்துவிட்டாலும், வெற்றிலை புகையிலை போன்ற பொருள்களைத் தின்றாலும், மூக்குப் பொடி போட்டாலும், காதினுள் எண்ணெய் வார்த்துக் கொண்டாலும், தூக்கத்திலிருக்கும்போது ஏதேனும் வஸ்துக்களைத் தின்றுவிட்டாலும், தான் நோன்பிருக்கிற ஞாபகம் இல்லாமல் காமநுகர்ச்சிகொண்டாலும், பற்களுக்கு இடையில்உள்ள பருமனுள்ள வஸ்துக்களைக் கிழக்கு வெளுத்தபின் விழுங்கினாலும், பற்களுக்கு மத்தியில் உள்ள கடலைப் பருமனுக்கும் சிறியதான வஸ்துக்களை எடுத்து மறுபடியும் விழுங்கினாலும், நோன்பு முறிந்துவிடும். ஆனால், கப்பாரு வாஜிபில்லை (ஆலம்கீரி).

ஒரு நோன்பாளி ஞாபகமில்லாமல் சாப்பிடுவதால், நோன்பு முறியாது. ஆனால், அவ்விதம் செய்ததால் நோன்பு முறிந்துவிட்டதென நினைத்து, பின்பு சாப்பிட்டாலும், பானம் அருந்தினாலும் நோன்பு முறிந்துவிடும். அதை கலாச் செய்யவேண்டும். ஆனால், கப்பாரு வாஜிபில்லை.

நித்திரையில் இந்திரிய ஸ்கலிதமானாலும், தாடி மீசைகளுக்கு எண்ணெய் தடவினாலும், (மிஸ்வாக்கு) பல்குச்சியினால் பல் விளக்கினாலும், நோன்பு முறியாது. ஆனால் அதுபற்றி நோன்பு முறிந்துவிட்டதென நினைத்துக்கொண்டு, பின்பு சாப்பிட்டாலும் வேறு வஸ்துக்களைப் புசித்தாலும் பருகினாலும் நோன்பு முறிந்து போவதுடன், கப்பாருக் கொடுப்பதும் வாஜிபு. ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு நோன்பு முறிந்து போகுமாயின், அந்த மாதத்தின் கண்ணியத்தை உத்தேசித்து, பகலில் பாக்கியுள்ள நேரங்களில் சாப்பிடாமலும் பருகாமலும் இருப்பது வாஜிபு.

றமலான் மாதத்தின் நோன்பாளி, பிறருடைய நிர்ப்பந்தமின்றி,தனது மனப்பூர்வமாக நோன்பை முறித்தாலும், நோன்பாளி என்பது ஞாபகமிருக்க காமநுகர்ச்சி கொண்டாலும் நோன்பு முறிந்து போவதுடன், கப்பாருக்கொடுப்பதும் வாஜிபாகும். அரிசிமா, கொள்ளு, உளுந்து, முதலியவைகளை வேக வைக்காமல் பச்சையாகத் தின்றால் நோன்பு முறிந்துவிடும் ஆனல், கப்பாருக் கொடுப்பது வாஜிபல்ல. எள்ளை வேக வைக்காமல் தின்னும் வழக்க மிருப்பதால், ஓர் எள்ளை வேண்டுமென்று அப்படியே விழுங்கின், நோன்பு முறிந்து போவதுடன் கப்பாருக் கொடுப்பதும் வாஜிபு. ஆனால், ஓர் எள்ளை நன்றாய் மென்று விடுவதால், அது பற்களின்

இடையே நின்று விடுவதற்கு இடமிருப்பது பற்றி, ஓர் எள்ளை மெல்லுவதால் நோன்பு முறியாது. ஆனால் அவ்வாறுமென்ற எள்ளின் சுவை தொண்டைக்குச் சென்றுவிட்டதாகத் தெரிந்தால், நோன்பு முறிந்துவிடும். மேலும், அவ்வாறு மெல்லும்போது, கொஞ்சபாகம் மாத்திரம் உட்சென்று விடுவதால், நோன்பு முறிந்து விடுமாயினும், கப்பாரு வாஜிபில்லை. (ஆலம்கீரி.)

(ஷாபிஈ மத்ஹபுப் பிரகாரம்)

கிழக்கு வெளுத்ததிலிருந்து பொழுது அஸ்தமிப்பதற்குள் காமநுகர்ச்சி கொள்ளுதல், தனக்கு விவாகம் செய்துகொள்வதற்கு மார்க்கச் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட (ஹலாலான) பெண்களைத் திரையில்லாமல் தொட்டு அதனால் இந்திரியம் வெளியாதல், வேண்டுமென வலுவில் வாந்தி செய்தல், ஒலுச் செய்யும்பொழுது அதிகமாக வாய் கொப்பளித்து அதனால் தண்ணீர் உட்செல்லுதல், ஸ்நானஞ் செய்கையில் தண்ணீருக்குள் மூழ்கி அதனால் துவாரத்திற்குள் தண்ணீர் செல்லுதல், காரல் முதலியவை நம் தொண்டையைவிட்டு நீங்கிவந்தபின் அவற்றை மறுபடியும் விழுங்குதல், வாயி லிருக்கிற இரத்தம் முதலியவைகளைத்துப்பி வாயைச் சுத்தி செய்வதற்கு முன் உமிழ்நீரை விழுங்குதல், சரீரத்தின் உட்புறம்வரையில் துவாரங்களின் வழியே கண்ணுக்குப் புலப்படக்கூடிய பொருள்கள் உட்செல்லுதல், ஆகிய இவைகளால் நோன்பு முறிந்துபோம். புதிதாக இஸ்லாம் மதத்தில் சேர்ந்தவர், அல்லது நோன்பு சம்பந்தமான விதிவிலக்குகளை அறியாதவர், மேற்கண்ட காரியங்களைத் தவறாகச் செய்துவிட்டால் அது மன்னிக்கப்படும்.

நோன்பை முறிக்காதவைகள்

(ஹனபி மத்ஹபுப் பிரகாரம்)

பொய் யுரைத்தல், புறங்கூறல் முதலியன நோன்பை முறிக்கா. ஆனால் பொய்யுரை பகர்தல், புறங்கூறல் முதலிய கெட்ட வழக்கங்களை நீக்காவிடில், நோன்பின் முக்கிய நோக்கமாகிய அகச்சுத்தி சித்திபெறாது. ஆதலின், மேற்கூறிய செயல்களால் நோன்பு முறியாவிட்டாலும், நோன்பின் பயன் இல்லாமல்போம் என மார்க்கச் சட்ட அறிஞர்களான பிக்ஹு உடைய உலமாக்கள் கூறி இருக்கின்றனர். நோன்பை முறிக்கக் கூடிய காரியங்களாகிய சாப்பிடுதல், குடித்தல்,காம நுகர்ச்சிகொள்ளுதல் போன்ற காரியங்களை நோன்பாளி என்ற ஞாபகமில்லாமல் செய்துவிடுதல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், ஸ்நானஞ் செய்தல் ஆகிய இவற்றால் நோன்பு முறியாது. காதுக்குள் தண்ணீர் போய்விட்டாலும், வாய்நிரம்ப இல்லாமல் கொஞ்சமாக வந்த வாந்தியை நோன்பாளி என ஞாபகமிருக்க விழுங்கிவிட்டாலும், ஈ தூசு முதலிய அற்ப வஸ்துக்கள் தவறி வாய்க்குட் சென்றுவிட்டாலும், மருந்துகளை இடிக்கும்போது உண்டாகும் காரங்கள், தானியங்களை அரைக்கும்போது உண்டாகும் தூசுகள் முதலியன வாய்க்குள் சென்றாலும், பற்களுக்கு இடையிலிருந்து உதிரம் வெளிப்பட்டாலும், பெண்களை இச்சையுடன் பார்ப்பதால்(தொடுவதால்அல்ல) இந்திரியம் வெளிப்பட்டாலும், மததர்மப்படி நீராடக் கடமைப்பட்டவன் பகல்முழுதும் ஸ்நானஞ் செய்யாதிருந்தாலும், வாசனைத்திரவியங்களை முகர்வதாலும், ஈரத்துணியை வயிற்றில் சுற்றிக்கொள்வதாலும் நோன்பு முறியாது. நோன்பை முறிக்கவேண்டுமென்று எண்ணி, அதனை முறிக்கக்கூடிய காரியங்களைச் செய்யாவிடில், அவ்வாறு எண்ணுவதால் மாத்திரம் நோன்பு

முறிந்து விடாது. காதுக்குள் தண்ணீரை வேண்டு மென்றே வார்த்துக்கொண்டால், நோன்பு முறிந்துவிடுமெனச் சில உலமாக்கள் கூறி இருக்கிறார்கள் (ரத்துல் முஹ்தார்). ஆனால், காதின்வழியாக எண்ணெய், மூளைக்குச் செல்வதால், காதுக்குள் எண்ணெய் ஊற்றுவதும் நோன்பை முறித்துவிடும்.

(ஷாபிஈ மத்ஹபுப் பிரகாரம்.)

தான் விவாகஞ் செய்துகொள்ள மதம் அனுமதிக்கும் (ஹலாலான) பெண்களைத் திரையுடன் தொடுவதாலும், அவர்களைத் திரையுடன் முத்தமிடுவதாலும், காம இச்சையை உண்டாக்கக்கூடியவைகளைக் கூர்ந்து பார்ப்பதாலும், அவைகளைப்பற்றிச் சிந்திப்பதாலும், சொப்பன ஸ்கலிதத்தாலும், தான் விவாகஞ்செய்துகொள்ள மதம் அனுமதிக்காத (மஹ்றமான) பெண்களைத் திரை இல்லாமல் தொடுவதாலும், தன்னால் அடக்க முடியாமல் வாந்தி எடுப்பதாலும், காற்று காரம் முதலியவை உட்சென்றாலும், அசுத்தமாக இருக்கிற தன் வாயை துப்பரவு செய்வதற்குமுன் தற்செயலாக உமிழ்நீரை விழுங்கி விட்டாலும், ஈ போன்றவைகள் தொண்டைக்குள் சென்றாலும், வாய் கொப்பளிக்கும் போது தண்ணீர் தவறுதலாக உள்ளே சென்றுவிட்டாலும், பர்லு அல்லது சுன்னது ஆகிய அவசியங்களுக்காக நீராடும் நோக்கத்துடன் பாத்திரங்களிலிருந்து தண்ணீரெடுத்து ஊற்றிக் கொள்ளும்போது தண்ணீர், துவாரத்தின் வழியாக உட்சென்று விட்டாலும், கொஞ்சநேரம் அறிவு மயங்கிப் பின்பு தெளிவு ஏற்பட்டாலும், சுத்தமான தன் உமிழ்நீரை விழுங்குவதாலும், பிறரது நிர்ப்பந்தத்திற்கு அஞ்சியோ அல்லது ஞாபகமில்லாமலோ, நோன்பு முறிந்து போகுமே என அறியாமலோ நோன்பை முறிக்கக் கூடியவைகளைச் செய்தாலும் நோன்பு முறியாது.

நோன்பு நிறைவேறுதற்கான அம்சங்கள்

பகல்முழுதும் புத்தி சுவாதீனத்துடனும், முஸ்லிமாகவும் இருக்கவேண்டும். பெண்களுக்கு மேற்கூறிய இரண்டு காரியங்களுடன் மாத விடாய், பிரசவத்தின் தொடக்கு (ஹைலு, நிபாஸ்) ஆகிய இவை இல்லாதிருப்பதும் அவசியமாகும். பகல்முழுதும் நித்திரை செய்தாலும், மதச் சட்டப்படி ஸ்நானஞ் செய்யக் கடமைப் பட்டவர்கள் (அதாவது ஜுனுபாளிகள்) பகல் முழுவதும் குளிக்காமல் இருந்தாலும் நோன்பு முறியாது. ஆனால் பாவம் வந்து சேரும்.

நோன்பின் சுன்னத்துகள்

நடுநிசிக்குப் பின் ஸஹர் செய்தல், ஸஹர் செய்வதைக் கடைசி நேரம்வரையில் பிற்படுத்தல், சூரியாஸ்தனமானவுடன் தாமதியாது நோன்பு திறத்தல், பேரீச்சம்பழம் அல்லது தண்ணீரைக் கொண்டு நோன்பு திறத்தல், நோன்பு திறந்தவுடன், “அல்லாஹும்ம லக்க ஸும்து வபி க ஆமன்து, வ அலைக்க தவக்கல்து, வ அலாரிஸ்கிக்க அப்தர்து, பதகப்பல் மின்னீ” என்று பிரார்த்தித்தல், பஜ்ருக்கு முன்னதாகவே ஜுனுபாளியாகி இருந்தால் பஜ்ருக்கு முன்பே குளித்தல், கெட்ட வார்த்தைகளைக் கேட்காமலும் கெட்டபார்வை பார்க்காமலும் வாசனை திரவியங்களை முகராமலும் காமஇச்சை கொள்ளாமலும், நோன்பு திறந்தபின் ஹலாலல்லாத (=மதசம்மதமற்ற முறையில் தேடிய பொருளிலிருந்து தயாரான) உணவை உட்கொள்ளாமலும் இருத்தல், சுன்னத்து.

அதிகமாக ஸதகா (தர்மம்) கொடுத்தல், தன் குடும்பத்திற்குத் தாராளமாகச் செலவு செய்தல், நோன்பு நோற்றவர்களைத் தன்னுடன் சேர்த்து நோன்பு திறத்தல், துப்புரவான இடங்களில் குர் ஆன் ஷரீபை அடிக்கடி ஓதுதல், திக்ரு, ஸலவாத்து முத

லியவைகளை ஓதுதல், இஃதிகாப் இருத்தல், வணக்கங்களை அதிகப்படுத்துதல், ஆகிய இவைகளும்நோன்பின் சுன்னத்துக்களாகும்.

காம இச்சையுடன் முத்தமிடுதல் ஹராமாகும். கண்ணில் சுருமா இடுவதால் நோன்பு முறியாவிட்டாலும், சுருமா இடாமலிருப்பது உத்தமம். பொய் கூறல், புறம்பேசுதல், கோட் சொல்லல், பரிகசித்தல், திட்டுதல், நிந்தனை செய்தல், வீண்பாடல்களைப் பாடுதல் முதலியன செய்யாமலிருப்பது வாஜிபு.

நோன்பின் மக்றூஹுகள்

நோன்பின் மக்றூஹான காரியங்களை நோன்பு நோற்பவன் செய்வதால், அவனது நோன்பு முறிந்துபோகா தெனினும், அதன் நன்மை குறைந்துபோம். ஆதலால், நம் நோக்கம் நிறை வேறும்பொருட்டு, இயன்ற வரையில் மக்றூஹான காரியங்களைச் செய்யா திருப்பது அவசிய மாகும். அடிதிரும்பிய பின், பற்குச்சியினுல் பல்தீட்டுதல், அதாவது மிஸ்வாக்குச் செய்தல், அவசியமின்றி வஸ்துக்களை மெல்லுதல், உருசிபார்த்தல், மலங் கழித்துவிட்டுத் துப்புரவு செய்வதிலும், நாசிக்கு நீர் செலுத்தித் துப்புரவு செய்வதிலும் அளவுக்கு அதிகமாகத் தண்ணீரை உபயோகித்தல், வாயில் தண்ணீரை வைத்துக் கொண்டிருத்தல், உமிழ் நீரை ஒன்றுசேர்த்து விழுங்குதல், காம இச்சை தன்னை மீறிவிடுமென்ற சந்தேகமுள்ளவர்கள் பெண்களை முத்தமிடல், குளிக்கும் போது தண்ணீருக்குள்ளிருந்து காற்றை விடுதல், ஆகிய இவை மக்றூஹாகும். (ஆலம்கீரி).

கப்பாருக்கொடுக்கும் விபரம்

ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும். அதற்கு இயலாவிட்டால், தொடர்ச்சியாக 60 நாள் நோன்பு நோற்கவேண்டும். 59 நாள் தொடர்ச்சியாக நோன்பு நோற்று, 60-வது நாள் நோன்பு நோற்கத் தவறிவிட்டால், முன்னர் 59 நாட்களிலே அம் மனிதன் நோற்ற நோன்புகள் கணக்கில் சேர்க்கப்பட மாட்டா; ஆதலால், மறுபடியும் 60 நாட்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்கவேண்டும். இனி, 60 நாட்களுக்குள் இரண்டு ஈதுப் பெருநாட்கள், அய்யாமுத்தஷ்ரீக் என்னும் துல்ஹஜ்ஜு மாதத்தின் 11, 12, 13 ஆகிய தேதிகள் வராமற் பார்த்து, இவைகளல்லாத காலங்களில் நோன்பு வைக்கவேண்டும். ஆனல், பெண்களுக்குமாத்திரம் மாதவிடாய் நாட்கள் மன்னிக்கப்பட்டுள. ஆகையால், ஷை மாதவிடாய்காலத்திற்கு முன்வைத்த நோன்புகளைக் கணக்குவைத்து, 60 நோன்புகள் நோற்கவேண்டும். இவ்வாறு நோன்பு நோற்க இயலாவிடில், 60 ஏழைகளுக்கு இரண்டு நேரமும் நடுத்தரமான போஜனம் வயிறுர அளிக்கவேண்டும். அல்லது பித்று ஸதக்காவின் அளவாக 60 மிஸ்கீன்களுக்கு ஸதக்கா கொடுக்கவேண்டும். இதைச் செய்யவும் சக்தியில்லையானல், அல்லாஹுதஆலாவிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும். இவ்விதம் பரிகாரத்தை மேலே விவரித்த முறைப்படி கொடுக்கவேண்டும். அடிமையை வாங்கி விடுதலை செய்யச் சக்தியுள்ளவர்கள் நோன்பு வைக்கவோ, 60 பேருக்கு ஸதக்கா கொடுக்கவோ கூடாது.

நோன்பை முறித்தவன் புத்திசுவாதீனமுள்ளவனுகவும் பருவ மடைந்தவனுகவும் இருந்தால்தான், நோன்பை முறித்ததற்கு மேற்கண்டவாறு கப்பாரு அதாவது பரிகாரம் செய்யவேண்டும். சிறுபிள்ளைகள், பயித்தியக்காரர்கள், ஆகிய இவர்கள் கப்பாருக் கொடுக்க வேண்டியதில்லை. றமலான் மாதத்தின் அதாவான (அதாவது கலாவல்லாத) நோன்புக்கு இரவிலும் ஷரஈ நடுப்பகல் வருவதற்குள்ளும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்யலா மாதலால், இரவில் நிய்யத்துச் செய்தவர்களுக்குத் தான் மேற்

கண்டவாறு கப்பாரு வாஜிபாகும். பகலில் நிய்யத்துச் செய்தவர்களுக்கு கப்பாரு வாஜிபாகாது (ஆலம்கீரி, துர்ருல்முக்தார்).

இவ்வாறு கப்பாரு வாஜிபாவதற்கு மற்றொரு ஷர்த்துமுண்டு. அதாவது நோன்பை முறித்த அன்றையதினமே நோன்பை முறிக்கத் தகுந்த காரணங்கள் எதுவும் ஏற்படாதிருக்கவேண்டும். நோன்பை முறித்த அன்றையதினமே நோன்புவைக்க இயலாத விதமாக வியாதி வந்துவிட்டாலும், பெண்பிள்ளை நோன்பை முறித்த அன்றையதினமே ஹைலு அல்லது நிபாஸ் அவளுக்கு வந்துவிட்டாலும், கப்பாருக் கொடுப்பது வாஜிபாகாது (ஆலம்கீரி). ஒருவன் ஞாபகமில்லாமல் அல்லது பிறரின் கட்டாயத்தினல், பசி தாகம் அதிகமாகி அதனல் தனக்கு ஆபத்து வந்துவிடுமென்ற பயத்தினல், நோன்பை முறித்தால் அதற்காகக் கப்பாருக்கொடுப்பது வாஜிபில்லை. கப்பாருக் கொடுக்கும் விதமாக ஒரே வருஷத்தில் இருமுறை நோன்பு முறித்து இரண்டிற்கும் சேர்த்து, கடைசியில் ஒரே தடவையில் ஒரே கப்பாருக்கொடுக்கலாம். ஆனல், ஒரு தரம் கப்பாருக்கொடுத்த பின், மறுமுறையும் அதே வருஷத்தில் கப்பாருக் கொடுக்கவேண்டிய விதமாக நோன்பை முறித்தால்,இவ்விரண்டாம்முறைக்காக இன்னொரு முறை கப்பாருக் கொடுக்க வேண்டும். முதலில் கப்பாருக் கொடுத்தது போதாது. இரண்டு வருஷத்தில் வருஷம் ஒன்றுக்கு ஒவ்வொரு நோன்பாக கப்பாருக் கொடுக்கும் விதமாக நோன்பை முறித்திருந்தால், இவ்விரண்டிற்கும் தனித்தனியே கப்பாருக் கொடுக்கவேண்டும். இரண்டிற்கும் ஒன்ருக ஒரே தடவையில் ஒரே கப்பாருக் கொடுக்கக் கூடாது.

நோன்பு நோற்பது கடமையாகாத சந்தர்ப்பங்கள்.

நோன்பு நோற்ருல், வியாதி அதிகரித்து விடும் என்ற பயம் நோயாளிக்கு இருந்தாலும், பாம்பு தீண்டிவிட்டாலும், குழந்தைக்குப் பால்வற்றிவிடும் என்ற பயம் பால்கொடுக்கும் பெண்ணுக்கு இருந்தாலும், கர்ப்பத்தின் காரணத்தாலும், நோன்பு நோற்காதிருக்கலாம் (துர்ருல்முக்தார்). இவைகளில் எதையேனும் காரணமாகக்கொண்டு, நோன்பு நோற்காதிருந்தாலும், நோற்ற நோன்பை முறித்தாலும், ஷை நோன்பை கலாச் செய்ய வேண்டும். ஷை காரணங்கள் இருக்கும் போதே அவனிறந்துபட்டால், அவன் குற்றவாளியாக மாட்டான். ஆனல், அக்காரணங்கள் நீங்கியபின், அந்த நோன்புகளை கலாச் செய்யாமலிருந்தால், விட்டுப்போன அந்த நோன்புகளுக்குப் பதிலாக பித்யா கொடுக்கும்படி அவன் மரணமடையும்போது வஸிய்யத்துச் செய்வது வாஜிபு.

(ஷாபிஈ மத்ஹபுப்படி).

கடினமான பசி, அடக்கமுடியாத தாகம், தயம்மம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற வியாதி ஆகிய இவைகளில் ஏதாவதொன்றை முன்னிட்டு நோன்பை விடலாம். (48 மைல் தூரத்திற்குக் குறையாத தூரத்திலுள்ள ஊருக்குச் செல்லும்) பிரயாணியும் நோன்பை விடலாம். ஆனல், அவன் நல்ல காரியத்தைச் செய்வதற்காகப் போகவேண்டும். திருட்டு முதலிய காரியங்களைச் செய்யப்போகிறவன் நோன்பை முறிக்கக் கூடாது.

பித்யா கொடுத்தல்

நோன்பு நோற்கவியலாத வயோதிகர் ஆணுனலுஞ்சரி பெண்ணுனலுஞ்சரி, ரமலானின் நோன்பிற்காக பித்யா கொடுப்பது வாஜிபு............(ரத்துல் முஹ்தார்). ஒவ்

வொரு நோன்பிற்கும் பித்று ஸதக்காவின் அளவு தானியம் அல்லது அதன் கிரயம் ஏழைகளுக்குக் கொடுப்பதற்கு பித்யா என்று பெயர். பல நோன்புகளுக்குள்ள பித்யாவை ஒரு மிஸ்கீனிடம் கொடுக்கலாம். ஒரு நோன்பின் பித்யாவைப் பல மிஸ்கீன் களிடம் கொடுக்கக்கூடாது. இவ்வாறு பித்யா கொடுத்தபின், நோன்பு வைக்கச் சக்தி பெற்று விட்டால், அந்த நோன்புகளை கலாச் செய்வது வாஜிபு (ஆலம்கீரி).

(ஷாபிஈ மத்ஹபுப் பிரகாரம்)

நடுத்தரமான மனிதன் இரண்டு கைகளை யுங் கொண்டு தானியங்களை ஒரு முறை ஒவ் வொருநாளும் அள்ளிக்கொடுப்பதற்கு பித்யா என்று பெயர். ஒரு நாளுக்காகக் கொடுக்கப்படும் பித்யாவுக்கு முத்து என்று பெயர். ஒரு முத்தை ஒருவனுக்குத்தான் கொடுக்கலாம். இரண்டு மூன்று பேருக்குக் கொடுக்கக் கூடாது. ஆனல் பலமுத்துக்களைப் பலருக்குக் கொடுக்கலாம்.

றமலான் மாதத்தில் இஃதிகாப் இருப்பது

இமாம், முஅத்தின் ஆகிய இவர்கள் நியமிக் கப்பட்டுள்ள மஸ்ஜிதில் ஆண்களும், வீட்டில் தங்கள் தொழுகைக்கென்றே பிரத்தி யேகமாக ஒதுக்கிவைக்கப் பெற்றிருக்கும் மஸ்ஜிதுகளில் பெண்களும் இஃதிகாப் இருப்ப தாக நிய்யத்துச் செய்துகொண்டு, தாமதித் திருப்பதற்கு இஃதிகாப் என்று பெயர். றம லான் மாதத்தின் கடைசி பத்து தேதிகளில், குறைந்த பக்ஷம் ஒருநாளாவது இஃதிகாப் இருப்பது சுன்னத்து முஅக்கதா கிபாயா ஆகும். ஆகையால், ஓர் ஊரில் ஒருவர் மேலே கூறப்பட்டபடி இஃதிகாப் இருந்து விட்டால், அவ்வூரிலுள்ள ஏனையோரின் கடமையும் நீங்கிவிடும். அவ்வூர் மக்களில் ஒருவர்கூட இஃதிகாப் இருக்காவிட்டால், அவ்வூரிலுள்ள யாவரும் இஃதிகா பிருக்காத குற்றத்திற்கு ஆளாவர்.

இவ்வாறு இஃதிகாப் இருப்பவர்கள் மல ஜலங் கழித்தல், குளித்தல், ஒலுச்செய்தல் போன்ற அத்தியாவசியமான காரியங்களுக் காக மாத்திரம் மஸ்ஜிதைவிட்டு வெளியேவர லாம். ஆனல், மேற்கூறியகாரியங்கள் செய்து முடிந்தவுடன், தாமதியாமல் மஸ்ஜிதுக்கு வந்துவிடவேண்டும். மஸ்ஜிதுக்கு வெளியில் அனுவசியமாகத் தாமதித்தாலும், மேலே கூறப்பெற்றவை போன்ற இன்றியமையாத காரணங்க ளல்லாதவைகளுக்காக வெளியிற் சென்றாலும், இஃதிகாப் முறிந்துவிடும். ஆத லால், அதை கலாச்செய்வது வாஜிபு. இஃதி காப் இருப்பவர்கள் மஸ்ஜிதிலேயே ஆகாரம் அருந்தவும், தாகசாந்தி செய்யவும், சயனிக் கவும், தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் அவசியமான சாமான்களை விலை பேசிவாங்க வும் விற்கவும் செய்யலாம். ஆனல், அவ்வாறு விலைக்கு வாங்கும் சரக்கையோ, விற்பனை செய்யும் சரக்கையோ, மஸ்ஜிதுக்குக்கொண்டு வரலாகாது. அவ்வாறு செய்வது மக்றூஹு தஹ்ரீமியாகும்.

இஃதிகாபிருக்கும் மஸ்ஜிதில், ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றுவதில்லையாயின் அத் தொழுகைக்காக ஜும்ஆமஸ்ஜிதுக்குப்போக வும், தனக்கு உணவுகொண்டுவந்து கொடுக்க ஆளில்லாதிருந்தால் அதற்காக வீட்டிற்குப் போய் சாப்பிடவும், செய்யலாம் ஆனல்

உணவருந்தியதும் தாமதியாது மஸ்ஜிதுக்கு வந்து விடவேண்டும். இரவிலோ அல்லது பகலிலோ புணர்ச்சி செய்யினும், பெண்களை முத்தமிடினும், அவர்களைத் தீண்ட அதனால் இந்திரியம் ஸ்கலிதமாயினும், இஃதிகாப் முறிந்துவிடும். இவ்விதமான காரியங்களை மறந்து செய்தபோதிலும் இஃதிகாப்முறிந்து போம். பகலில் காமநுகர்ச்சிமுதலிய காரியங்களைச் செய்தால், இஃதிகாபுடன் நோன்பும் முறிந்து விடும். இஃதிகாபிருப்பவன் நன்மையான காரியங்களைப் பேசிக்கொண்டும் குர்ஆன், ஹதீது இவைகளை ஓதிக்கொண்டும் இருக்கவேண்டும். ஆனால், பேசாதிருப்பது நன்மை என நினைத்து, ஒருவருடனும் பேசாமல் மௌனஞ் சாதிப்பது மஹ்றூஹு. கணவரது உத்திரவில்லாமல் பெண்கள் இஃதிகாப் இருப்பது கூடாது. இஃதிகாப் இருக்கும் பெண்கள் ஹைறு நிபாஸ் ஆகியவைகள் இல்லா திருப்பது ஷர்த்து. இஃதிகாப் இருக்கும் பெண்கள் தங்கள் வீட்டில் தொழுகைக்காக பிரத்தியேகமா யிருக்கும் வீட்டு மஸ்ஜிதைத் தவிர, வீட்டிற்குள் வேறு எந்த இடங்களுக்கும் முற்கூறப்பட்ட அவசியமான காரணமில்லாமல் செல்லக்கூடாது.

தராவீஹ் தொழுகை

றமலான்மாதத்தில் இஷாத்தொழுகைக்குப் பின், தராவீஹ் தொழுவது சகல முஸ்லிம்கள்மீதும் சுன்னத்து முஅக்கதாவாகும். இதை இமாம்ஜமாஅத்தாகத் தொழல் சுன்னத்து கிபாயா. ஆதலால்,ஒருசிலர் மஸ்ஜிதில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுதுவிட்டால், இதரர் ஜமாஅத்தாகத் தொழாவிட்டாலும் குற்றமாகாது. ஆனால், இமாம் ஜமாஅத்தாக ஒருவருமே தொழாவிடின், யாவரும் சுன்னத்தைவிட்ட குற்றத்திற்கு ஆளாவர். இதை ஜமாஅத்தாகத் தொழ, மஸ்ஜிதுக்கு மாதர் வரலாகாது. அம்மாதர் தமது மனைகளிலேயே தொழவேண்டும்.

இந்த தராவீஹ், 20 ரக்கஅத்துகளாகும். அவைகளை இரண்டிரண்டு ரக்கஅத்துகளாக, பத்துமுறை தக்பீர்கட்டித் தொழவேண்டும். ஒரு முறை தக்பீர் கட்டுவதிலேயே, இருபது ரக்கஅத்துகளையும் தொழுதால், தராவீஹ் நிறைவேறி விடும். ஆயினும் அவ்வாறு தொழுவது மஹ்றூஹ் (ரத்துல் முஹ்தார்). ஒவ்வொரு நான்கு ரக்கஅத்துகளுக்குப் பின்னும், நான்கு ரக்கஅத்துத் தொழுகையின் நேரம் தாமதித் திருப்பது முஸ்தஹப்பு அதாவது விரும்பத்தக்கது. இஷாத் தொழுகைக்கு முன்னம், தராவீஹ் தொழக்கூடாது. மார்க்க சட்டப்படி முதலில் இஷாவையும், பின்னல் தரா வீஹையும் ஒருவர் தொழுது, அப்புறம், அவர் தொழுத இஷாத் தொழுகையானது நிறைவேறவில்லை எனத் தெரிந்தால், ஷெ இஷாவையும் தராவீஹையும் அவர் திரும்பவும் தொழவேண்டும். ஆனால், ஷெ இஷாத் தொழுகை நிறைவேறவில்லையென்று, கிழக்கு வெளுத்த பின்பு தெரியவந்தால், இஷாவை மாத்திரம் மறுபடியும் தொழவேண்டும்; தராவீஹ் தொழுகையை மறுபடியும் தொழவேண்டியதில்லை. அவ்வாறு திரும்பத் தொழுவது மஹ்றூஹ்.

தராவீஹ் தொழுகையில் ஒருமுறை குர்ஆன் முழுவதையும் ஓதி, கத்தம் முடிப்பது

சுன்னத்து. ஆதலால், தான் வழக்கமாகத் தொழும் மஸ்ஜிதில், குர்ஆன் கத்தம் ஓதித் தொழாவிடில், அவ்வாறு தொழுகை நிறைவேற்றப்படுகிற வேறு மஸ்ஜிதுக்குத் தொழச் செல்லலாம்.

ஜமா அத்து நடந்துகொண்டிருக்கும் பொழுது, ஒருவர் தொழவந்து, ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழுகை இஷாவின் பர்லா அல்லது சுன்னத்தான தராவீஹா என்று நிச்சயமாகத் தெரியாவிட்டால், "இப்பொழுது நடைபெறும் தொழுகை பர்லு தொழுகையாக இருந்தால் இந்த இமாமுடன் சேர்ந்து, பர்லைத் தொழுகின்றேன். தராவீஹ் தொழுகையாயின், இந்த இமாமுடன் சேர்ந்து தராவீஹ் தொழுகின்றேன்" என்று சங்கல்பம் செய்து தக்பீர் கட்டி, அந்த ஜமா அத்துடன் தானும் சேர்ந்து தொழலாம். ஆனால், அத்தொழுகை பர்லான தொழுகையென்று பின்பு தெரியவந்தால், பர்லு நிறைவேறிவிடும். இல்லையேல், பர்லான இஷாவை இரண்டாவது முறை தொழவேண்டும். ஆனால், இஷாவின் பர்லுக்கு முன், தராவீஹ் தொழக்கூடாது என்பதை உத்தேசித்து, இது இஷாவின் பர்லான தொழுகையாக இருந்தால், இமாமைப் பின்பற்றுகிறேன் இல்லையேல், இமாமைப் பின்பற்றவில்லை என்று தாமதித்துவந்தவர் நிய்யத்துச்செய்து அந்த இமாமைப் பின்பற்றித் தொழுதல் கூடாது.

ஒரு மஸ்ஜிதில், தராவீஹ் தொழவைத்த இமாம் அதே இரவில் வேறொரு மஸ்ஜிதில் தராவீஹ் தொழவைப்பது கூடாது. ஆனால், ஒரே இமாம் ஒரு மஸ்ஜிதில் எட்டு ரக்க அத்தும், வேறொரு மஸ்ஜிதில் பன்னிரண்டு ரக்க அத்துமாகத் தொழுகையை நடத்திவைக்கலாம். ஒரு மஸ்ஜிதில் இமாமுடன் தராவீஹ் தொழுதுவிட்டு, அதே இரவில் வேறொரு மஸ்ஜிதில் இமாம் ஜமா அத்துடன் தராவீஹ் தொழுவது குற்றம் அன்று.

ஆனால், வித்று தொழுகையை இரண்டாவது மஸ்ஜிதிலும் தொழக்கூடாது. தராவீஹில் சில ரக்க அத்துகளில் சேரமுடியாமல் பிந்தியவர் அவைகளைத் தனியாகத் தொழுதால், வித்றுவுடைய ஜமா அத்துத் தனக்குக்கிடைக்காது என்று தோன்றின், இமாம் ஜமா அத்துடன் வித்றுத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு, பாக்கி இருக்கும் தராவீஹ் தொழுகையைப் பின்னால் தொழலாம் (ஆலம்கீரீ). றமலான் மாதத்தில் மாத்திரம், வித்றுத் தொழுகையை ஜமா அத்தாகத் தொழலாம். ஆனால், பர்லையும் தராவீஹையும் இமாம் ஜமா அத்தாக இல்லாமல், தனிமையாகத் தொழுதவர் வித்றுத் தொழுகையை மாத்திரம் ஜமா அத்துடன் தொழக்கூடாது (றத்துல் முஹ்தார்).

சத்திய மார்க்க ஊழியம் புரிந்து, நம்மவரான முஸ்லிம்களுக்கு மகிமையூட்ட, நானுவகையிலும் நன்முயற்சி செய்யாநிற்கும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" எனும் சங்கத்தை அன்பர்காள்! ஆதரிக்க முன்வருவீர்களாக!

லைலத்துல்கத்ர்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதைஆரம்பிக்கின்றேன்).

"மாட்சிமையான இரவில் அதை நாம் நிச்சயமாக இறக்கினோம். மேலும், மாட்சிமை யான இரவு இன்னதென்பதை உனக்கு அறிவித்தது எது? மாட்சிமையான (அவ்) இரவானது ஆயிரம் மாதங்களைக் காட்டிலும் மேலானதாகும். அந்த இரவில் மலக்குகளும் றூஹும் தங்களுடைய றப்பின் உத்தரவுப்படி ஒவ்வொரு காரியத்தைக் கொண்டும் இறங்குவார்கள். ஈடேற்றம்; அது வைகறை உதயமாகும் வரை இருக்கிறது". "குர்ஆன்"

சர்வ சக்தனாகிய அல்லாஹு சுபுஹான ஹு வ தஆலா தனது திருமறையில் 97-வது அத்தியாயத்தின் ஆயத்தின்மூலம் மேற்கூறப்பட்ட அவ்வேதம் முதல்முதலாக இறக்கப்பெற்ற இரவைப் பற்றியும் அதன் மகிமையைப் பற்றியும் கூறி இருக்கிறான். இத்தகைய சிறப்பினையுடைய இரவானது றமலான் மாதத்திலேயே இருக்கிறது, என்பதை 2--185வது வசனத்தி லிருந்து தெரிந்துகொள்கிறோம். அல்லாஹு தஆலாவே இந்தஇரவின் மேன்மையைப்பற்றிச் சொல்லுகையில், இது ஆயிரம் மாதங்களைப் பார்க்கிலும் சிறந்தது எனச் செப்பி இருக்கிறான். அதாவது அந்த ஓர் இரவில் நித்திரை யொழித்து வணங்குவதால், ஆயிரம் மாதங்கள் வணங்குவதைப் பார்க்கிலும் மேல் என்பது கருத்தாகும். இந்தச் சிறந்த இரவைப் பலன்படுத்திக்கொள்ள தவசிரேஷ்டர் முன்னிருந்தே தக்க ஏற்பாடு செய்வர். இவ்விரவானது றமலான் மாதத்தில்தான் என்பதைநாம்நன்கு தெரிந்துகொண்டாலும், அது எத்தினத்தைய இரவு என்பது வெளிப்படையாக் கூறப்படவில்லை. ஆதலால் பெரியார்கள் அம்மாதம் முழுவதிலுமே நித்திரையை நீக்கி வணங்குகின்றனர். எனினும், இவ்வாறு செய்வது எல்லாமக்களாலும் இயலாதல்லவா? ஆதலால், அப்பெரியார்களிற் பலர் தங்கள் அனுபவத்திலிருந்து இவ்விரவானது 20-தேதிக்கு மேலுள்ள ஒற்றைப்படையான தேதியில் வருகின்றது எனக்கூறி இருக்கின்றனர். இவ்விரவில் இறைவனின் அருளும் கருணையும் இக் குவலய மாந்தருக்கு விசேஷமாக உண்டாவதால், மனித உணர்ச்சியிலும் அந்த இரவின் நிலைமையானது இதர இரவுகளின் நிலைமையைப் பார்க்கிலும் மாறுபட்டிருக்கிறது. அனுபவமடைந்த பெரியார்கள் அவ்விரவின் விசேஷம் சிலவற்றை விளக்கி இருக்கிறார்கள். அது வருமாறு:—

"அந்த இரவில் இறைவ னடியார்களுக்கு அவனருள் நிரம்ப உண்டாகின்றது. அஃது ஒரு கண்ணியமிக்க புண்ணிய இரவாய்ப் புலப்படுகின்றது. ஆண்டவனது அருள் அரும்பும்போது அடியார்களி னுள்ளத்தில் ஒரு வகை ரம்மியமுண்டாகி குதூகலம் ஏற்படுகிறது. வாயில் ஒருவித இனிய நீர் சுரக்கின்றது. வானத்திலும் ஒரு வகை மந்தமாருதந் தோன்றி, இனிய தென்றல் காற்று வீசுகின்றது. அவ்வேளையில் ஆண்டவனுடைய வணக்கத்தில் ஈடுபட் டிருப்பவர்களுக்கு ஒருவிதமான உற்சாகமும் கிளர்ச்சியும் உண்டாகின்றன. இவ் அண்டத்திலுள்ள கோடானு கோடிப் பொருள்களும் பரிசுத்த நிலையடைந்

திருப்பதாகத் தென்படும். பக்தர்களின் உள்ளத்திலுள்ள எல்லாக் கெட்ட எண்ணங்களும் மாறி அழிந்து போகின்றன.''

இவ்விதமான நிலையை உணர்ந்த இறைவனது நல்லடியார்களின் மனம் ஆர்வங் கொண்டு, தனது மானிடத்தன்மையை மறந்து பரவசமாகி, இறைவனது வணக்கத்தில் ஈடுபட்ட அவர்கள் தங்களுக்கு வேண்டுவனவற்றை விண்ணப்பிக்கின்றனர். இறைவனும் தனது பெருங்கருணையால் அப்பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்ளுகிறான். கிடைப்பதற்கு அருமையான இச்சமயத்தை அடைவதற்காகவே, புண்ணியவான்கள் மாதக் கணக்காகவும், நாட்கணக்காகவும் நாயனைத் துதிக்கின்றனர். அவ்விரவில் தியானத்திலிருப்பவர்களுக்கு உண்டாகக்கூடிய உணர்ச்சிகளில், மேலே கூறப்பட்டது மிகவும் சிறிய ஒரு பாகமேயாகும். இதனுலாகும் பேரின்பத்தை உள்ளது உள்ளபடியே தெரிந்து கொள்ள வேண்டுமாயின், ஒவ்வொருவரும் அதை அனுபவத்தில்தான் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த உணர்ச்சியையும் இன்பத்தையும் சொற்களால் எடுத்துரைக்க இயலாது. இப்படிப்பட்ட அருள் நிலையை அடைய ஒவ்வொருவரும் முயலுதல்வேண்டும். ஆயினும் நமது முயற்சி பயன்பெற அவனருளன்றோ வேண்டும்!

இதற்காகப் பெரியோர்கள் பலவிதமாக வணங்கியிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் அனுபவத்தில் சித்தியடைந்த முறைகளையே கூறி இருக்கின்றனர். சிலர் அவ்விரவு முழுதும், நபில் தொழுகை நிறைவேற்றியிருந்திருக்கின்றனர். சிலர் திக்ரு செய்வதிலேயே ஈடுபட்டிருந் திருக்கின்றனர். சிலர் குர்ஆன் ஓதி வந்திருக்கின்றனர். சிலர், ஸலவாத்து ஓதி இருக்கின்றனர். இவைகளில் எது சிறந்தது, எது தாழ்ந்தது என்று வகுத்துக் கூறமுடியாது. இப்பிரார்த்தனை முறைகளில் எதெதில் யார் யாருக்கு மனஓர்மையும் தெய்வபக்தியும், இன்பமும் அதிகமாக ஏற்படுகின்றனவோ, அதுவே அவர்களுக்குச் சிறந்தது. ஆகவே அருஞ் சிறப்பினையுடைய இரவை நழுவ விடாமல், ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்வது அவசியமாகும். நாம் மேலே கூறிய விபரத்தில் 20க்கு மேலுள்ள ஒற்றைப்படையான தேதியின் இரவெனக் கூறி இருக்கிறோமாயினும், சில பெரியார்கள் அதை 27வ என்று குறிப்பிட்டும் கூறி இருக்கிறார்கள். ஆதலால், 27வ இரவில் மஸ்ஜிதுகளில் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்படுவதும், சிற்றுண்டிகள் வழங்கப்படுவதும், வழக்கமாக இருக்கின்றன. சிலசகோதரர்கள் இந்த இரவை ஆடம்பரங்களால் சிறப்பிக்கிற வேலைகளில் ஈடுபட்டு வெளிப்படையான இன்பத்தை அடைகின்றனர்; ஆனல், அவ்விரவில் ஆண்டவனை வணங்கிப் பேரின்பத்தையடைய வேண்டுமென்ற விஷயத்தை மறந்துவிடுகின்றனர். அத்தகையோர் தங்களுக்குக் கிடைத்த புற இன்பத்துடன் அக இன்பத்தையும் அடைய முயலுவார்களாக. இப்புண்ணிய இரவின் மாண்பை நஞ்சகோதரர்களும் நாமும் அடைய எல்லாம் வல்ல ரஹ்மான் கருணைபுரிவானுக. ஆமீன்.

இஸ்லாம் சமய, சமூக, தேசீய, ராஜீய ஞான ஒளிவீசும் நன்மார்க்கசகாய, 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' எனும் செந்தமிழ் சஞ்சிகையே. அதனை ஆதரித்தல் உங்களது முதற்கடமை.

ஈமான்

“நிச்சயமாக எவர்கள் (அல்லாஹ்வின்மீது உறுதி) ஈமான் கொண்டு, நல்ல காரியங்களைச் செய்தார்களோ அவர்களுக்கு பிர்தௌஸ் (எனும் சுவனபதி) உடைய பூங்காவனங்கள் இறங்குமிடமாக இருக்கின்றன”. (குர்ஆன் 18 அ.)

உலகு அனைத்தும் இறைவன் சிருஷ்டி. உலகிலோ எண்ணிறந்த உயிர்கள் உள. அவ்வுயிர்கள் அனைத்திலும் உயர்ந்தவன் மனிதனே. மனிதனுக்கு அவ்வித அருஞ்சிறப்பு வாய்ந்ததற்குக் காரணம் யாது? ஏனைய உயிர்களிடம் காணப்படாத விசேஷம் ஒன்று மனிதனிடம் அமைந்துளது. அதுவே நுண்ணறிவு அல்லது பகுத்தறிவு என்பதாம்.

அப் பகுத்தறிவை ஒருவன் நல்வழியில் கையாளின், அவனுக்கும் ஏனையோருக்கும் எண்ணிறந்த நன்மை யுண்டாகும். அதனைத் தீயவழியில் செலுத்தினலோ, இறைவனது சிருஷ்டியான ஜீவராசிகளுக்கு ஏற்படும் பொல்லாங்குகள் அனந்தம். ஆதலின், ஆண்டவன் நமக்கு அன்புடன் அளித்துள்ள பகுத்தறிவை நேர்வழியில் செலுத்தவேண்டும்என்பதற்காக அக்கருணை வள்ளலான அல்லாஹு தஆலாவே உலகத்தில் நபிமார்களை யனுப்பி வேதங்கள் மூலமாக, எது சரி, எது தப்பு என்பதை நமக்கு அறிவுறுத்தி யிருக்கிறன்.

இந் நபிமார்கள், மானிடவர்க்கம் தோன்றியது முதல் நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வரை, லக்ஷக்கணக்கானவர்கள் ஆவர். அவர்கள் நமக்குப் புகட்டியுள்ள வேதங்களும் பலப்பலவாம். ஆனல் அவைகளின் நோக்கம் ஒன்றேயாம். காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அனுஷ்டான முறைகளில் மாத்திரம் சிற்சில வேறுபாடுகள் காணப்படும். இவைதாம் உலகத்திலுள்ள மதங்களின் உண்மையான நிலை.

எனினும், இறைவன் ஈந்துள்ள நுண்ணறிவைத் துஷ்பிரயோகம்செய்து, பொதுஜனங்களை ஏமாற்றித் தங்களையும் நபிகளெனக் கூறிய சிலரும் உண்டு. இவர்கள் தங்களது பிரசங்கவன்மையினலும் எழுத்து வன்மையினலும் மக்களை ஏமாற்றத் தலைப்பட்டுவிட்டனர். ஆகையால், அல்லாஹ்வுக்கு உகந்ததும், மனித உற்பத்தி முதல் நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்வரையுள்ள எல்லா நபிகளாலும் போதிக்கப்பட்டதுமான சத்திய இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைக் கொள்கைகளையும், அதன் வழிமுறைகளையும், அவனியிலுள்ளோர்க்கு எடுத்து ஓதுவது அவசியம். எனவே இச் சஞ்சிகையில் அவைகள் தொடர்ச்சியாக எழுதப்படும். அவைகளை நேயர்கள் படித்துணர்ந்து, போலி மதக்கொள்கைகளை நம்பி மோசம் போகாமல் இருப்பார்களாக. ஆமீன்!

நாம் மேலே கூறியதுபோல், இஸ்லாம் மார்க்கத்தில் உறுதி அல்லது நம்பிக்கை என்றும், அனுஷ்டானம் அல்லது வழிமுறை என்றும், இரண்டு பிரிவுகளுண்டு. அவ்விரண்டில் முந்தியதற்கு ஈமான் என்றும், பிந்தியதற்கு இஸ்லாம் என்றும் பெயர். இந்த ஈமானில்தான், கொள்கைகள் யாவும் அடங்கியுள. ஈமானில் ஆறு அம்சங்கள் உண்டு. அவையாவன :—

“ஆமன்து பில்லாஹி, வமலாஇ க தி ஹி, வ கு துபிஹி, வருஸுலிஹி, வல்யவ்மில் ஆகிரி, வல் கத்ரிகைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா வல்பஃதி பஃதல் மௌத்.”

“அல்லாஹ்வைக் கொண்டும், அவனது மலக்குகளைக் கொண்டும், அவனது வேதங்களைக் கொண்டும், அவனது தூதர்களைக்கொண்டும், இறுதி நாளைக்கொண்டும், நன்மை தீமைகளின் விதி அல்லாஹ்வினிடத்தில் இருக்கிறதென்றும், மரணமடைந்தவர்களுக்கு மீண்டும் உயிர் ஊட்டுதலைக் கொண்டும் உறுதி கொண்டேன்,” என்பது இந்த அரபி வாக்கியத்தின் பொருள். இவ் வாக்கியத்தில் காணப்படும் அம்சங்களே இஸ்லாம் மதத்தில் ஈமான் என்று சொல்லப்படும் உறுதிகளாம். இனி இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே விளக்குவாம்.

அல்லாஹ்

அரிய பெரிய நாயகன் அல்லாஹு தஆலாவே; அவனையன்றி வேறு யாரையும் வணங்கக்கூடாது. அவனே வணங்குவதற்கு உரியவன். அவனுக்கு இணை யாரும் இல்லை. அவன் ஏகன்; தனித்தவன், தன்னிலே தானு னவன். அவனுக்கு மாதா, பிதா, மனைவி, மக்கள் யாரும் கிடையாது. அவனுக்கு அவை ஒன்றும் தேவையில்லை. அவன் பிறப்பு இறப்பு அற்றவன். அவனே எல்லா வஸ்துக் களுக்கும் உயிர் ஊட்டுபவன்; ஆதரிப்போ னும், அழிப்போனும் அவனே அவன் முக் காலமும் உணரவல்லவன். அவனுக்கு மறை வானது ஒன்றுமில்லை. அவன் எல்லாம் அறிந் தவன்; சகல தத்துவங்களையு முடையோன்; நாடியபடி யெல்லாம் செய்ய உரிமையுடைய வன். அவனது செயலைப்பற்றிக் கேட்க, யாரு க்கும் அதிகாரமில்லை. அவன் தான் நாடிய தைச் செய்வோன்; வேண்டியதை முடிப் பவன். அவன் கொடுப்பதைத் தடுக்கவோ, அவன் தடுத்ததைக் கொடுக்கவோ, அவன் விதித்ததைமாற்றவோ, எவராலும் இயலாது. அவனே மெய்ப்பொருள் (உஜூது) உடைய வன். அவனது சூக்குமத்துக்கு மெய்ம்மை விதியாகவும், பொய்ம்மை விலக்காகவும் உள. அவனது உண்மையினாலே சர்வமும் இல் லாமையிலிருந்து உண்டாக்கப் பெற்றிருக் கின்றன. அவனே அநாதி, அவனே நித்தி யன்; அழிவு அற்றவன். சகல மேன்மை யும், தூய்மையுமான பரிபூரண லட்சணங்கள் யாவும் அவனுக்கே உரியன. அவன் செய் யும் சகல காரியங்களிலும், குற்றமோ, குறையோ, தப்போ, தவறோ இருக்கவே இருக்காது.

அவன் வேறொன்றின் ஆதரவை நாடி யிருக்கக்கூடிய பண்பும் (அர்லு) அல்லன். வேறொன்றுக்கு ஆதரவாய்த் தனக்கு ஆத ரவு தேவையற்றதுமாகிய அணு (ஜவ்ஹர்) வும் அல்லன்; உடல், அசைதல், ஒன்றித் தல், பிரிதல், ஏறுதல், இறங்குதல், அமை தல், தங்குதல், திரிதல் முதலிய சிருஷ்டிப் பொருள்களுக்குரிய இலக்கணங்களோ பண்பு களோ யாதொன்றும் இல்லாதவன்; இவை ஒன்றும் அவனுக்குத் தேவை இல்லை. பேதா பேதம் இல்லாத பரிசுத்தவான் அவனே!

மக்களைத் தீமையினின்று காக்கவேண் டியே கடவுள் உலகில் அவதரித்தார் என்று பிறமதப் புராணக் கதைகள் புகலும். இந்த சித்தாந்தத்தை இஸ்லாமிய மதம் மறுக்கின் றது. மனித வடிவத்திலோ, பிறபொருளின் உருவத்திலோ, ஆண்டவன் அவதரித்து வரு தல் என்பது இஸ்லாம் மதத்தில் கிடையாது. அவ்விதம் ஆண்டவன் அவதரிக்கவேண்டிய அவசியம் ஒருபோதும் ஏற்படாது என் பதே இஸ்லாத்தின் சிறந்த கொள்கை. அவதாரத்துக்கு அவசியம் உண்டென்று கூறுவோர் கடவுளின் நியதியை அறியாதவர் ஆவர்; ஏனைய சமயத்தினர் சாற்றும் வண் ணம் ஆண்டவன் அவதாரம் எடுப்பினும், அதனால் மனித கோடிகளுக்கு எவ்விதத்தி லும் பயன் ஏற்படாது. இதுவே இஸ்லாம் மதத்தின் திருவாக்காகும்.

மலக்குகள்

மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய நால்வகைப் பொருள்களிலிருந்து மனிதன் முதல் ஏனைய ஜீவராசிகளை இறைவன் சிருஷ் டித்துள்ளான். அவ்விதமே நமது கண்களுக் குப் புலப்படாத, நம்மால் பார்க்க முடியாத அனேக சிருஷ்டிகளையும் ஆண்டவன் உற் பத்தி செய்திருக்கிறான். இத்தகைய சிருஷ்டி களில் மலக்குகள் என ஒரு வகையினர் இருக்கின்றனர். இவர்கள் ஒளியினால் சிருஷ் டிக்கப்பட்டவர்கள் நம்மைப்போல் இவர் களில் ஆண், பெண், அலி யென்ற பாகுபாடு கிடையாது. நமக்கு அவசியமாக ஏற்பட் டுள்ள மலஜல உபாதைகளும் இவர்களுக்கு இல்லை; ஊண் உறக்கமு மில்லை; இச்சையு மில்லை; இவைகளெல்லாம் இல்லாத தூய்மை யாளர்கள். அல்லாஹு தஆலாவின் கட் டளைக்கு அணுவளவும் பிசகில்லாமல் நடப்ப தும், அவனை வணங்குவதுமே அவர்களது முக்கிய வேலைகள். மனித வர்க்கத்தினருக் கும், ஏனைய உயிர்களுக்கும் அவர்களால் அனேக நன்மைகள் உண்டாகின்றன.

அவர்களில் ஜிப்ரயீல் என்பவர் உலகத்தில் தோன்றிய நபிமார்கள் அனைவர்க்கும் அல் லாஹு தஆலாவின் கட்டளைகளையும், உப தேசங்களையும் அறிவித்து வந்தார். இவ்வித மாக அறிவிப்பதற்கு வஹீ என்று பெயர்.

மழை முதலியவைகளை வருஷிக்கச் செய்தல் முதலிய காரியங்களை மீக்காயீல் என்ற மற்றொரு மலக்கு செய்துவருகிறார்.

மரண மடைவோரின் உயிர்களைக் கைப்பற்றும் வேலையை இஸ்ராயீல் என்ற மலக்கு இயற்றி வருகிறார்.

இனி, உலகம் முடிவடையும் காலத்தில் ஸூர் என்னும் குழலை ஊதக்கூடியவருக்கு இஸ்ராபீல் என்று பெயர். மலக்குகளில் இந்நால்வரைத் தவிர இன்னும் எண்ணிறந்தவர், பலப்பல கருமங்களை ஆற்றிவருகின்றனர்.

வேதம்

மானிட வர்க்கத்தினருக்கு நேரான வழியைக் காட்டுவதற்காக, அல்லாஹு தஆலா, அம் மலக்குகள் மூலமாக நபிமார்களுக்கு வெளியாக்கிய திருவாக்குகளே வேதங்கள் எனப்படும். மனிதவர்க்கத்தின் ஆதி உற்பத்தி முதல் இதுவரையில், உலகில் எத்தனையோ நபிமார்கள் தோன்றியுளர். ஆதலால் தான், உலகத்தில் வேதங்களும் பலதோன்றியிருக்கின்றன. அவை, நூறு ஆகமங்களும், தௌராத், சபூர், இன்ஜீல், புர்கான் என்ற 4 வேதங்களுமாம். அவை நபிமார்களுக்கு வெளியாக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளில் புர்கான் என்ற வேதம் எல்லாவற்றிற்கும் இறுதியில் வெளியானது. அந்தந்தக் காலத்திலுள்ள சுயநலமிகள், பணத்தாசையாலோ வேறு ஆசையாலோ அவ்வேதங்களிலுள்ள உண்மைக் கருத்துக்களை மறைத்துத் தத்தம் மனத்துக்குத் தோன்றியவாறு வேதங்களைத் திரித்துக் கூறிவந்தனர். இதனால் வேதங்களும் காலக்கிரமத்தில் மாறுபாடு அடைந்தன. ஆதலால், முன்னுள்ள வேதங்களில் கூறப்பட்டிருந்த உண்மையான தத்துவங்களையும் இதர விஷயங்களையும் சேர்த்து, மனிதவர்க்கத்தினரால் மாற்ற முடியாத விதமாக இறைவன் இறுதி வேதமாகிய குர்ஆன் ஷரீபை அருளி இருக்கிறான்.

இவ்வேதம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 1350 வருஷங்களுக்கு முன் அருளப்பட்ட அதே பிரகாரம் எவ்வித மாறுதலுமின்றி இன்றளவும் இருந்துவருகிறது. இனிமேலும், உலகம் உள்ளவரை அவ்விதமாகவே இருந்து வரும். இவ்வேதம் ஒன்றுதான் மனிதவர்க்கத்தினர் யாவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்றதென்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. தவிர, உலகத்திலுள்ள ஏனைய மதத்தினரில் பலரும் இதை ஒப்புக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நபிமார்கள்

மக்களுக்கு நேரான வழியைக் காட்டுவதற்காக அல்லாஹு தஆலாவே நேரில் அவதாரம் எடுத்து வருவதில்லை. மனிதனுக்கு மனிதனே வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்பது இயற்கைச் சட்டம். இதற்கேற்ப, இறைவன் உலகத்தில் எத்தனையோ நபிமார்களை உற்பத்தி செய்திருக்கிறான். ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்கள் உலகில் தோன்றியிருப்பதாகப் பலநூல்கள் கூறுகின்றன. ஆனால், நமது சத்தியவேதமாகிய திருக்குர்ஆனில் 25 நபிமார்களின் நாமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும், குர்ஆனில் பெயர் குறிப்பிடப்படாத எத்தனையோ நபிகள் இருப்பதாக குர்ஆன் ஷரீபு கூறுகிறது.

தவிரவும், "உலகத்திலுள்ள எல்லா வர்க்கத்தாரிலும், நம்மைப்பற்றி அச்சம் ஊட்டி அறிவிக்கும் எச்சரிக்கையாளரை அனுப்பாமலில்லை" யென்பது இறைவனது திருவாக்காகையால், பெரியவர்கள் கூறிய கணக்கு உண்மையெனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இது எவ்வாறாயினும், இந்த நபிமார்களில் வேதங்களும் ஆகமங்களும் உடையவர்களும், இன்னும் சிலரும் முக்கியமானவர்களே, எனினும் நபிமார்களில் ஒருவரை உயர்த்தியும், மற்றொருவரைத் தாழ்த்தியும் பேசுவது இஸ்லாத்துக்கு ஏற்றது அன்று. எல்லா நபிமார்களும் இறைவனது தூதர்கள்; அவர்களுக்கு அருளப்பட்ட வேதங்கள், ஆகமங்கள் யாவும் உண்மையானவை என்று நம்புவது இஸ்லாம் மதத்தின் முக்கிய சட்டமாகும். இது ஒன்றே இஸ்லாம் மதத்தின் தாராள சிந்தைக்கும் துவேஷமற்ற தன்மைக்கும் தக்க சான்றாகும்.

இவர்களில் ஹஜரத் ஆதம்(அலை)அவர்களே மனிதவர்க்கத்துக்கு முதல் பிதாவும் நபியும் ஆவர். எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்

எல்லா நபிமார்களிலும் கடைசி நபியாவார்கள். இவர்களுக்குப் பின் நபிமார்கள் வரமாட்டார்கள். வரவேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில் உலக சரித்திரத்தை உற்று நோக்கினால், முற்காலத்தில் பல நபிமார்கள் ஏக காலத்தி லிருந்ததாகவும், ஒருவர்பின் ஒருவர் தொடர்ந்து நபியாக வந்ததாகவும் காணலாம். ஆனால், நபிகள் நாயகம் அவர்களுக்குப்பின் 14 நூற்றாண்டுகளாக குர்ஆனில் மாறுபாடுகளும் புரட்டுகளும் இல்லாமலிருப்பது ஒன்றே வேறு வேதம் வேண்டியதில்லை யென்பதையும், நபிகள் இல்லை யென்பதையும், இவர்களே முத்திரையான நபி யென்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிவியா நிற்கும்.

இறுதிநாளும் மரித்தோர் உயிர்த்தலும்

"மஹிமையும் சிறப்பும் வாய்ந்த நாயனது திருமுகத்தைத்தவிர மற்றைய யாவும்அழிந்து போம்" என ஆண்டவன் தனது திருமறையில் கூறியுள்ளான். இத்திருமறையின் அறிவிப்புக்கேற்ப, உலகமும் அதிலுள்ள பொருள்களும் அழியும் நாளொன்று உண்டென்பது நிச்சயம்.

அத்தினத்தன்று, மேலே கூறியதுபோல் இஸ்ராபீல் (அலைஹிஸ்ஸலாம்) என்ற மலக்கு எக்காளம் (ஸூர்) ஊதுவார். உடனே, சகல ஜீவராசிகளும் அழிந்துபோம். பின்பு, மற்றொரு முறை அதே மலக்கால் எக்காளம் ஊதப்படும்; அப்பொழுது சகலமும் உயிர் பெற்றுத் தத்தம் சமாதிக் குழியிலிருந்து கிளம்பும். உடனே இறைவன் ஒவ்வொருவரையும் விசாரணை செய்து அவர்கள் உலகத்தில்செய்த நன்மை தீமைக்குத் தக்கவாறு சுவர்க்கத்திலும், நரகத்திலும் செலுத்துவான். நபிமார்கள் இறைவனது அனுமதிப்படி, தங்கள் தங்கள் உம்மத்துக்களுக்கு, அதாவது தாங்கள் காட்டிய வழிப்படி ஒழுங்காக நடந்தவர்களுக்கு, ஷபாஅத்து அதாவது ஆண்டவனிடம் சிபார்சு செய்து அவர்களை சுவர்க்கம் சேர்ப்பிப்பார்கள். நபிகள் நாயகமவர்கள் தங்கள் உம்மத்துகளுக்கு மாத்திரமின்றி எல்லா மானிடருக்கும் முதலில் ஷபாஅத்துச் செய்வார்கள். இதற்கு 'ஷபாஅத்தே குப்ரா' என்று பெயர். இத்தகைய பெரும்பேறு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குத்தான் உண்டென்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. இந்த ஷபாஅத்து மானிடகோடிகள் யாவருக்கும் பொதுவாகக் கிடைத்தாலும், பின்னர் தனித்தனியே ஒவ்வொரு நபியும் தங்கள் தங்கள் உம்மத்துக்களுக்கு ஷபாஅத்துச் செய்யும் போது, போலிகளை நபியென நம்பிப் பின்பற்றி வழிகெட்டவர்களும், பூதங்களையும் பிசாசுகளையும் கற்களையும் ஆராதனை செய்து இறைவனுக்கு இணைவைத்தவர்களும், ஆதரவற்று நரகத்துக்குச் செல்லுவார்கள்.

ஆகையால்தான், உலகத்தில் நிச்சயமாக நடக்கக் கூடியதும், யாவருக்கும் சந்தேகமின்றித் தெரிந்திருப்பதுமான மரணத்திற்கு முன், ஈமான் கொண்டு நல்ல காரியத்தைச் செய்தவர்கள் மறு உலகில் சொர்க்கானந்தத்தையும், இறைவனது தரிசனத்தையும் பெறுவார்கள். அவ்வாறு, ஈமான் கொள்ளாதவர்கள் மறு உலகில் ஆதரவற்றவர்களாய் நரகத்துக்குச் சென்று, இறைவன் அளித்த சகலசௌகரியங்களுக்குப் பதிலாக, அவனால் மன்னிக்கப்படத்தகாத இணை வைத்தலைச் செய்ததன் பலனாக மீளா நரக வேதனையை அடைவார்கள். ஒருவன் செய்யும் நல்ல காரியமும் பொல்லாத காரியமும் உலகத்திலேயே முற்றுப் பெறுவதால், மரணத்துக்கு முன்பே நல்ல காரியங்களைச் செய்துகொள்ள வேண்டும்; பொல்லாத காரியங்களைச் செய்ததற்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு, அவற்றை அடியுடன் அகற்றிவிட வேண்டுமென இஸ்லாம் மதம் இயம்புகின்றது.

கற்பனை

உலகத்தில் இதற்குமுன் நடந்தன, இப்போது நடப்பன, இனி நடக்க விருப்பனவாகிய அனைத்தும் ஆண்டவனது கட்டளைப்படியே நடப்பவையாம். இன்ன காரியம் இன்ன விதமாகி, இன்ன விதமாக முடியும் என்பதும், ஒவ்வொருவரும் இன்னின்ன காரியத்தைச் செய்வர் என்பதும், ஆரம்பத்திலேயே முடிவாகி விட்டன. மனிதன் செய்யும் நன்மைதீமைகள் கூட நாயனால் விதிக்கப்பட்டவை. அவனது கட்டளைக்கு மாறாக நடப்பது அசாத்தியம். ஆகையால் மேலே சொல்லிய வண்ணம், இறைவனது சித்தப்படியே எல்லாம் நடக்கும். இது முஸ்லிம்களின் நம்பிக்கை.

மானிட வர்க்கத்தினரின் மனக்கவலையை மாற்றுவதற்கும், தனக்கு ஒப்புவமையற்ற தற்பரனை அண்டுவதற்கும், இலக்காக ஏற்பட்ட இந்தக் கொள்கையை உலகத்திலுள்ள பாமரமக்கள் தப்பாக அர்த்தஞ் செய்து அல்லல் அடைகின்றனர். இதை உள்ளபடி உணராததால், நம்மவரில் சிலர் தங்களது சோம்பேறித் தனத்திற்கும், தான்றோன்றியாய்ப் புரியும் செய்கைளுக்கும் இதைக் கருவியாக உபயோகித்து மிகவும் க்ஷீணதிசையிலிருக்கின்றனர். இதைக்கண்ட ஏனையரும் முஸ்லிம்களின் க்ஷீணதிசைக்கும் பிற்போக்குக்கும் இதையே முக்கிய காரணமாகக் கூறி வருகின்றனர். ஆனால், இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலுள்ள முஸ்லிம்களும் இதே கொள்கையை மிகவும் கொண்டிருந்தும், உலகத்திலேயே ஏனைய வகுப்பினர் எவரும் சாதிக்காத அனேக அரிய காரியங்களைச் செய்தனர் என்பதையும், உலக நாகர்க முன்னேற்றத்துக்கு அவர்கள் வழிகாட்டிகளாக இருந்திருக்கின்றனர் என்பதையும், அவர்கள் சிந்தித்துப் பார்ப்பது இல்லை. நம்மவர்களில் சிலர் இதன் உண்மைக் கொள்கைகளை அறியாததால், இதற்கு வெவ்வேறு விதமான வியாக்கியானம் செய்து, விஷயத்தைக் குழப்பியும் வருகின்றனர்.

நாம் இவ்வளவு தூரம் கூறிவந்தவைகளோ இஸ்லாம் மதக்கொள்கைகளைப்பற்றிய சிறு நமூனாவாகும். இவ்விதக் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களை விசுவாசி அதாவது 'மூமின்' என இஸ்லாம் மதம் எடுத்துக்கூறுகின்றது. ஆனால் இதைத் திரிகரண சுத்தியுடன் நம்புவதற்கு அனுஷ்டானத்திலும் செய்துகாட்டுவது அவசியமாகும். அதற்காக அனுஷ்டான முறைகளையும் இஸ்லாம் மதம் விளக்கியுள்ளது.

கல்வியும் பெற்றோர் கடனும்

உலகத்திலுள்ள உயிர்க்கோடிகளின் நிலையை நாம் சற்று நிதானித்துப் பார்த்தால், இவ்வுலகம் தோன்றிய காலமிருந்தே அவை யாவும் ஒரே நிலையில் இருப்பதாக நாம் அறிந்துகொள்வோம். உதாரணமாக பறவை இனங்களில் ஒன்றான குருவியை எடுத்துக் கொள்வோம். அது சுமார் 100 அல்லது 1000 வருஷங்களுக்கு முன்னதாக, எவ்விதம் கூடு கட்டியதோ, எவ்விதமாக வாழ்ந்ததோ, அவ்விதமே இன்றும் இருக்கிறதென்பதையும், அதில் எவ்வித மாறுபாடும் இல்லையென்பதையும், நாம் கண்டுகொள்கிறோம். இவ்விதமே ஏனைய பிராணிகளும் இருப்பது யாவருமறிந்த உண்மை. ஆனால், மனித வர்க்கத்தினரோ அவ்வாறு இல்லாமல் பலப்பல விதமாக மாறுபட்டு முன்னேற்ற மடைந்தும், பிற்போக்கெய்தியும், வந்திருக்கின்றனர் என்பதைச் சரித்திரப் பூர்வமாகவும் பிரத்தியக்ஷமாகவும் நாம் தெரிந்து கொள்ளலாம். முன்னர் இலைகளையும் தழைகளையும் கட்டிக்கொண்டு வனசஞ்சாரம் செய்த மனிதன் இதுகாலை பெரிய பெரிய நகரங்களில் அழகிய மாடமாளிகையும் கூட கோபுரமும் கட்டிக்கொண்டு சேர்ந்து வாழ்கின்றான். முன் ஒருகாலத்தில் மிகச் சிறப்புற்று விளங்கிய ஒரு சமூகத்தவர், பின் ஒருகால்த்தில் பிறரிடம் அடிமையாகித் தொழிலிழந்து தவித்ததாகவும், அதற்குப் பின் சிறிது முன்னேற்ற மடைந்ததாகவும், சரித்திரம் சாக்ஷிகூறும். காக்ஷியிலும் கண்டுகளிக்கின்றோம்.

இங்ஙனம் பலவித நிலைமைக்கு மனிதன் வருவதற்குக் காரணம் யாது? மற்றெல்லாப் பிராணிகளிடமும் இல்லாத விசேஷ சக்தியாகிய நுண்ணிய அறிவு அல்லது பகுத்தறிவு மனிதனிடம் இயற்கையாகவே இருப்பதால் தான், அவன் மேம்பாடு அடைகிறான். அந்த நுண்ணறிவை எவ்வகையினர் அதிகமாக உபயோகித்துக் கொள்கின்றனரோ, அவ்வகையினர் முன்னேற்ற மடைவதும், அவ்வாறு செய்யாதிருப்போர் பிற்போக்கடைவதும் சகஜம். இதுதான் மனித சமூகத்தின் நாகரீக முன்னேற்றத்துக்கு அஸ்திவாரமான காரணம்.

எனினும், அத்தகைய நுண்ணிய அறிவை உபயோகித்துக் கொள்வதற்கான வழிகளை நாம் கண்டுகொள்வதற்கு, நமக்குத் தக்க கல்வி அவசியம். கற்றவர் மற்றவர்களைப் பார்க்கிலும் சிறந்தவர் என்பதை எல்லா வேதங்களும், ஆகமங்களும், சாஸ்திரங்களும் வலியுறுத்திக் கூறுகின்றன சுத்த சத்தியவேத மாகிய திரு குர்ஆனிலும், கற்றவர்களைப் பற்றி "உங்களில் ஈமான் (உறுதி) கொண்டவர்களையும், கல்வியைக் கொடுக்கப்பட்டவர்களையும், அல்லாஹ் (பல) அந்தஸ்துக்களி லுயர்த்துகிறான்" என்றும், "கற்றவரும் கற்காதவரும் சரியாவரோ" என்றும் சிறப்பித்துக் கூறி இருக்கிறான். திருக் குர்ஆனில் அத்தகைய எத்தனையோ திருவசனங்கள் உள. அவைகளை விரிவஞ்சி, இங்குவரையாது விடுத்தனன். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களும், கல்வியையும் கற்றோரையும் பற்றி மிகமிகப் புகழ்ந்திருக்கிறார்கள். கற்றோர்கள் நபிமார்களின் அனந்தரபாத்தியஸ்தர்களாவர் என்றும், கல்வியானது ஷரீபானவனுக்கு இன்னும்அதிகச் சிறப்பைக் கொடுக்கிறது;அடிமைப்பட்டவனை ஆள்பனுகவும் உயர்த்துகிறது, என்றும் நபிகள் நாயகமவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில், கல்வியொன்றுதான் மானிட வர்க்கத்தினரின் முன்னேற்றத்துக்கு முக்கிய சாதனம் என்பதே. தன் மக்கள் மேன்மையாக இருக்கவேண்டுமென்று விரும்பாத பெற்றோர் உலகத்திலேயே இரார். ஆனால், அவ்வாறு அவர்கள் மேன்மை யடையும் வழிகளில் அவர்களை நம் சமூகத்தினர் ஈடுபடுத்துகின்றனரா என நாம் கவனிக்க வேண்டும். சில பெற்றோர்களைத் தவிர ஏனையர் பெரும்பாலும் அவ்வாறு ஈடுபடுத்துவதில்லை என்றே கூறவேண்டும். நஞ் சமூகத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடன்களைச் செய்யாது, அவர்களைத் தங்கள் ஜீவனோபாயத்திற்கு ஏற்ற கருவியாகச் செய்து கொள்ளவே முயலுகின்றனர். இவ்விதம் அவர்கள் தங்கள் கடனைச் செய்யாது, தங்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடன்களை மாத்திரம் அவசரமாக அடைந்துகொள்ள முயன்று, அவர்களைப் பருவகாலத்தில் படிப்பிக்காமல் கூலி வேலைகளிலும் இதர அலுவல்களிலும் ஈடுபடுத்தி விடுவதால், இதுகாலை நம் சமூகத்தினரில் பலர் கல்விகுன்றி, அறிவு மங்கி, இந்தியாவில் மிகவும் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படுகின்றனர்.

நமது பெற்றோர் இன்னுஞ் சிறிது காலம் அவ்விதம் நடந்து வரின் நம், சமூகத்தின் கதி அதோகதி தான். ஆகவே அநாகரீகரை நாகரீகராகவும், துற்குணரைச் சற்குணராகவும், பின்னடைந் திருப்பவரை முன்னேறுவோராகவும், துன்மார்க்கரை நன்மார்க்கராகவும், அஞ்ஞானிகளை நல்ஞானிகளாகவும் செய்ய, இறைவனால் அருளப்பெற்ற மதத்தைப் பின்பற்றுபவர்களாகிய நாம் இதுபோழ்து அம்மதத்தின் நோக்கத்திற்கு மாறாக மிகத்தாழ்ந்த நிலையிலிருப்பதையும், பிற மதத்தினர் நம்முடைய தாழ்ந்த நிலைக்குக் காரணம் நமது மதம் தானெனக் கூறுவதையும், கேட்க எந்த உண்மை முஸ்லிமும் வருந்தாமலிருக்க முடியாது. இவைகளுக்கெல்லாம் காரணம் யாதெனில், நாம் நமது மதக் கட்டளைகளை அசட்டை செய்ததேயாம். ஆதலின், இனியேனும், நம்மனோர் தமது தவறுகளை உணர்ந்து அவற்றைத் திருத்திக்கொள்ள முயலுவார்களாக. இச் சந்தர்ப்பத்தில், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், பெற்றோர் கடனைப் பற்றிக் கூறியுள்ள இரண்டு வாக்கியங்களை ஞாபக மூட்டுகிறேன். அந்த ஹதீதுகளைக் கவனித்தேனும், அவர்கள் நடக்கத் துணிந்து, தங்கள் செல்வச்சிறார்களின் சிறப்புக்கு வழிதேடவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களாயின் எதிர்காலத்தில் நமது சமூகம் அதிதீவிரமாக முன்னேற்றம் அடையுமென்பதில் ஐயமில்லை.

ஒருநாள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடம் ஒருவர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! நல்ல விதமாக நடத்தப்படுவதற்கு அதிக உரிமையுள்ளவர் யார்?" என வினவினர். அதற்கு நாயகமவர்கள், "உங்களுடைய மக்கள், உங்களுடைய மக்கள்," எனப் பதில் கூறினார்கள்.

இந்த ஹதீதை ஹஜ்றத் உமர் பாறூக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகனாராகிய ஹஜ்றத் அப்துல்லாஹ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இந்த ஹதீதுக்கு இப்னுஹஜர் அஸ்கலானி றஹ்மத்துல்லாஹி அலைஹி,

வியாக்கியானம் செய்கையில், பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

“இந்த ஹதீதில் நல்லவிதமாக நடத்துதல் என்பது இன்னதுதான் என விளக்கமாகக் கூறப்படா விட்டாலும், இதற்குப் பொதுவாக ஜனங்களால் என்ன பொருள் கொள்ளப் படுகிறதோ, அதை நாம் நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்மால் நல்ல விதமாக நடத்தப்பெறுவதற்கு நமது மக்களே மிகமிக அருகதையுள்ளவர்கள். நாம் பணக்காரர்களாயிருந்தால், நாம் நமது பிள்ளைகளின் போஷணைக்கும்கல்விப் பயிற்சிக்கும் முழுமனதுடன் வேண்டிய பணத்தைச் செலவு செய்யவேண்டும். நாம் கல்வி யுள்ளவர்களாக இருந்தால் ஆரம்பத்திலிருந்தே நாம் நமது மக்களுக்கு அறிவையும், கல்வியையும் புகட்டவேண்டும். அவர்களின் ஒழுக்கங்களையும் நடத்தைகளையும் சீர்திருத்தவேண்டும். நாம் இக்கடனை உணரவில்லையாயின், நமது பிள்ளைகளின் உரிமையை நாம் அபகரித்தவர்களாவோம். இது சம்பந்தமாக இறைவன் நம்மை விசாரணை செய்வான் என்பது திண்ணம்.”

“பிள்ளைகுட்டி(களைப் போஷிப்பதற்காகவும், கல்வி கற்பித்தல், நற்குண நற்செயல்களைப்போதித்தல் ஆகியவைகளுக்காகவும்) முயற்சி செய்பவன், பகலெல்லாம் நோன்பிருந்து இரவெல்லாம் விழித்திருந்து வணங்கி இறைவனின் பாதையில் ஜிஹாது செய்பவனுக்கு ஒப்பாவான்” என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஜ்றத் அனஸுப்னு மாலிக் றலியல்லாஹு அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

இந்த ஹதீதிலுங்கூட, பிள்ளைகுட்டிகளைப் பரிபாலனஞ் செய்தல், போஷித்தல், கல்வி கற்பித்தல், முதலியவைகள் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அச்சட்ட விதிகள் எல்லாக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றதான பிரயோஜனமுள்ளது என்பதை யாவர் அறியார்?

“பிள்ளை குட்டிகளுக்குத் தாய் தகப்பன் செய்யவேண்டியன அநேகமுண்டு. அவைகளில், அவர்களைப் பரிபாலனஞ் செய்வதற்கு முயலுதல், கல்விபோதித்தல், நன்னடத்தை நல்லொழுக்கத்தைக் கற்பிக்க முயற்சி செய்தல் ஆகிய மூன்றும் குறிப்பிடத் தக்கவை என இமாம் அஹ்மதுப்னுஹன்பல் றஹமத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது ‘தௌலீ ஹுல் பராயில்’’ என்ற நூலில் கூறியிருக்கிறார்கள்.

“பிள்ளைகுட்டிகளுக்குச் செய்யவேண்டிய கடன்களை ஆற்ற முயற்சி செய்பவன் நல்லவனாவான். கியாமத்து நாளில், ஸாலிஹீன்களுடனிருப்பான்” என இமாம் அபூயூஸுப் றஹ்மத்துல்லாஹி அலைஹி எழுதி இருக்கிறார்கள்.

இவைகளைக் கவனித்துப் பார்க்குமிடத்து, நம்முடைய செய்கைகளிலும் கடமைகளிலும் நமது மக்களின் கல்வி, ஒழுக்கம், நன்னடத்தை, ஆகியவைகளைக் கவனிப்பது மிகவும்முக்கியமானது என்றும், இவைகளில் அசிரத்தை காட்டலாகாது என்றும், வெளிப்படையாகத் தெரியவரும்.

நமது மதத்தில் நம்முடைய முன்னேற்றத்திற்கு வேண்டிய விதிவிலக்குகளும் கட்டளைகளும் மலிந்து கிடக்க, நாம் அறியாமையால் அவைகளை அனுசரிக்காமல் விட்டுவிட்டதுடன், தற்காலிகமான அற்பச் சந்தோஷத்தில் ஆழ்ந்துகிடக்கின்றோம். நாம் அறியாமையிலிருப்பதைக் கண்டு இதர சமூகத்தினர் நம்மை நசுக்க இதுதான் சமயம் எனப் பெரு முயற்சி செய்கின்றனர். நாமும் ஏனைய சமூகத்தினருக்குப் பின்னடைந்தவர்கள் அல்லேம் என்பதைக் காண்பிக்க, நமது பின் சந்ததியினரின் கல்வி அபிவிருத்திக்கும் ஒழுக்கத்திற்கும் இப்பொழுதிருந்தே முயலுவோமாக!

அப்கானிஸ்தான சரிதம்

மௌலவி A. R. அப்துர்ரஹீம் சாஹிப் (பாக்கவீ) எழுதியது.

இந்தியாவின் வடமேற்கு எல்லையில் அப்கானிஸ்தானம் என ஒரு முஸ்லிம் தேசம் இருக்கிறது. அதை அமீர் எனும் பட்டம் பெற்ற முஸ்லிம் அரசர்கள் ஆண்டு வந்தனர். முன்னம் அத்தேசமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் மூன்று நான்கு முறை யுத்தம் புரிந்தன. இறுதியாக, சென்ற 1919-ம் வருஷத்தில் அமானுல்லாகான் என்பவர் அத்தேசத்திலே பட்டத்துக்கு வந்தார்; பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் போர் தொடுத்தார். முடிவாக இரு அரசுகளுக்கும் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் பயனாக, அப்கான் அரசாங்கத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இருந்து வந்த தொடர்பு அற்று, உலகத்திலுள்ள இதர தனியரசுகளைப் போல், அப்கானிஸ்தானம் பூரண சுதந்திரமடைந்தது. அதனால் தன்னுடைய முன்னேற்றத்தைத் தானே நேரில் கவனித்துக் கொள்ளக்கூடிய உரிமை அத்தேசத்தினுக்குக் கிட்டியது. அமீருக்கு ஷாஹ் பட்டம் கிடைத்தது

பின்பு, தேச முன்னேற்றத்திற்காக அரசர் அமானுல்லாகான் பல அரிய சீர்திருத்தங்கள் செய்தார்; கல்வி, கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலிய பல துறைகளிலும் அபிவிருத்தி செய்யத் தொடங்கினார். உலகத்திலுள்ள பல அரசாங்கங்களும் அப்கான் தனியரசை ஒப்புக்கொண்டு, அதற்கறிகுறியாகத் தங்களது பிரதிநிதிகளையும் அந் நாட்டுக்கு அனுப்பின. அமீரும் அநேக அரசாங்கங்களுக்குத் தம்முடைய தூதரை அனுப்பினார். பல ராஜ்யங்களுடன் வியாபார உடன்படிக்கை செய்துகொண்டார். முஸ்லிம் அரசாங்கங்களுடன் ராஜீய உடன்படிக்கைகளும் அவர் செய்துகொள்ளலானார். இதனால், உலகத்தில் அவருக்கு விசேஷ செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட்டன. முஸ்லிம்களும் அவரால் பெருமையுற்றனர். எனினும், அவர் 1927-ம் வருஷத்தில் ஐரோப்பாவுக்கு யாத்திரை சென்று 1928ல் திரும்பினார். அநேக அரசாங்கங்கள் அவரை ஆடம்பரமாக வரவேற்று உபசரித்தன. இதுவரையில் கீழ்நாட்டு அசர்களில் எவருக்கும் செய்யாத அவ்வளவு மரியாதையும் உபசாரமும் ஐரோப்பிய தேசங்கள் அப்கான் அரசருக்குச் செய்தன.

அந்நாட்டு நவநாகரீகத்தைக் கண்டு அமானுல்லா மயங்கிவிட்டார். தம் தேசத்திலும் அதைப் புகுத்த விரும்பினார். நவீனமான சீர்திருத்தங்கள் பலவற்றை அவர் அமுலுக்குக் கொண்டு வரலானார். அவைகளில் சில, நமது சுத்தசத்தியதீனுல் இஸ்லாத்தின் கட்டளைக்கு மாறானவை. மத பக்தியில் சிறந்த அப்கானியப் பிரஜைகளும் உலமாக்களும் இதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். தேசத்தில் உள்நாட்டுக் குழப்பம் தோன்றிற்று. நிலைமை மிகவும் கேவலமாக ஆகிவிட்டதால், தனது சகோதரரான இனாயத்துல்லாகானுக்கு அரசுரிமையை அளித்துவிட்டு, அமீர் அமானுல்லாகான் 1929ல்பட்டந் துறந்தார். எனினும், அமானுல்லாகானிடம் கொண்டிருந்த வெறுப்பு காரணமாக இனாயத்துல்லாகானைப் பொதுஜனங்கள் அங்கீகரிக்கவில்லை. ஆதலால், இனாயத்துல்லாவும் ஒன்றிரண்டு தினங்களில் ஓட்டம்பிடிக்க நேர்ந்தது. குழப்பம் ஏற்பட்டால், கொள்ளைக்காரர்களுக்குக் கொண்டாட்டம் தானே. அதற்கேற்ப, ஒரு கொள்ளைக்கூட்டத் தலைவனான பச்சாசக்கோ என்பான், அப்கான் சிம்மாசனத்தைக் கைப்பற்றி, ஹபீபுல்லாகான் என்ற புதுப்பெயருடன் அரசனானான்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே போல். அப்கானியப் பிரஜைகளும் உலமாக்களும் மனம் கலங்கினர். என் செயலாம்; அவர்களது நிதானமில்லாச் செய்கையும் ஆத்திரமுமன்றோ அந்நிலைக்குக் காரணம்? அப்கன் மக்கள் சுமார் 10 மாதகாலம் வரை அக்கொடும்பாவியின் கையில் சிக்கிப் படாத

பாடு பட்டனர். பின்பு, இறைவன் அம்மக்கள்பால் கருணை கொண்டான். பிரான்சு தேசத்திலே பாரிஸ் நகரில் வியாதியால் வருந்திக்கொண்டிருந்த நாதிர் கான் எனும் தேசாபிமானி அந்நாட்டின் நிலையைக் கேள்வியுற்றதும், தனது வியாதியையும் கவனியாமல் தன் தாய் நாட்டுக்கு விரைந்து வந்தார். அவரிடம் செலவுக்கோ பணம் கிடையாது. ஆயினும், அவர் அதுவரை தந்நல மறுப்புடன், தன் தாய் நாட்டிற்குச்செய்த அநேக அரிய ஊழியங்களால் அவருக்கு விசேஷ செல்வாக்கு இருந்தது. நாட்டிலுள்ள வெவ்வேறு வகுப்புப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு ஜிர்காவைக் கூட்டி, யாவருக்கும் இஷ்டமான ஒருவரை அரசராகத் தெரிந்தெடுக்கலாம் என பச்சாசக்கோவை, அவர் வேண்டிக்கொண்டார். அவன் மறுத்தான்; அத்துடன் அவன், நாதிர்கானின் குடும்பத்தினரையும் கைதிசெய்து பாதுகாவலில் வைத்தான்; நாதர்கான் தலையைக்கொண்டு வருபவர்களுக்குப் பரிசு அளிப்பதாகவும் பறைசாற்றினான்.

இதைக்கண்ட அப்கானியர் ஆத்திரங்கொண்டனர்; பச்சாசக்கோவுடன் போர் தொடுத்தால், தங்களாலான உதவியைச் செய்வதாக அவருக்கு அறிவித்தனர். உடனே, அவர் படை திரட்டினார்; பல வகுப்பினரும் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தனர். வியாபாரிகளிற் பலர் பணஉதவி செய்ய முன்வந்தனர். அரசாங்கத்தைக் கைப்பற்றி, யுத்த தளவாடங்களும் இதர சௌகரியங்களும் பெற்றிருந்தான் பச்சா சாக்கோ. அவனை எதிர்த்துப் போராடுவது எளிதாக இருக்கவில்லை. என்றாலும், நாதிர் கான் சிறந்த தளபதியாகவும், யுத்த தந்திர நிபுணராகவும் இருந்ததால், தம்மிடமுள்ள சிறு சேனையையும் சொற்பத் தளவாடங்களையும் கொண்டு,அல்லாஹ்வின் உதவியை நம்பி, அறப்போர் தொடுத்தார். ஆண்டவனது அருளால், போரில் எதிரிகள் புறங்காட்டினர். அவருக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. காபல் நகரிலுள்ள ஆர்க்கோட்டையை முற்றுகையிட்டு, அதைக் கைப்பற்றித் தம் குடும்பத்தினரை விடுவித்தார். தேசமும் அவர் வசமாயிற்று. பச்சாசக்கோ, உயிர் தப்பினால் போதுமென ஓடினான். ஆனால் அவனது துணைவர்கள் பலர் கைதி செய்யப்பட்டு நீதிஸ்தலத்தின் தீர்ப்புப்படி தண்டிக்கப்பட்டனர்; பலர் தூக்கிடப்பட்டனர்; பலர் நாதிர்கானால் மன்னிக்கப்பட்டனர். அப்கானியர் நாதிர்கானை அரசராக இருக்குமாறு வேண்டினர். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கியும், தேசத்தின் நன்மையைக் கருதியும், நாதிர்கான், அப்கான் அரசர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார். பச்சா சக்கோவும் சரண்புகுந்தான். தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் அவன் செய்த கொடுமைகளை அவர் மன்னித்தார்.

ஆனால், தேசத்திற்கும் பொதுஜனங்களுக்கும் அவன் செய்த கொடுமைகளுக்காக அவன் நீதிஸ்தலத்தில் விசாரிக்கப்பட்டான். நியாய சபையார் அவனைக்குற்றவாளி என்று கண்டு தண்டித்தனர். அதற்கிணங்க, அவன் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டான். தேசத்தில் சிற்சில இடங்களிலுள்ள கலகக்காரர்களை அடக்குவதற்காக ஆங்காங்கே போர்வீரர்கள் அனுப்பப்பட்டனர். உட்கலகம் ஒருவாறு ஒடுங்கி நாட்டில் சமாதானம் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது பல தேச அரசாங்கங்களும் அவரை அப்கான் அரசராக ஏற்றுக்கொண்டு, தங்கள் ராஜதூதரைக் காபலுக்கு அனுப்பியும், அனுப்பிக்கொண்டும் இருக்கின்றன. அவரும் பல அரசாங்கங்களுக்கும் தம்முடைய தூதர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார். தேசத்தில் சமாதானம் நிலவவே, அவர் பல சீர்திருத்தங்கள் செய்ய ஆரம்பித்து, அவ்வப்போது பல அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறார். இஸ்லாமிய ஷரீஅத்தின்படியே அரசாங்கத்தை நடத்துவதாக அவர் பொதுஜனங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்விதமே இப்பொழுது ஒரு சீர்திருத்தம் செய்திருக்கிறார். அது பொன்னே போல் போற்றத்தக்கதாகும். அதன் விபரம் வருமாறு:—

“சன்மார்கப் பாதுகாப்பிற்காகவும், அப்கான் தேசநன்மைக்காகவும் காபலில் ஜமியத்துல் உலமா எனும் மார்க்கக் கல்வியுடைய ஆலிம்களைக் கொண்ட மகாசபை ஒன்றை நிறுவப்போவதாகவும், அச்சபையில் கலந்து கொள்வதற்காகப் பற்பல மாகாணங்களிலுள்ள அநேக உலமாக்களுக்கும் அழைப்புக் கடிதம் விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. இதன்படி கந்தஹாரிலிருந்து 3, மஜார்ஷரீபிலிருந்து 2, குத்தன்பதக்ஷான்

ஆகிய இடங்களிலிருந்து 2, காபலிலிருந்து 4, புராக்கிலிருந்து 1, கீழ்மாகாணங்களிலிருந்து 3, தெற்கு மாகாணத்திலிருந்து 2, ஹிராத்திலிருந்து 2, மென்மனுவிலிருந்து 1, ஆக 20 உலமாக்கள் அச்சபைக்குப் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்த உலமாக்களைத் தவிர, றயீஸுல் உலூம் அறபி, காபல் சர்க்கார் பிரதிநிதி, உயர்தர நீதிமன்ற அதிகாரி, பிரதம அரசாங்கப் பிரதிநிதி, ஈதுப்பெரு நாட்களில் தொழவைக்கும் சர்க்கார் கத்திப் ஆகிய இவர்களும் வேறுசில உலமாக்களும் அரசாங்கத்தாரால் நியமனஞ் செய்யப்படுவார்கள்.

"முஸ்லிம் பொதுஜனங்களுக்கு சன்மார்க்க கட்டளைகளை எடுத்துக் கூறுதல்; அவர்களைத் தீமையினின்றும் விலக்குதல்; இதற்காக துண்டுப் பிரசுரங்கள், புஸ்தகங்கள் முதலியன வெளியிடுதல்; நாட்டிலுள்ள உலமாக்களின் கல்வியையும் திறமையையும் பரிசிலனை செய்து அவர்களுக்குத் தகுந்த பதவிகள் அளித்தல், தங்களையும் உலமாக்கள் எனப் பொய்யாகக் கூறித்திரிபவர்களை உண்மையான உலமாக்கள் கூட்டத்திலிருந்து பிரித்தல்; நல்லொழுக்கம், நற்குணம் ஆகியவைகளைப் புகட்டும்படியான நூல்களை இதர பாஷைகளிலிருந்து பாரசிக பாஷையில் மொழிபெயர்த்தல்; இஸ்லாமியப் பத்திரிகை நடத்தல்; தாருத் தர்ஜமா ஏற்படுத்தல்; உள்நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் கிடைக்கும் நூல்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் ஆகியவைகளில் காணப்படும் அரிய விஷயங்களைப் பிரசுரித்தல்; பிறரின் கேள்விகளுக்கும் கண்டனங்களுக்கும் பதில் கூறுதல்; எகிப்து, ஸிரியா, இந்தியா முதலிய இஸ்லாமிய நாடுகளிலுள்ள உலமாக்களுடன் கலந்து ஆலோசனை செய்து சந்தேகங்களை நிவர்த்தி செய்தல்" முதலிய காரியங்கள் அச்சபையின் வேலைகளாகும். இனி ஆப்கானிஸ்தானத்தில் அமலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் விஷயங்கள் ஒவ்வொன்றும் முதல் முதலாக அச்சபையின் அங்கீகாரத்துக்கு வராமல், அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் படாது என்றும், தெரியவருகிறது. இது சம்பந்தமாக அரசர் நாதிர்கான் விடுத்த அறிக்கையின் இறுதியில் பொதுஜனங்களை வேண்டிக்கொண்டிருக்கிறார். அதன் சாரம் வருமாறு:—

"அன்பான பிரஜைகளுக்கு என்னுடைய இந்த எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு பகுதியிலும் உள்ளவர்கள் தங்கள் தங்கள் பகுதியிலுள்ள பக்தியும் பொதுநல நோக்கமும் கொண்ட உலமாக்களை ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு அறிமுகம் செய்துவைக்குமாறு வேண்டுகின்றேன். உலமாக்கள் ஒவ்வொருவரும் இஸ்லாத்துடையவும், அரசாங்கத்தினுடையவும் நன்மைக்கு நல்ல யோசனைகளை எடுத்துக் கூற முன்வரவேண்டுமென அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். தற்கால உலக நிலையையும், முஸ்லிம்களின் நிலையையும், ஜனங்களின் மனப்போக்கையும் நன்குணர்ந்து, மக்களை நேர்வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நன்னோக்கமும், நாட்டை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நல்ல எண்ணமும் உள்ள உலமாக்களை எனக்கு அறிவித்தால், அவர்களை உலமாக்கள் சபைக்கு யான் வரவழைத்து, ஆலோசனை கேட்க முடிவு செய்துள்ளேன்."

அமீர் நாதிர்கான் அவர்களின் மேற்கண்ட அபிப்பிராயம் போற்றத்தக்கது என்பதில் சந்தேகம் உண்டோ? தேசிய, ராஜீய, ஞானமுள்ள உலகமாக்களின் அபிப்பிராயம், முஸ்லிம் அரசாங்க அபிவிருத்திக்கு இன்றியமையாதது என்பதையும், தேசிய ராஜீய ஞானமும், மார்க்க அறிவும் போதியவளவு இல்லாமல் தங்களை மௌலவி என்றும் முல்லாவென்றும் பொய்யாகக் கூறிக்கொண்டு திரிகிற சிலராலேயே தேசத்திற்கும், சமூகத்திற்கும், அரசாங்கத்திற்கும் கெடுதிகள் உண்டாகின்றன என்பதையும் அமீர் அவர்கள் நன்குணர்ந்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். தேசத்திலுள்ள போலிகளையும் உண்மை மௌலவிகளின் கூட்டத்திலிருந்து அகற்றி அவர்களை அடக்கும் பொறுப்பைஉலமாக்கள் சபையிடம் ஒப்படைத்திருத்தல் அவருடைய ராஜதந்திர நிபுணத்துவத்தை அறிவிக்கிறது. இதிலிருந்து அப்கானிஸ்தானத்தில் போலி உலமாக்களின் விஷமமும், குழப்பமும் தலைகாட்டாமலிருப்பதற்கு இடமேற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் மீதோ, அரசர் மீதோ, போலிகள் வீண்பழிசுமத்திப் பொதுஜனங்களைத் தூண்டிவிடுவதும் இதனால் தடைப் படுத்தப் பட்டிருக்கிறது. கையிலொரு காசுமில்லாமல், பரதேசத்திலிருந்த

நாதிர்கான் அவர்களை ஆப்கானிஸ்தானுக்கு வரும்படிசெய்து, அவருக்கு எதிர்பாராத வெற்றிகளை அளித்து அப்கான் சிம்மாசனத்திலிருத்தி, இறைவன் தனக்குச் செய்த நன்றியை மறவாமல் தன்னுடைய பொறுப்பைச் சரிவர நிறைவேற்ற அமீர் நாதிர்கான் நினைத்திருப்பதாகவே மேற்கண்டவைகளால் தெரியவருகிறது. அவருடைய நல்லெண்ணம் நிறைவேறி அப்கானிஸ்தானம் முன்னிலும் பன்மடங்கு அதிகமாக முன்னேற்றமடைந்து, இஸ்லாத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் அளிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

இஸ்லாம் மார்க்கமே இம்மை மறுமை ஈடேற்றந்தரும்.

துருக்கி மாஜி முதல் மந்திரி எழுதியது.

நவீன நாகரீகத்தில் ஈடுபட்டு மயங்கி, இஸ்லாமிய நாகரீகத்தையும், நடையுடைபாவனைகளையும் அலட்சியம் செய்துவரும் தற்கால முஸ்லிம் சகோதரர்கள் இதை ஊன்றிக் கவனிப்பார்களாக.

ஸயீது ஹலீம்பாஷா என்பார் துருக்கிய வாலிபரில் மிகப் பிரக்யாதிபெற்றவர்; முஹமது ஷௌகத் பாஷா அவர்களுக்குப் பின், துருக்கி உதுமானிய அரசாங்கத்தில் முதல் மந்திரியாக இருந்தவர். அவர், பிரஞ்சுப் பத்திரிகையொன்றில் நவீன நாகரீகருக்குப் புத்திமதியாக ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதை ஐனப் பிக்தால் அவர்கள் ஆங்கிலத்திலும், ஸையது ஹாஷிமி அவர்கள் உருதுவிலும் மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்றால், அதன் விசேஷத்தை யாவரும் உணர்ந்துகொள்ளலாம். அக்கட்டுரையின் முக்கிய சாராம்சத்தை மாத்திரம் கீழே வரைந்துள்ளோம்.

"முஸ்லிம் சமூகத்தினர் தூக்கத்திலிருந்து விழித்து எழுவதையும், அன்னியரின் அடிமைவலையத்தைக் கழற்றி எறிந்துவிட விரும்பி இருப்பதையும், எனது வாழ்நாளிலேயே நான் கண்டு உள்ளம் பூரிக்கின்றேன். முஸ்லிம்களுக்கு உணர்ச்சியும், விழிப்பும் உண்டாவதற்குக் காரணம் யாது? சுதந்தரமடைவது தனது கடமையென்றும், சுயேச்சையில்லாமல் உண்மையான முன்னேற்றமும் சந்தோஷமும் ஏற்பட முடியாதென்றும், ஒவ்வொரு முஸ்லிமும் செவ்வனே உணர்ந்ததேயாகும். இவ்வுணர்ச்சி தோன்றினமைக்காக மகிழ்கின்றேன். எனினும் எனது களிப்பைக் குலைக்கும் மற்றொரு விஷயம் என்முன் நிற்கிறது.

படித்த முஸ்லிம்களிற் பெரும்பாலோர், ஐரோப்பியரது பழக்க வழக்கங்களையும், ஆசாரங்களையும் தங்கள் நாட்டில் பரவச் செய்வதில் முனைந்து நிற்கின்றனர். மேல்நாட்டு நவநாகரீகங்களைக் கைக்கொண்டாலல்லது நாம் முன்னேற மார்க்கமில்லையென அப்படித்த வகுப்பினர் கருதுகின்றனர். படித்த முஸ்லிம்களிற் பலர் கொண்டுள்ள இந்த மனப்பான்மை என் உள்ளத்தைப் புண்படுத்துகிறது. ஏனென்றால், இம்மனப்பான்மை காரணமாக, அவர்கள் இன்னும் இஸ்லாத்தின் போதனையைத் தெரிந்து கொள்ளவில்லை என்பது நன்குபுலப்படும்.

ஏக பரம்பொருளாகிய அல்லாஹு ஸுப்ஹானஹுவத ஆலா ஒருவனையே வணங்க வேண்டுமென்று நமக்குப் போதிக்கும் இஸ்லாம் மதம் நமது ஒழுக்கத்திற்கும், நல்வாழ்க்கைக்கும் உரிய திட்டங்களை உரைக்காமலில்லை. என்றாலும், இந்த உண்மையை அவ்வகுப்பார் இன்னும் உணராமலிருப்பதே நவநாகரீகத்தில் மோகங்கொண்டு மயங்கி நிற்கும் அவர்களது மனப்பான்மையை விளக்கப்போதிய சான்றாகும்.

ஒரே நாயனை வணங்கவேண்டுமென்னும் ஏகதெய்வக் கொள்கைதான், இஸ்லாமியத் திட்டங்களுக்கு மூலாதாரம். இதேகொள்கை

தான், இன்னதிட்டப்படி நடக்கவேண்டு மென முஸ்லிம்களுக்கே கட்டளையிட்டிருக்கிறது. முஸ்லிம்களின் நாகரீகமும் அதே கொள்கையால் ஏற்பட்ட சட்ட விதியாகும். இந்த விதிதான் எல்லா முஸ்லிம்களையும் பரிபாலித்து வந்திருக்கிறது. எல்லா மதங்களிலும் இஸ்லாமே மேன்மையும் பரிபூரணமுமானது எனும் எண்ணம் நமது படித்தவர்களுக்கு ஏற்படவில்லை. இஸ்லாம்தான், உண்மை நாகரீகத்தின் பிறப்பிடம் என்பதையும் அவர்கள் உணரவில்லை. இஸ்லாம் இல்லையாயின், மறுமையில் ஈடேற்றம் கிடையாது; அவ்வாறே இம்மையிலும் நாகரீக முன்னேற்றமும் கிடையாது. கிருஸ்தவ மதத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் எவ்விதம் ரோமாபுரி தாயகமாக விருக்கிறதோ, அதுபோல, எல்லா மதங்களின் உயர் நோக்கங்களுக்கும் மக்கா மு அல்லமாவே, தாயகமாக இருக்கிறதென்பதை அக்கனவான்கள் மறந்துவிட்டனர் போலும். இஸ்லாம், கிருஸ்து இவ்விரு மதங்களின் வழியும் நோக்கமும் வெவ்வேறாக இருக்கின்றன.

இவற்றின் கோட்பாடுகள், ஒழுக்கங்கள், வாழ்க்கை முறை விதிகள் ஆகியவற்றிலும், மிகுந்த வித்தியாசம் உண்டு. ஆகவே, இஸ்லாமிய, கிருஸ்தவ மதஸ்தர்களின் மனோபாவத்திலும், வழக்க ஒழுக்கங்களிலும், மிகுந்த வித்தியாசம் காணப்படுகிறது. இத்தகைய வித்தியாசம் ஏற்படுவது தவிர்க்க முடியாததேயாகும்.

முஸ்லிம்களின் நாகரீகமும் முற்போக்கும் மதக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டவை. ஆதலால், அக்கொள்கைகள் ஆரம்ப காலத்திலிருந்து இன்றளவும் ஒரே விதமாகவும், மாற்ற முடியாதனவாகவும் இருக்கின்றன. கிருஸ்தவர்களது நாகரீகமும் முன்னேற்றமும், சமூக, ராஜீய அவசியங்களுக்கு ஏற்றவாறு அவ்வப்போது இயற்றப்படும் சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

முற்றிலும் மாறான அடிப்படைகொண்ட கிருஸ்தவ முறைகளை நமக்கு ஒவ்வுமாறு திருத்தி விடலாமென எண்ணுவது பெருந் தவறாகும். மனிதனது தனி வாழ்க்கைக்கோ, சமூக வாழ்க்கைக்கோ, இவ்விரு மதங்களின் நோக்கங்களையும் பொதுவானதாக ஆக்க முடியாதபடி, அவ்வளவு ஆழ்ந்த அடிப்படையான வித்தியாசம் இவ்விரு மதங்களுக்கும் இடையில் இருக்கிறது.

மேனாட்டு நாகரீகத்தைக் கைக்கொள்வதால், இஸ்லாத்திற்குப் புத்துயிர் கொடுப்பதாகக் கருதும் அவர்களது மனப்போக்கினுக்குக் காரணம் யாது? அந்நியரது ஆதிக்கத்துக்கும், ஆட்சி முறைக்கும் ஆளானதே யல்லாது வேறில்லை. இந்த அந்நிய ஆதிக்க அதிர்ச்சிதான் இவர்களது மனதைப் பேதித்து விட்டது.

இத்தப்பான எண்ணத்தை நம்மவரது மனத்திலிருந்து அகற்றி, சிறந்த ஒழுக்கத்திற்கும் சீரிய வாழ்க்கைக்கும் நாம் கிருஸ்தவரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியதொன்றுமில்லை. ஆனால் கிருஸ்தவர்தான் இஸ்லாத்திலிருந்து பாடங்கற்றுக் கொள்ளவேண்டுமென்றும் நிரூபணம் செய்ய விரும்புகிறேன்.

மகா முக்கியமான இக்கருத்தை ஜனங்களின் மனதில் படியும்படி செய்வதற்கு ஜன சமூக வாழ்க்கையைத் திருத்தவும், உயர்த்தவும் இஸ்லாம் செய்திருக்கும் அரிய வேலைகளை ஜனங்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டவேண்டும். இதற்குரிய ஒரே வழி, முஸ்லிம்கள் தங்களது சுத்த சத்திய மதத்தைச் செவ்வனே கற்று, அதன்படி ஒழுகுதலேயாகுமென எனது நாட்டினருக்கும், மதத்தினருக்கும் இக்கட்டுரை அறிவுறுத்தும் என நம்புகிறேன்.

முஸ்லிம் செய்திகள்

சட்டசபை பகிஷ்காரம்

காங்கிரஸ் தீர்மானத்தை முன்னிட்டு காங்கிரஸ் டிக்கட்டுபெற்றுச் சென்ற சட்டசபைகளின் அங்கத்தினர்களிற் சிலர் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்திருக்கின்றனர்.

பசு அறுப்புத்தடை மசோதா

ஸ்ரீமான் ராஜாரகுநந்தன பிரசாத் அவர்களால் இந்தியா சட்டசபையில் கொண்டுவரப்பட்ட பசு அறுப்புத்தடை மசோதாவின் தீர்மானம் பெரும்பான்மை ஓட்டுகளால் தோல்வியுற்றுத் தள்ளப்பட்டது.

முஸ்லிம் சிறுமியின் சாமர்த்தியம்

திருக் குர்ஆன் ஷரீப் முழுவதையும் மனப்பாடமாக ஓதக்கூடிய நான்கு வயதுப் பெண் குழந்தை ஒன்றை அஜ்மீரிலிருந்து அதன் சுற்றத்தார்கள் ஹைதராபாத் நிஜாம் அவர்களிடம் அழைத்து வந்தார்கள். நவாப் அந்தக் குழந்தையின் சக்திக்கு மெச்சி உபகாரச் சம்பளம் ஏற்படுத்தியிருக்கிறார்.

ஹஜ் யாத்திரை

பம்பாயில் "ஹார்மையின்ஸ் ஸ்டீமர்ஸ் லிமிடெட்" என்ற பெயருடன் முஸ்லிம் கப்பல் கம்பெனி ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து ஹஜ்ஜு யாத்திரை செல்வோருக்குப் பல சௌகரியங்களைத் தேடிக் கொடுப்பதற்காகவே இந்தக் கம்பெனி ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

முஸ்லிம் சர்வ கலாசாலை

டில்லியில், தேசீய முஸ்லிம் சர்வகலாசாலை ஒன்று இருக்கிறது. காலஞ்சென்ற ஹக்கீம் அஜ்மல்கான் அவர்களால் இது ஸ்தாபிக்கப்பட்டது. அவருக்குப்பின் டாக்டர் அன்ஸாரி அதன் அபிவிருத்திக்காகப் பெரிதும் பாடுபடுகிறார். அவரது பெரு முயற்சி காரணமாக, போபால் சமஸ்தான நவாப் அவர்கள் இந்த சர்வ கலாசாலைக்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் நன்கொடை கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். இதுவே அச் சர்வகலாசாலைக்குக் கொடுக்கப்பட்ட நன்கொடைகளில் மிகப் பெருந்தொகையாகும்.

சாபம் பலித்தல்

எகிப்து தேசத்திலுள்ள துதாங்கமன் என்பவரது சமாதியை சமீபத்திலே மேனாட்டினரில் சிலர் கண்டுபிடித்தனர். அதனைக் கண்டுபிடித்துச் சோதிப்போர் மரணமடைவர் என ஒரு வதந்தி உண்டு. அவ்விதம் கண்டு பிடித்தவர்களில் ஒருவரான டாக்டர் ஜோனதன் கார்வர் என்பவர் மோட்டார் விபத்தால் உயிர்துறந்தார். துதாங்கமன் சாபமிட்டிருப்பதாக ஜனங்களிடை உலவும் பரம்பரை வதந்திக்கு அச்செய்தி ஆதாரம் போதும். 8 பேர் ஏற்கனவே இறந்துவிட்டனர். இவர் ஒன்பதாவது பேர்வழி.

நன்கொடை

சென்னை ஷரீப் ஜனாப் வீ. அப்துல் ஹக்கீம் சாகிப் அவர்கள் ஆம்பூருக்கு சமீபத்திலுள்ள உமராபாத் மத்ரஸாவுக்கு 50,000 ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். அவருக்கு வாணியம்பாடி முஸ்லிம் காலேஜில் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில்

தாம் அந்தக் கலாசாலைக்கு மாதம்தோறும் 1,000 ரூபாய் கொடுப்பதாக அவர் வாக்களித்தார். அத்துடன் தம்முடைய ஆயுள்காலத்திலேயே அதை ஒரு முஸ்லிம் சர்வகலாசாலையாக்க உத்தேசித்திருப்பதாகவும், அடுத்த சட்ட சபையில் தாம் அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்ய உத்தேசித்திருப்பதாகவும் கூறினர்.

மாஜி ஷாவின் களியாட்டம்

பாரசிக தேசத்தின் மாஜி அரசர் சமீபத்திலே வியாபாரத்தில் முனைந்தனர். அதில் அவருக்கு அறுநூறு லட்சம் பிராங் லாபம் கிடைத்தது. பிராங் என்பது கிட்டத்தட்ட இரண்டு ரூபாய் ஆகும். உடனே அவர் தனது பழைய நண்பர்களையும் தோழர்களையும் அழைத்து நெடுநாள் களியாட்டத்தில் மூழ்கிக் கிடந்தார். இஷ்டப்படி உண்டு உடுத்துச் சுகித்தார், அதில் அவ்வளவு தொகையும் செலவாகிவிட்டது. இம்மட்டோ? கடனும் சுமந்துவிட்டது. ஆதலின் அவர் தன்னிடமிருந்த நகை யனைத்தையும் விற்று அக் கடனைத் தீர்த்தார். இப்பொழுதோ, பாரிஸ் நகரிலே மருந்துக்கடை வைத்திருக்கிறார் என 'ஹிந்து' பத்திரிகையில் காணப்படுகிறது.

பணம் பத்தும் செய்யும்

பணம் பத்தும்செய்யும் என்பதுபழமொழி. அமானுல்லாகான் தனது பெருஞ் செல்வங்கொண்டு பேரும் புகழும் அடைய முயலுவதாகச் சொல்லப்படுகிறது. அவரது மனைவி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறார். அந்நோய் தீர்ந்ததும், அமானுல்லாகான், பாரிஸ், லண்டன், பெர்லின் ஆகிய மூன்று நகரங்களிலும் ஆடம்பரமான விருந்தொன்று நடத்த எண்ணியிருக்கிறார். விருந்து அளவுகடந்த இராஜ தோரணையில் இருக்குமாம். அந்த ஆடம்பரமும் படாடோபமும் கண்டு, தனக்குப்பெரும் புகழ் கிடைக்கும் என்பதும், அதன் மூலமாக மீண்டும் அப்கான் அரசராக வரலாம் என்பதும், அவரது ஆவல் என்றும் சொல்லப்படுவதாக 'ஹிந்து' பத்திரிகையின் எகிப்திய நிருபர் கூறுகிறார்.

டில்லியில் நிஜாம் அரண்மனை

புது டில்லியில், நிஜாம் அரசருக்காகப் புதிய மாளிகை ஒன்று கட்டப்பட்டுளது. இதன் செலவு 21 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயாகும். இதைக் கட்டிமுடிக்க நான்குவருஷ காலம் பிடித்தது. இறக்கையை விரித்து நிற்கும் ஒரு பறவைபோல் தோற்றுமாறு இக்கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. இம் மாளிகைக்கு வேண்டிய மரசாமான்களுக்காகவும், அலங்காரப் பொருள்களுக்காகவும் ஹைதராபாத் சமஸ்தான வரவு செலவுத் திட்டத்தில் 6,57,450 ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இம்மாளிகையில், 24 வரவேற்பு மண்டபங்களும், 101 படுக்கை யறைகளும், இருக்கின்றன. இவ்வறைகள் எல்லாம் இத்தலி தேசத்து சலவைக் கற்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றன. ஆயினும், நிஜாம் அரசர் தனது பரிவாரங்கள் முழுதுடனும் தங்குவதற்கு அம்மாளிகையில் போதிய இடமில்லையாம்.

லாகூர் மகாநாடுகள்

சென்ற வருஷ இறுதியிலும் சென்றமாத ஆரம்பத்திலும் லாகூர் நகரில் பல மகாநாடுகள் கூடிப் பல தீர்மானங்களைச் செய்தன. அவைகளில் காங்கிரஸ், கிலாபத் மகாநாடுகள் முக்கியமானவை. காங்கிரஸை விட்டு முஸ்லிம்கள் ஒதுங்கியிருந்தும் அதை லக்ஷியம் செய்யாமல் காங்கிரஸில் சில முஸ்லிம்கள் ஒட்டிக்கொண்டிருந்தனர். அவர்கள் காங்கிரஸில் 'தக்க மதிப்பை'ப் பெற்றார்கள் என அதன் போக்கிலிருந்து தெரிய வரு

கிறது. காங்கிரஸ் மகாசபையின் வரவேற்புக் கமிட்டிக்கு டாக்டர் கிச்லு தலைவராயிருந்தும் அவர் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டிக்கோ, மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கோ அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படவில்லையாம். முடிவாக காங்கிரஸ் சபையானது வழக்கம்போல் ஆடம்பரமாகக் கூடி பிளவுகளுடன் கலைந்தது. கிலாபத் கமிட்டிக் கூட்டத்திற்கு ஸர். துல்பிகார் அலிகான் வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்தார். இக் கூட்டத்தில் முஸ்லிம்களிலுள்ள பற்பல கட்சியினரும் கலந்து கொண்டனராம்.

சந்தனக்கூண்டு நிறுத்தப்பட்டது

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த கூத்தாநல்லூர் முஸ்லிம்களில் சிலர் சந்தனக்கூண்டு உற்சவம் நடத்த ஏற்பாடு செய்தனர். அது இஸ்லாம் மார்க்கக் கொள்கைக்கு மாறுனது. ஆதலால், அவ்வூரிலுள்ள மார்க்க பக்தர்கள் அதிகாரிகளிடம் ஓர் ஆட்சேப மனுச் செய்து கொண்டனர். அதன்பயனுக அரசாங்கத்தார் தடை உத்தரவு பிறப்பித்து உற்சவத்தை நிறுத்திவிட்டனர். மனுவின் மேல், விசாரணை நடந்தது. பிரதிவாதிகள் இனிமேல் தாங்கள் எப்பொழுதும் சந்தனக்கூண்டு உற்சவம் நடத்துவதில்லை என அரசாங்கத்தாருக்கு முச்சலிக்கா எழுதிக் கொடுத்ததன் பேரில் அதிகாரிகளும் அவ்வாறே தீர்ப்புச் செய்துவிட்டனர். இவ்விஷயத்தில் ஹாஜி, ஜ. ம. முகம்மது இஸ்மாயில்ராவுத்தர், ஜனுப், க. அ. ஷேக் யூசுப்ராவுத்தர், ஜனுப் அ. கா. மஞ்சூர்சா ராவுத்தர், ஜனுப், ஆ. மு. காதிர் முஹிய்யத்தின் ராவுத்தர், கூத்தாநல்லூர் முஸ்லீம் லீக் சபையினர், சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசி ஆகியவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது.

எகிப்தின் ராஜீய நிலைமை

எகிப்து தேசத்திலே பல ராஜீயக்கட்சிகள் உள. நமது தேசத்தில் இருக்கிற காங்கிரஸ் கட்சியைப் போன்றவப்துகட்சி ஒன்று. ஆங்கிலேயருக்கு எவ்விதத்திலும் கட்டுப்படாமல் பரி பூரண சுயேச்சை அடையவேண்டும் என்பது அக் கட்சியின் நோக்கம். இரண்டாவது மிதவாதக்கட்சி. ஆங்கிலேயருடன் சமரஸமாக இருந்து, படிப்படியாக தேசத்தை முன்னேற்றலாம் என்பது இக்கட்சியின் கொள்கையாம். மூன்றுவது தேசியக் கட்சி எனப்படும். இக் கட்சியோ முன்சொன்ன இரண்டு கட்சிக்கும் நடுநிலைமையான கொள்கை கொண்டது.

வப்து கட்சியே கைமேலானது. தேசத்திலே இதற்குத்தான் செல்வாக்கு அதிகம். எகிப்திய பார்லிமெண்டு சபையில் இக் கட்சியினருக்கே அதிகஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. இதன் தலைவர் முஸ்தபா நஹாஸ் பாட்சா எனப்படுவார். முன்னம் இருந்த ஸக்லூல் பாட்சாவைப்போல் இவரும் தேசாபிமானமும் நற்குணமும் உள்ளவர். இவர் வக்கீலாக இருந்தவர். அப்பால் ஜட்ஜ் பதவியும் வகித்தவர். இவருக்கு வலதுகைபோல் இருப்பவர் முகர்ரம் உபைதுபே. இவர் கிறிஸ்தவர். எனினும் முஸ்லிம்களுக்கு இவரிடம் அதிகம் நம்பிக்கை இருக்கிறதாம்.

இஸ்மாயீல் பே என்பார் ஏழை விவசாயிகளின் கட்சி ஒன்று ஏற்படுத்த எண்ணுகிறார். இக் கட்சியின் நோக்கங்கள் ஆவன (1) யாருக்கும் ஐந்நூறு ஏக்கருக்குமேல் பூசொத்து இருக்கக் கூடாது. (2) அன்னியருக்கு யாரும் பூமியை விற்கக்கூடாது. (3) எகிப்திலே புதிதாக வியாபாரக் கம்பெனி ஏற்படுமாயின், அதன் மூலதனத்தில் நூற்றுக்கு ஐம்பது வீதம் எகிப்தியரின் பணமாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால், அன்னியக் கம்பெனி ஏற்படக் கூடாது (4) கல்வியைஎங்கும்பரப்ப வேண்டும் (5) வாலிபரிலே அனைவருக்கும்

உயர்தரக் கல்வி புகட்டவேண்டும் (6) எகிப்தியரின் மூலதனத்தைக்கொண்டு, தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டும்; (7) பெரிய மிராசுதார்கள் தங்களிடம் வேலைசெய்யும் ஏழைக் குடியானவருக்கு வீடு கட்டித்தர வேண்டும்(8)எகிப்தில் விளையும் உயர்தரமான பருத்தி விளைவை இன்னும் விருத்திசெய்ய வேண்டும் (9) நீல நதியின் நீர்ப்பாசன விஷயத்தில் எகிப்தியருக்கே அதிகாரம்இருத்தல் வேண்டும்.

ஆசிரியர் குறிப்புகள்

நம்மவருக்கு:—அல்லாஹ்வின் பேரருளையும், மகாஜனங்களின் பேராதரவையும் முன்னிட்டு, "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திரிகை மலரின் முதல் இதழ் விரிகின்றது. நாளதுமாதம் மாண்புமிக்க றமலான் மாதமாதலின், சமயமும் நோன்பும் பற்றிய பல கட்டுரைகளை வரைந்து வெளியிட்டுள்ளோம். அடுத்த சஞ்சிகையிலிருந்து, மாதந்தோறும் முஸ்லிம்களின் ராஜீய தேசிய விஷயங்களும் ஆராய்ச்சிகளும் மிகுதியாக வெளிவரும். உதாரணமாக, இந்தியா தேசத்தில் ஆங்காங்கு வசிக்கும் நம்மவரின் நல உரிமைகள், அப்கானிஸ்தானம், அறபி, பாரசீகம், எகிப்து, துருக்கி முதலிய தேசங்களின் பற்பல நிகழ்வுகள், இலங்கை பினங்கு பர்மா இவ்விடங்களில் உள்ள முஸ்லிம்களைக் குறித்த வர்த்தமானங்கள், உலக அற்புதங்கள், முதலியவற்றைச் சேகரித்து வெளியிட எண்ணியுள்ளோம். இன்னும், பத்திரிகையை அலங்கரித்தற்குரிய விஷயங்களை ஆன்ற அறிஞர் எழுதி உதவ முன் வந்திருப்பதையும் நேயர்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம். அரிய பெரிய மார்க்க காவியங்களின் மொழிபெயர்ப்பும் மகிமையான கருத்துக்களும் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கவேண்டும் என்பது நமது கருத்து. சுருங்கச்சொல்லின், பலவகையினருக்கும் பற்பல வகையில் பயன் படுமாறு சஞ்சிகையைச் சிறப்புறச்செய்ய முயற்சி நடந்துவருகிறது. மார்க்க பக்தர் ஆங்காங்கு நிகழும் சமய சம்பந்தமான வர்த்தமானங்களைச் சுருக்கி வரைந்தனுப்பின், நலமாயிருக்கும்.

எழுதுகோலின் வன்மை:—"அவன் அறியாதிருந்தவைகளை எழுதுகோலைக்கொண்டு அறிவித்தான்" என இறைவன் தனது பெருமையைப்பற்றித் திருமறையில் கூறியிருக்கிறான். சகல காரியங்களும் அல்லாஹுதஆலாவினது உதவியாலும் கிருபையாலுமே நடைபெறுகையில், அல்லாஹுதஆலா,மனிதனுக்கு அளித்த இதர பல காரியங்களைக் கூறாமல், தன்னுடைய பெருமையைச் சுட்டிக் காட்டுமிடத்து, மனிதன் அறியாதவைகளை எழுதுகோலைக்கொண்டு கற்பித்தான் என்றால், இவ்வாறு கற்பிப்பதில் ஏதோ மகா விசேஷம் இருப்பதாகவே தோன்றுகிறது. மேலும் எழுதுகோலுக்குள்ள விசேஷப் பெருமையும் அத் திருவசனத்திலிருந்து தெரியவருகிறது. எவ்விதமெனில், எழுதுகோலின் உதவியால்தான், நாம் முற்காலத்தவரின் சரித்திரங்களையும் இதர சாஸ்திரங்களையும் அழியவிடாது காப்பாற்றி வருகிறோம்.

இக்காலத்திய சரித்திர பூர்வமான அனேக விஷயங்களையும் நமது சந்ததியாருக்கு அறிவிக்க வேண்டி, நூல்களையும் புத்தகங்களையும் எழுதி வைக்கிறோம். மேலும், ஓரிடத்தில் பரவியுள்ள ஒரு கலைஞானத்தை அல்லது அற்புதத்தை மற்றோரிடத்திற்கு, இருந்த இடத்திலிருந்தே எழுதி அனுப்புகிறோம். பல கலைகளையும் ஆராய்ந்து, அவற்றிலுள்ள அபூர்வமான அநேக விஷயங்களை ஒருங்கே திரட்டி வைக்கிறோம். எழுத்தாளரின் பூத உடல் அழிந்தாலும் புகழுடம்பு அழியாவண்ணம், நம்முடைய ஆற்றலும் அறிவும் உலகினுக்கு உதவுமாறு எழுதுகோல் துணைபுரிகின்றது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னம் இருந்த மக்களின் அருமையும் பெருமையும் இந்நாளில், இந்தப் பூதலத்திலே பிரகாசித்துக் கொண்டிருப்பதற்கு எழுதுகோலின் உதவியே காரணமாகும்.

ஒருவரின் அல்லது ஒரு சமூகத்தினரின் அருமை பெருமைக்கு எழுதுகோல் உதவியாக இருப்பதுபோலவே, அவர்தம் சிறுமைக்கும் எழுதுகோல் காரணமாக இருப்பதை யாவரும் மறப்பதற்கில்லை. பல்லாயிரக் கணக்கான மானிடகோடிகளின் உள்ளத்தைக் கவர்ந்து, அவர்களை நல்லவழியிலோ பொல்லாத வழியிலோ செலுத்தும் திறமை வாய்ந்த மற்றொன்று பிரசங்க வன்மையாம். பிரசங்கவன்மை, எழுதுகோலின் வன்மை ஆகிய இரண்டினும், எழுதுகோலின் வன்மையே மிகச் சிறந்ததொன்றும். ஏனெனில் எழுதுகோலுடையவன் தான் இருந்த இடத்திலிருந்துகொண்டே ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான ஊர்களிலுள்ள பல்லாயிர மக்களின் மனத்தைத் தன் பக்கம் இழுக்கக் கூடும். பிரசங்கமோ பல மக்களின் மனத்தை ஒரே சமயத்தில் கவரக்கூடுமாயினும், அதே சமயத்தில் பல இடங்களிலுள்ள ஜனங்களின் உள்ளத்தைக் கவரவும், பல வருஷங்கள் வரை அதை நிலைநாட்டவும் முடியாது.

சுருங்கக் கூறுமிடத்து, மதங்கள் தீர்க்கதரிசிகளின் மூலமாக உயிர்ப்பிக்கப்பட்டாலும், உலகம் உள்ளளவும் அதை நிலைத்திருக்கச் செய்வதும், அலங்கோலப்படுத்துவதும் மக்களின் எழுதுகோலின் வன்மைதான். இஃதேபோல், இவ் வுலகத்தைத் தான் எண்ணியவாறு ஆட்டவல்லதும் எழுதுகோலே. உலகத்திலிருக்கும் சகல அரசாங்கங்களும் எழுதுகோலின் வன்மையினாலேயே நிலைத்து அல்லது அழிந்து வருகின்றன. ஆயுத பலத்தால், மனிதனது ஸ்தூல சரீரத்தை அடக்கிக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அவனது சூக்கும உடலாகிய மனோ நிலையைத் தன் வசப்படுத்த ஆயுத பலத்தினால் ஆகாது; எழுதுகோலின் வன்மையினாலோ அது இயலும். இதனால்தான் இங்கிலாந்திலே டௌனிங் தெருவிலுள்ள பத்திராசிரியர்கள் உண்மையில் அரசாங்கத்தை நடத்துகிறார்கள் என்றும், அவர்களது கைப்பொம்மையாகவே அதிகாரவர்க்கத்தினர் இருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இத்துணை அருமையும், பெருமையும், வன்மையும், திண்மையும் பொருந்திய எழுதுகோல், தன்னைக் கைதனில் தாங்கி எழுதுவோனின் சக்திக்கும் திறமைக்கும் தகுந்தவாறே மகிமை பெறும். சுருங்கச் சொல்லின் இவ் வுலகம் க்ஷேமமாக வாழ்வதற்கும், கலகங்களால் மாள்வதற்கும் இதர பல காரியங்களுக்கும் எழுதுகோலே முக்கிய கருவியாக இருக்கின்றது. ஆதலின் எழுதுகோலைத் தாங்கி நிற்கும் எழுத்தாளர், மக்களுள் முக்கியஸ்தானம் பெற்றவர் ஆவார். ஆகவே, எழுதுகோலைத் தாங்கியுள்ள அதிகாரவர்க்கத்தினரும் மதத்தலைவர்களான உலமாக்களும், முப்திகளும் சத்திய நெறியில் நடுநிலை தவறாது

தங்கள் எழுதுகோலை உபயோகித்து உலகி னுக்கு உதவுதல் மிக்க அவசியமாகும்.

மேலே கூறிய வகையினரைப் பார்க்கினும், பத்திரிகை நடத்தும் பொறுப்புள்ள ஆசிரியர்கள் அதிக செல்வாக்கும் பொறுப்பும் உள்ளவர்கள். யாருக்கும் புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும், கீர்த்தியையும் அபகீர்த்தியையும் உண்டாக்கி, உலகமக்களை நன்னெறியிலும் தீய நெறியிலும் நடத்துவதும் ஆசிரியரின் எழுதுகோலில் அமைந்திருக்கிறது. அவர்களின் எழுதுகோல் ஜாதிமத வித்தியாசமின்றி உதயகிரி முதல் அஸ்தமயகிரி வரையுள்ள அகிலத்தாரின் உள்ளத்தை ஆட்கொள்ளவல்லது. உலகத்தை ஆண்டுவரும் பல அரசாங்கத்தினரும் பத்திராதிபர்களின் எழுதுகோல்களுக்கு அஞ்சி நடுங்குகிறார்களானால், ஆசிரியர்களின் எழுதுகோலினுக்குள்ள வல்லமையை மேலும் விளக்கவேண்டுமோ? அங்ஙனம் வல்லமை படைத்த பத்திராதிபர்கள் எழுதுகோலினாலேயே, தங்களுக்கு அபாயத்தையும் கஷ்டத்தையும் உண்டு பண்ணிக் கொள்வதும் உண்டு. ஆதலின், அவர்கள் தங்கள் எழுதுகோலை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும். தற்சமயம் இப்பத்திரிகை தோன்றுவதற்கும் மக்களிடையே பிளவை யுண்டுபண்ணி இருப்பதற்கும் இவ் வெழுதுகோலாளரில் சிலர் தமது பொறுப்பை உணராமல் எழுதுகோலை உபயோகித்ததும் ஒரு காரணமாகும்.

எனவே, எழுதுகோலைத் தமது கரத்தே தாங்குவோர் அதன் பலாபலனை உணர்ந்து மனம்போனபடி எழுதுகோலை அசத்திய வழியில் விடாமல், சத்திய வழியில் உபயோகித்து உலகில் ஒற்றுமையும் உயர்வும், சாந்தியும் நீதியும் நிலைக்குமாறு நினைவுகொண்டு உழைக்க இறைவன் இன்னருள் செய்வானாக.

தாய்மொழியில் சமூகப் பத்திரிகை:—அந்நிய ஆட்சி முறையில், சுதேசமக்களுக்கு நேரும் அசௌகரியமும் துன்பமும் பலவாம். அரசாங்கக் கடிதப் போக்குவரத்தும், தஸ்தாவேஜிகளும் அந்நிய பாஷையில் இருக்கும் பொழுது, சுதேசபாஷை அல்லது தாய்மொழி புறக்கணிக்கப்படுகின்றது. அரசாங்க பாஷையையே அனைவரும் விரும்பிக் கற்கின்றனர். தாய்மொழிமீது பலரும் அபிமானம் கொள்வதில்லை; எனவே, தாய்மொழி தத்தளிக்க நேருகின்றது. இங்கிலையில், நமது தமிழக முஸ்லிம்களின் தாய் மொழியாம் தமிழ்மொழியில் பத்திரிகை நடத்துவது எளிதன்று.

மேலும், நமது வேதபாஷை வேறாகவும், தாய்மொழி வேறாகவும் இருக்கையில், தமிழ் மொழியின் மூலம் மார்க்கத்தைப் போதிப்பதும், சமயக்கருத்துக்களை எடுத்துக் கூறுவதும், மிகக் கஷ்டம். தென்மொழி தேன் மொழியே என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நமது இஸ்லாம் மார்க்கத்திற்குரிய நூல்கள் பலவும் அறபு, உருது, பார்ஸீ முதலிய பாஷைகளிலேயே பெரிதும் உள. அம்மொழிகளின் வழக்கும் போக்கும், தமிழ்மொழியின் வழக்கினுக்கும் போக்கினுக்கும் முற்றிலும் மாறானவை. அன்றியும் அப் பாஷைகள் வலதுபக்கமிருந்து எழுதப்பட, நம் தமிழ் மொழியோ இடதுபக்க மிருந்து எழுதப்படுகின்றது.

ஆதலின் அப்பாஷைகளில் உள்ள கட்டுரைகளையும், கருத்துகளையும் நீதிகளையும் சொல் குற்றம், பொருள் குற்றம் இல்லாமல், தமிழ் மொழியில் பெயர்த்து எழுதல் எளிதில் சாத்தியம் அன்று; அன்றியும் படித்தோர் படியாதார், பாலர், பெரியார், ஆடவர் பெண்டிர் ஆகிய பலரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் மதவிஷயங்களைத் தமிழில் வரைவதும் கடினமான கருமமாகும்.

எனவே, வேதத்தின் சொற்சுவையும் பொருட்சுவையும் குன்றுவண்ணம் தமிழ் மொழியிலே நமது இஸ்லாம்மார்க்க விஷயங்களை நன்கு எழுதக்கூடிய உலமாக்கள் நம்மிலே எத்தனைபேர் உளர்? அத்தகைய உலமாக்களின் தொகை மிகவும் கொஞ்சமே. தமிழ்மொழியில் நன்கு பயின்ற முஸ்லிம்களில் பலர் இருப்பது மெய்தான். என்றாலும் அன்னவரில் மார்க்கஞானமும் ஆராய்ச்சியும் வாய்ந்தோர் ஒரு சிலரே ஆவர். மதவிஷயங்களைத் தமிழில் நன்கு எழுதவல்ல ஒரு சில முஸ்லிம்களிலும் பலர், காலதேச நிலையையும் அரசியல் நிலையையும் சமூக நிலையையும் அவ்வளவாகக் கவனியாமல் அசட்டையாக இருக்கின்றனர். ஆதலால், மார்க்க உண்மைகளைத் தமிழில் வரைந்து விஷயதானம் செய்ய வல்லவர் கிடைப்பது அருமையாம்.

இவை அனைத்தையும் எண்ணிப் பார்த்தால் மத சம்பந்தமான இப்பத்திரிகையை நடத்துவதில் உள்ள சிரமம் எவ்வளவு என்று நன்கு புலப்படும். மத சம்பந்தமான நூல்களோ, தமிழில் அதிகம் இல்லை; பெரும்பாலும் பிற பாஷைகளில் உள்ள நூல்களிலிருந்தே தமிழக முஸ்லிம்களுக்கு ஏற்றவாறு, தமிழ்மொழியில் மார்க்க உண்மைகளையும் நீதிகளையும், விஷயங்களையும் வரைந்தாகவேண்டும். அத்தகைய வேலையின் தன்மையை நேயர்களுக்கு இனிமேலும் விரித்துரைக்க வேண்டுமோ?

ஆதலால், தமிழ்மொழியில் வல்லுநரான மார்க்க மேதாவிகளும் ஆராய்ச்சியாளரும் விஷயதானமீந்து உதவிபுரிய முன்வரின், மிகவும் நலமாயிருக்கும். அங்ஙனமாயின், பிற மதத்தவர்களின் பத்திரிகைகளைப்போல் நம் சமூகப்பத்திரிகையான "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திரிகையும் சொல்நயமும் பொருள் நயமும் பொருந்திய பல கட்டுரைகள் தாங்கி, வளர்ந்தோங்கி, விழுமிய சீரும் சிறப்பும் பெருமிதமாக எய்தி, நம்மவருக்கு எவ்வகையிலும் நன்மை பயக்கும் என்பது திண்ணம்.

முஸ்லிம் சோதரருக்குத் தொண்டு புரியக் கிளம்பியிருக்கும் இப்பத்திரிகைக்கு, அவர்கள் மேன்மேலும் ஊக்கமும் உற்சாகமும் தந்து, ஆதரவு அளிப்பார்களாக.

———

பிறமதப் பத்திரிகைகள்:—நம் இனிய தமிழ் மொழியிலும் பிறமொழிகளிலும் அந்நிய மதத்தினர் நடத்தும் பத்திரிகைகள் அனந்தம். அவை அதிகப் பக்கங்கள் கொண்டு சொற்ப விலையிலும் உள. நமது சமூகத்தினரால் நடத்தப்படும் பத்திரிகைகளோ மிகக் குறைவு; பக்கங்களும் கொஞ்சம்; விலையும் அதிகம். இதற்குக் காரணம் என்ன? நம் சமூகத்தவரில் கல்வி அபிவிருத்தியோ கம்மி; நம்மவரிடம் பத்திரிகாபிமானமும் கொஞ்சமே.

ஓர் ஊரில் அல்லது ஒரு தெருவில் ஒருவருக்குப் பத்திரிகை வருமாயின், அந்த ஊரில் அல்லது தெருவில் உள்ள நண்பர் பலரும் அப்பத்திகையைத் தமது என்று கருதிவிடுவர். தங்களுக்குப் பிரத்தியேகமான பத்திரிகை வேண்டு மென்ற எண்ணம் அவர்களுக்கு இலகுவில் தோன்றுவதில்லை. அன்னவர் வழங்காத கையுடையோர் என்பதாலன்று. அனுவசியமாக அவர்களிற் பலர் எவ்வளவோ வீண்செலவு கூசாமல் செய்வார்கள். சமூகமுன்னேற்றத்தில் அவர்களது சிந்தை செல்லுவது அருமை. "நம் சமூகத்தில் கல்வி பெருகி, கலை பரவி, தொழில் வளர்ந்து பொது ஸ்தாபனங்கள் ஓங்கட்டும்" என்று அன்னவர் இலகுவில் உயர்ந்த நோக்கம் கொள்ளுவதில்லை. சமூக முன்னேற்றத்தில் சிரத்தை இல்லாதிருக்கையில், சமூக அபிவிருத்திக்கு ஆதாரமான பத்திரிகாபிமானம் அவர்களிடம் எங்ஙனம் இருக்கமுடியும்? ஆதலினால்தான், நமது சமூகப் பத்திரிகைகள் பலவும் மின்மினிபோல் தோன்றி மறைகின்

றன; சிலவோ, உயிர் விடும் தறுவாயை விரைவில் எய்துகின்றன.

பிறமதத்தவரில் எவரேனும் ஒருபத்திரிகையை ஆரம்பித்தால், அச்சமயத்தவரிலே படித்த வகுப்பார் பலரும் தாராளமாக விஷயதானஞ் செய்ய முன்வருவர். பத்திரிகை எத்தனை பக்கம் இருப்பினும், அத்தனை பக்கத்துக்கும் வியாசங்கள் வந்து குவிந்துவிடும். ஆகையால் பத்திராதிபர்கள் தலையங்கம் போன்ற சில வியாசங்கள் மாத்திரம் எழுதினால் போதும். பின்பு அப்பத்திராதிபர் சாவதானமாகப் பலவற்றையும் ஆராய்ந்து மணிமணியான விஷயங்களைச் சேகரிப்பர்.

நம்மவரில் வியாசம் எழுதுவோர் வெகு சிலரே. தவிர அன்னவரில் விஷயதானம் செய்ய முன்வருவோரோ இன்னும் சொற்பம். விஷயதானஞ்செய்ய முன்வருவோரிலும் பலர், சரியான கருத்துக்களும் உயர்ந்த நோக்கங்களும் கொண்ட விஷயங்களை எழுதியனுப்ப எண்ணங்கொள்வது அருமை. ஒரு சமயம் அன்னார் அவ்வாறு எண்ணினும், பத்திரிகை வெளியாவதற்கு இரண்டொரு தினங்கள் முன்னதாக அவசரம் அவசரமாக ஒன்றை எழுதி உடனே சஞ்சிகையில் வெளிவந்து விடவேண்டுமென விரும்புவர். அவ்விதம் உடனே பத்திரிகையில் அவ்வியாசம் வெளிவராவிடின் அவர்கள் சினம்பூத்து விஷயதானத்தை நிறுத்திவிட நினைப்பதுண்டு. முஸ்லிம் சமூகபத்திரிகைகளின் பொதுவான நிலைமை ஈதாகும் என்னலாம்.

புறமதப் பத்திரிகாலயத்தார் ஒரு சிலரைக் கொண்டு நடத்தும் காரியத்துக்கு, நம் சமூகப் பத்திரிகாலயத்தாரோ பலரை ஏற்படுத்திப் பத்திரிகைக்குரிய விஷயங்களைத் திரட்ட நேரிடுகிறது. இதனால் பணச் செலவு அதிகமாகும். ஆதலினால்தான், முஸ்லிம் பத்திரிகைகள் அதிக விலையுள்ளனவாக இருக்கின்றன. தவிரவும் புற மதத்தினர் தங்கள் சமூகப் பத்திரிகைகளை ஆதரிப்பதுபோல், நமது சமூகத்தினர் ஆதரிக்க முன்வருவதில்லை. புறசமூகப் பத்திரிகைகளின் சந்தாதாரர் தொகையையும், நம் சமூகப் பத்திரிகைகளின் சந்தாதாரர் தொகையையும் கணக்கிட்டுப் பார்த்தால், நாம் கூறிய உண்மை தெரியவரும்.

முஸ்லிம் பத்திரிகையை ஆதரிக்க வேண்டுமெனக் கூறினால், முஸ்லிம் பத்திரிகையில் விஷயங்கள் இல்லையென்றும், அச்சு நன்றாக இல்லையென்றும், சிலர் சாக்குப் போக்குச் சொல்லுவது சகஜம். இத்தகைய குறைகளை எல்லாம் நீக்குவதற்குப் பிரதானம் பொருளாதாரமே. பொருளாதாரம் சரிவரக் கிடைப்பின், பத்திரிகையில் ஈடுபட்டு உழைப்பவர் உற்சாகங்கொண்டு, அதை மென்மேலும் அபிவிருத்தி செய்ய வகைதேடுவர். சுருங்கச் சொல்லின், எல்லாம் சந்தாதாரர்களின் தொகையைச் சார்ந்துள்ளது. இதனைப் பலரும் நன்குணர்வதில்லை. சந்தாதாரர்கள் ஏராளமாகச் சேர்ந்தால், பத்திரிகையின் சந்தாவை மிகவும் குறைத்து விடலாம்.

இனி, பிறசமயப் பத்திரிகைகளை விலை குறைத்து விற்றுப் பலருக்கும் பயன் அளிப்பதற்காக அச்சமயத்தைச் சார்ந்த கனதனவான்களும் ஜமீன்தாரர்களும் ஏராளமான பணத்தைத் தாராளமாக வருஷா வருஷம் நன்கொடையாகத் தந்து உதவுவதும் உண்டு. அவ்விதமே நம் சமூகத்தவரும் வருஷா வருஷம் நன்கொடை தந்து உதவி, பொது ஜனங்களும் ஏராளமாக சந்தாதாரர்களாகச் சேர்ந்து பத்திரிகையை ஆதரித்தால், "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திரிகை இன்ஷா அல்லா எத்துறையிலும் விரைவில் தலை சிறக்கும் என்பது திண்ணம்.

மஃரிபத்துல் ஔக்காத்

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதயம் முதலிவைகளை பின்பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இதிற்கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியவை. சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் $69\frac{1}{2}$ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் கூட்டியும், நேர் கிழக்கில் உள்ளவர்கள் $69\frac{1}{2}$ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும், கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். சென்னை நகரின் நேரத்தையேதான், ஒவ்வொரு ஊரிலுமுள்ள தபால் தந்தி ஆபீஸ்களிலும், ரெயில்வே ஸ்டேஷன்களிலுமுள்ள கடியாரங்கள் குறிப்பிடுவதால், அந்த நேரப்படியே கணக்கிட்டுக்கொள்க.

பின்பக்கத்தில் குறிக்கப்பட்ட கணக்குப்படியுள்ள நேரங்களில், அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும், சுபுஹுவையும், சூரியோதயத்தையும் 5 நிமிஷம் முந்தியும், பேணுதலுக்காக அனுஷ்டிக்கவும்.

சென்னைக்கு நேர்கிழக்கிலும் மேற்கிலும் உள்ள ஊர்களுக்குத்தான், நேரத்தில் இந்த வித்தியாசம் ஏற்படும். நேர் தெற்கிலோ வடக்கிலோ உள்ள ஊர்கள் எவ்வளவு தூரத்திலிருப்பினும், எவ்வித வித்தியாசமும் கிடையாது. ஆனால் சென்னைக்குத் தென்மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளிலுள்ள ஊர்வாசிகள் மேற்கூறிய முறைப்படி கணக்கிடக்கூடாது. சென்னைக்கும் இத்திசைகளிலுள்ள ஊர்களுக்குமுள்ள மொத்த தூரம் எவ்வளவோ, அந்த வீதாசாரப்படி நேரம் வித்தியாசப்படாது. நேர்வடக்கிலும் தெற்கிலுமுள்ள ஊர்களுக்கு நேரம் வித்தியாசப்படாதென்று கூறியிருக்கிறோமல்லவா ? அதன்படியே சென்னையிலிருந்து நேர்தெற்காகவும் வடக்காகவும் ஒரு கோடு கிழித்தால் அக்கோட்டிலிருந்து அந்தந்த ஊர்கள் எவ்வளவுதூரம் நேர் கிழக்கிலும் மேற்கிலும் இருக்கின்றனவோ, அதற்கேற்றவாறே நேரம், முந்தியும் பிந்தியும் இருக்கும். உதாரணமாக, திருநெல்வேலி நகரம் சென்னையிலிருந்து 450 மைல் தூரம் தென்மேற்கிலிருக்கிறது. ஆனால் அது, சென்னையிலிருந்து நேர்கோடு இழுத்தால், அதற்கு 180 மைல்தூரம்தான் மேற்கே ஒதுங்கியிருக்கும். அவ்வாறே, இலங்கையிலுள்ள திருக்கோணமலை என்னும் ஊர் சென்னைக்குத் தென்கிழக்கில் 450 மைல் தூரத்திலிருந்தாலும், சரிநேராக 178 மைல் தூரம்தான் தென்கிழக்கே ஒதுங்கி இருக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள சில முக்கியமான ஊர்கள் இந்தக் கணக்குப்படி ஒதுங்கி நிற்கும் தூரத்தையும், அவ்வூரார் சென்னை நேரத்துடன் கூட்டிக்கொள்ள வேண்டிய நிமிஷங்களையும் பின்பக்கத்தில் குறிப்பிடுகிறோம். அதில் குறிப்பிடப்படாத ஊரார் தங்கள் ஊர் அதில் குறிப்பிடப்பட்ட இன்ன ஊருக்கு சமீபத்தில் இருக்கிறது என்றும், அந்த ஊரிலிருந்து எவ்வளவுதூரம் கிழக்கு அல்லது மேற்கில் ஒதுங்கியிருக்கிறதென்றும் கவனித்து, அதற்கேற்றவாறே தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.

மஃரிபத்துல் ஒளக்காத் (நேரங்களின் விபரம்).

றமலான் மீ	1௳ 6	7௳ 14	15௳ 21	22௳ 29	30.
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
ஸூப்ஹூஸாதிக் (மெய் வெள்ளை)	5—22	5—22	5—20	5—18	6—16
சூரியோதயம்	6—41	6—40	6—37	6—34	6—31
ஸவால்	12—24	12—25	12—24	12—24	12—28
சூரியாஸ்தமனம்	6—8	6—11	6—12	6—14	6—16

முக்கிய பட்டணங்கள்

ஊர்		மைல்	நீ	ஊர்		மைல்	நீ
விழுப்புரம்	...	56	$3\frac{1}{2}$	தாராபுரம்	...	193	$11\frac{1}{4}$
திருவண்ணாமலை	...	69	4	பெங்களூர்	...	187	$10\frac{3}{4}$
கொழும்பு	...	25	$1\frac{1}{2}$	கோயமுத்தூர்	...	241	14
இராமேசுவரம்	...	70	4	காஞ்சிபுரம்	...	43	$2\frac{1}{2}$
பட்டுக்கோட்டை	...	67	4	வேலூர்	...	81	$4\frac{1}{2}$
மன்னார்குடி	...	35	2	ஆறகாடு	...	81	$4\frac{1}{2}$
நாகபட்டணம்	...	31	2	தூத்துக்குடி	...	147	$8\frac{1}{2}$
தஞ்சாவூர்	...	80	4	ராமநாதபுரம்	...	103	6
சீர்காழி	...	39	2	புதுக்கோட்டை	...	201	12
சிதம்பரம்	...	42	2	திருச்சினாப்பள்ளி	...	111	$6\frac{1}{2}$
பரங்கிப்பேட்டை	...	37	2	சேலம்	...	144	$8\frac{1}{2}$
கூடலூர்	...	37	2	தர்மபுரி	...	147	$8\frac{1}{2}$
செங்கல்பட்டு	...	22	1	மேட்டுப்பாளையம்	...	236	14
வாணியம்பாடி	...	126	7	உதகமண்டலம்	...	248	$14\frac{1}{2}$
திருநெல்வேலி	...	180	$10\frac{1}{2}$	மதுரை	...	150	$8\frac{1}{2}$
திண்டுக்கல்	...	162	$9\frac{1}{2}$	சிவகங்கை	...	124	$7\frac{1}{2}$

Printed at the Kesari Printing Works, & Publisted by Moulvi A. R. Abdur Rahim Sahab, Manager, Hifazath-ul-Islam. 48, Angappa Naick St., G.T., Madras.